
கலை வளர்த்த

# இந்தியப் பெரியார்கள்

போஸ் ★ ரே ★ இராமானுஜம்



புலவர் மயிலை சிவ. முத்து

உமாதேவன் கம்பெனி
சென்னை

48

கலை வளர்த்த

# இந்தியப் பெரியார்கள்

*(Approved by the Text-Book Committee, Madras, for* class use. *Vide Page 2, Part I and Page 3, Part II of the Supplement to Fort St. George Gazette Part I-B dated 19-11-1946*

புலவர்

**மயிலை. சிவ. முத்து**

தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி,

சென்னை

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS

உமாதேவன் கம்பெனி

16, செம்புதாஸ் தெரு, சென்னை 1

பதிப்புரிமை] 1948 [விலை அணு 12

First Impression 1946
Reprint 1947
" 1948

# குறிப்பு

அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகள் நம் நாட்டிலே இதுகாறும் போதிய அளவு வெளிவரவில்லை. வெளிவந்துலவும் சிற்சில வரலாறுகளுள், மாணவ மாணவிகளின் தகுதிக்கேற்ப எழுதப் பெற்றவை மிகச் சிலவேயாகும். 'கலை வளர்த்த இந்தியப் பெரியார்கள்' என்னும் பெயருடன் வெளிவரும் இச்சிறு நூல், இக்கால மாணவ மாணவிகள் அறிவு வளர்ச்சியும் உள்ளக் கிளர்ச்சியும் கொண்டு, தாங்களும் அப்பெரியார்கள் போல் முன்னேற்றமுற விழைதல் வேண்டும் என்னும் நோக்கத்தோடு எழுதப்பெற்றது என்பதை இந்நூலினை ஒரு முறை புரட்டிப் பார்க்கும் அறிஞர்கள் எளிதில் உணர்ந்து கொள்ளக் கூடும். அன்பர் பலரின் ஆதரவு வேண்டப்படுகிறது.

இந்நூல் வெளிவருவதற்கு இன்றியமையாச் செய்திகள் பலவும் உள்ளம் உவந்து உதவிய அறிஞர் பலர்க்கும் எமது நன்றி உரியதாகுக.

மயிலை. சிவ. முத்து.

58780

The Jupiter Press Ltd., Madras—for O. H. MS. 391.—2-48.

# பொருளடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஸர் ஜகதீச சந்திர போஸ் | ... | 1 |
| 2. | ஸர் பி. ஸி. 'ராய்' | ... | 35 |
| 3. | ஸ்ரீநிவாச இராமானுஜனர் | ... | 69 |



ஸர் ஜகதீச சந்திர போஸ்

# கலை வளர்த்த
# இந்தியப் பெரியார்கள்

## மாணவர்க்கு முன்னுரை

செந்தமிழ் நாட்டுச் செல்வர்களே,

நீங்கள் எவ்விதம் வாழ விரும்புகிறீர்கள்? சிறிது எண்ணிப் பாருங்கள். நீங்கள் பேரும் புகழும் பெற்றுப் பெருமையுடன் வாழ விரும்புகிறீர்களா? உங்கள் புகைப்படம் பலர் இல்லங்களிலும் அழகு பெற்று ஒளிரவேண்டுமா? உங்கள் வாழ்க்கை வரலாறு பெரிய புத்தகமாக என்றும் நிலைத்திருக்க வேண்டுமா? உங்கள் உருவச்சிலைகளும் ஓவியப்படங் களும் பொது மண்டபங்களிலும் பிற இடங்களிலும் சிறந்து திகழவேண்டுமா? உங்களால் உங்கள் குடும் பத்துக்கும், உங்கள் நாட்டுக்கும் பெருமை உண்டாக வேண்டுமா? இத்தகைய சிறப்புக்கள் பலவும் உங் களுக்கு உண்மையில் கிடைக்குமானல் நீங்கள் அவை களை மிகவும் ஆவலோடு வரவேற்பீர்கள் அல்லவா?

மாணவ மாணவிகளே,

நீங்கள் எல்லோரும் இத்தகைய சிறப்புக்களை அடையலாம். உங்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ் வொரு வகையிலும் அறிவும் ஆற்றலும் உண்டு. இவ் வுலகிலே சிறப்புற்ற பெரியார்களெல்லாரும் முதலில் உங்களைப்போல் இருந்தவர்களே. அவர்கள் தங்கள் உழைப்பினலும் ஊக்கத்தாலும் பிறகு பேரும் புகழும் பெற்ருர்கள். அத்தகைய பெரியார்களின் சரிதங் களை நீங்கள் ஆழ்ந்து படியுங்கள். அவர்களின் இளம் பருவ வாழ்க்கைகளை உங்கள் வாழ்க்கை நிலையோடு

ஒப்பிட்டுப் பாருங்கள். அவர்கள் பழக்க வழக்கங்களில் உங்கள் இயல்புக்குத் தக்கவைகளை உணர்ந்து இன்றே கடைப்பிடியுங்கள். நீங்களும் அவர்களைப் போல் பேரும் புகழும் பெற்றுச் சிறந்து வாழலாம்.

---

# 1. ஸர் ஜகதீச சந்திர போஸ்

## 1. துவக்கம்

குழந்தைகளே, முன் பக்கத்துக்கு எதிரிலுள்ள படத்தினைக் கூர்ந்து நோக்குங்கள். இது ஜகதீச சந்திர போஸ் என்னும் பெரியாரின் உருவப்படம். இவர்தம் தோற்றப் பொலிவும், பரந்த முகமும், அகன்ற நெற்றியும், அழகிய கண்களும் மற்றும் உள்ள பிற நலன்களும் என்ன தெரிவிக்கின்றன? இவர் எதனையும் கூர்ந்து நோக்கி ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றல் வாய்ந்தவர்; தாம் எண்ணியவற்றை முயன்று முடிக்கும் துணிவு பெரிதும் பெற்றவர் என நமக்குத் தெரிவிக்கின்றன அல்லவா?

இப்பெரியார் விஞ்ஞானக் கலையில் வல்லுநர். அக்கலைகளைக் கற்றலில் மட்டும் அன்று; பலப்பல புதிய உண்மைகளைக் கண்டறிதலிலும் வல்லுநர். இவரால் நம் இந்தியாவுக்கே ஒரு புதிய பெருமை கிடைத்துளது. பல புதுமைகளைக் கண்டறிதலில் இந்தியர் பிறநாட்டு அறிஞர்கட்குச் சிறிதும் இளைத்தவர் அல்லர் என்பதை இவர் விஞ்ஞான உலகிற்கு மெய்ப்பித்துக் காட்டியுள்ளார். இவரது அறிவினையும் ஆற்றலினையும் கண்ட அறிஞர் பலரும் இவரைப் பெரிதும் வியந்து போற்றினர். அரசாங்கத்தினர் இவருக்குப் பல பட்டங்கள் அளித்தனர். இவரைப் பல்வேறு நாட்டினரும் வரவேற்று உபசரித்தனர்.

சிறுவர் சிறுமியர்களே, இப் பெரியாரின் வரலாற்றை நீங்கள் அறிதற்குப் பெரிதும் அவாவுறுகிறீர்கள் அல்லவா? இவர்தம் வரலாறு படிப்பதற்கு

மிகவும் இன்பமாகவே இருக்கும். இவர்தம் தீர வீரச் செயல்கள் பலவும் ஒரு நவீனக் கட்டுக் கதைபோல் நம் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும். இவர்தம் வாழ்க்கை வரலாறு வருமாறு :

## 2. ஜகதீசரின் பிறப்பு வளர்ப்பு

வங்காள மாகாணத்திலே உள்ள விக்ரம்பூர் என்னும் சிற்றூரே நம் பெரியார் ஜகதீச சந்திரரின் பிறப்பிடமாகும் அவர் அங்கே 1858-ஆம் ஆண்டு நவம்பர் 30-ஆம் நாளில் பிறந்தார். அவர் வளர்ந்த இடம் பரித்பூர் என்பது. அவர் தந்தையாரான பகவன் சந்திரபோஸ் அவ்வூரிலே உதவி நீதியாளராக வேலை பார்த்து வந்தார்.

ஜகதீசர் சிறுவராக இருந்தபோது குறும்பு செய்வதிலும் விளையாடுவதிலும் பெரிதும் விருப்புடையவராய் இருந்தார். ஜகதீசரின் பாட்டியார் நாள்தோறும் களிமண்ணால் சிவலிங்கம் செய்து வணங்குவது வழக்கம். கடவுள் வணக்கம் முடிந்தவுடன் ஜகதீசர் அந்தக் களிமண்ணை வைத்துக்கொண்டு விளையாடுவார். ஒரு நாள் பாட்டியார் நெடுநேரம் பூசை செய்துகொண்டிருந்தார். பூசை முடியும் வரையில் பொறுமையோடிருக்க நம் ஜகதீசரால் இயலவில்லை. பாட்டியார் தம் கண்களை மூடிக்கொண்டு கடவுளைத் தொழும் சமயம் பார்த்து ஜகதீசர் அந்தச் சிவலிங்கத்தைத் தூக்கிக்கொண்டு ஓடிப்போய்விட்டார். பிறகு பாட்டியார் கண்திறந்து பார்த்தார். சிவலிங்கம் இல்லாமை கண்டு திடுக்கிட்டார். வெளியே வந்து பார்த்தபோது உண்மை தெரியவந்தது. ஜகதீசர் அதைப் பல்வேறு விளையாட்டுப் பொருள்களாகச் செய்து கொண்டிருந்ததைக் கண்டு பாட்டியார் பெரிதும் வருந்தினார்.

ஜகதீசர் தம் இளமைப் பருவத்திலேயே எதையும் கூர்ந்து நோக்கி ஆழ்ந்து சிந்திக்கும் குணமுடைய

வராய் இருந்தார். அதனால் அவருக்கு அடிக்கடி பல ஐயப்பாடுகள் தோன்றும். ஜகதீசர் ஒவ்வொரு நாளும் இரவில் உறங்கச் செல்வதற்குமுன் தமக்குள்ள சந்தேகங்களை யெல்லாம் தம் தந்தையாரிடம் கேட்டுத் தெளிந்த பின்னரே படுக்கைக்குச் செல்வது வழக்கம். அவர் தந்தையாரும அக் கேள்விகட்குப் பொறுமையோடு விடையளிப்பார். ஜகதீசர் சில சமயங்களில் மேலும்மேலும் கேள்வி கேட்டவண்ணம் இருப்பார். அப்போது அவர் பாட்டியார் “ஜகதீஸ், கேட்டவை போதும்; போய்ப் படுத்து உறங்கு,” என்பார். அவ் விதம் கூறியும் அவர் சில சமயங்களில் கேள்வி கேட்க ஆரம்பித்து விடுவார். அப்போது அவர் பாட்டியார் “அடே பயலே, நீ போய்ப் படுத்து உறங்கப் போகிறாயா இல்லையா,” என்று சொல்லிக்கொண்டே ஒரு நீண்ட கழியுடன் விரைந்து வந்து அவரை அடிக்க வருபவர்போல் அச்சுறுத்துவார். இதனால் நம் ஜகதீசருக்குக் கேள்வி கேட்டுத் தெரிந்துகொள்வதில் எவ்வளவு ஆவல் இருந்தது என்பது தெரியவருகின்றது.

## 3. தாய்மொழிப் பள்ளி

ஜகதீசரின் ஐந்தாம் வயது துவக்கத்திலேயே அவர் தந்தையார் அவரை அங்குள்ள ஒரு கிராமப் பள்ளியில் சேர்த்தார். அங்கே பெரும்பாலும் எல்லாப் பாடங்களும் தாய்மொழியிலேயே கற்பிக்கப்படும். செல்வந்தர்கள் தங்கள் குழந்தைகளை அங்கே அனுப்பாமல் ஆங்கிலமொழிப் பள்ளிக்கே அனுப்புவார்கள். கிராமப் பள்ளியில் ஏழைக் குழந்தைகளே பெரும்பாலும் படிப்பார்கள். பகவன் சந்திரர் போதிய பொருள் உள்ளவராய் இருந்தும் தம் மைந்தரைத் தாய்மொழிப் பள்ளிக்கே அனுப்பினார். முதலில் தாய்மொழியை நன்றாகக் கற்றுக்கொண்டால் பிறகு பிறமொழிகள் எளிதில் வரும் என்பது அவர் எண்ணம்.

ஜகதீசரைப் பள்ளிக்கு அழைத்துச் செல்ல அவர் தந்தையார் ஒரு வேலையாளை அமர்த்தியிருந்தனர். அவன் கள்ளக் கூட்டத்தைச் சார்ந்தவன்; நெடுங் காலம் சிறையிலிருந்து அப்போதுதான் மீண்டு வந்த வன். சிறையிலிருந்து மீண்டது முதல் அவன் நற் குணமுடையவனாக மாறிவிட்டான். இதனை நன்கு உணர்ந்தே அவர் தந்தையார் அவனை வேலையாளாக அமர்த்தினார்.

ஜகதீசரைப் பள்ளிக்குத் தூக்கிச் செல்லும் போது அவ்வேலையாள் தன் தீரவீரச் செயல்களையெல் லாம் அவருக்கு விரிவாக எடுத்துக் கூறுவான். ஜக தீசரின் பிற்காலத் தீரச் செயல்களுக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

அவ்விளம் பருவத்திலேயே ஜகதீசருக்கு அவர் தந்தையார் ஒரு மட்டக் குதிரையை வாங்கித் தந்திருந் தார். அதனால் ஜகதீசர் அப்பருவத்திலேயே குதிரைச் சவாரி செய்யவும் பயின்றிருந்தார்.

அவ்வூரில் உள்ளோர் ஒரு நாள் குதிரைப் பந்தய ஓட்டம் ஏற்படுத்தியிருந்தனர். அப்பந்தய ஓட்டத் தைப் பார்ப்பதற்கு ஜகதீசரும் தம் குதிரையின்மீது ஏறிச் சென்றார். ஆங்குக் குழுமியிருந்தோருட் சிலர் அவரைக் கண்டதும் "ஜகதீஸ், நீயும் உன் குதிரை யைப் பந்தயத்திற்கு ஓட்டுகிறாயா?" என்று விளை யாட்டாகக் கேட்டனர். மிகவும் இள வயதுள்ள ஜகதீசர் தம்மை அவர்கள் உண்மையாகவே வினவுவ தாக எண்ணி அதற்குச் சம்மதித்து அந்தப் பந்தயக் குதிரைகளோடு தம் குதிரையையும் தட்டிவிட்டனர். பந்தயக் குதிரையின் பண்புகள் சிறிதும் இல்லாத அக் குதிரையும் நாலுகால் பாய்ச்சலோடு மற்றக் குதிரை களுக்குப் பின்னால் ஓடத் துவங்கியது. அன்று அவர் அப் பந்தயத்தில் வெற்றி பெறவில்லை எனினும், அவரது துணிவினைக் குறித்து அங்கிருந்தவர்கள் பல ரும் அவரைப் பாராட்டினர்.

ஜகதீசர் கல்வி கற்ற பள்ளியின் ஆசிரியர் பிள்ளைகள் விளையாடுவதைச் சிறிதும் விரும்பாதவர். அதற்காக அவர் காலை மாலை வேளைகளிலும் விடுமுறை நாட்களிலும் அடிக்கடி பல இடங்களைச் சுற்றிப் பார்வையிட்டுக் கொண்டே வருவார்.

நம் ஜகதீசருக்குக் "கிரிக்கெட்" என்னும் கோல் பந்து விளையாட்டில் பெரிதும் விருப்பம். அதற்காக அவர் தம் ஆசிரியர் வர இயலாத ஒரு தனியிடத்தைத் தேடி அறிந்து அங்கே நான்கு புறத்திலும் நான்கு சிறுவர்களைக் காவல் போட்டுவிட்டார். எதிர்பாராத வகையில் அங்கும் அவ்வாசிரியர் வர நேர்ந்தால் உடனே தங்கள் பந்து கழி முதலியவைகளை மணலில் புதைத்துவிட்டு மூலைக்கு ஒருவராகச் சென்று பதுங்கிக் கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் முன்னெச்சரிக்கையாகச் செய்து வைத்திருந்தார். ஜகதீசர் விளையாட்டிலும் தம் நுண்ணறிவைக் காட்டியது நன்கு கவனிக்கத் தக்கது.

## 4. ஜகதீசர் பெற்ற படிப்பினை

ஒன்பதாவது வயது வரையில் ஜகதீசர் அப்பள்ளியில் கல்வி கற்றார். ஆனால் அந்த நான்கு ஆண்டுகளும் அவருக்கு எவ்விதம் கழிந்தன? விளையாட்டிலும் வீண் பொழுது போக்கிலுமே அவர் தம் காலத்தைக் கழித்தனர் என்று நீங்கள் எண்ணி விடாதீர்கள். அவர் அங்கே பல அரிய நூல்கள், பாரதம் இராமாயணம் முதலிய இதிகாசங்கள், மற்றும் பல பெரியார்களின் சரிதங்கள் முதலியவைகளை அவ்வாசிரியர் சொல்ல அவைகளைக் கூர்ந்து கேட்டனர்.

பாரதமும் இராமாயணமும் நம் ஜகதீசரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. இவ்விரண்டு கதைகளிலும் பாரதக் கதையே அவருக்கு மிகுதியும் விருப்பம். கர்ணனின் குண நலன்களையும் அவன் அடைந்த

பல துன்பங்களையும் நம் ஜகதீசர் பெரியோரான பின்னரும் நினைந்து பார்த்து வியந்து கொண்டாடுவர்.

கர்ணனே தன் தாய் தந்தையர் இன்னரென்று அறியப் பெறாத ஓர் அனாதைக் குழந்தை. அவனைக் கண்டெடுத்து வளர்த்து வந்தவனே ஓர் தேர்ப் பாகன். அவ்விதம் இருந்தும், அவன் தன் திறமையாலும், ஊக்க மிகுதியாலும் மன்னர்க்கு உரிய வித்தைகளை யெல்லாம் குறைவறக் கற்றுச் சிறந்து விளங்கினான். வில் வித்தையிலோ தனக்கு ஒப்பாரும் மிக்காரும இலர் எனத் திகழ்ந்தான். அரிய குண நலன்கள் யாவும அவனிடம் குடிகொண்டிருந்தன. கொடையிலே அவன் வள்ளல்; சொன்ன சொல் தவறாத செம்மல்; நன்றியறிதலில் தலைசிறந்தவன். இத்துணை நலன்கள் இருந்தும் ஒரு வளர்ப்பு மகன் என்னும் காரணத்தால் அவன் தன் தகுதிக்கு ஏற்ற நிலையினை அடையப் பெறாதவனாய்ப் பல துன்பங்களையும் உற்று முடிவில் போர்க்களத்தே இறந்தான். இதனை நம் ஜகதீசர் அந்த இள வயதிலேயே எண்ணிப் பார்த்து உள்ளம் உருகினார். தோல்வியிலும் வெற்றி உண்டு எனப் புகழ்ந்தார்.

## 5. ஆங்கிலப் பள்ளிப் பயிற்சி

ஜகதீசர் தாய்மொழிப் பள்ளியில் படித்து முடிந்ததும், அவர் தந்தை அவரைக் கல்கத்தாவில் உள்ள ஓர் ஆங்கிலப் பள்ளியில் மூன்று திங்கள் விட்டு வைத்தார். அவ்விதம் அவர் அங்கே நம் ஜகதீசரை விட்டு வைத்ததன் நோக்கம் ஆங்கில மொழிப் பயிற்சி ஒரு சிறிதேனும் பெறுதற்குப் போலும். பிறகு அவர் தந்தையார் அவரை செயின்ட் சேவியர் பள்ளியில் சேர்த்தார்.

இப்பள்ளியில் உள்ள மாணவர்களுள் பெரும்பாலார் ஆங்கிலேயப் பிள்ளைகளாகவே இருந்தார்கள். ஆதலின் அம் மாணவர்கள் ஆங்கில மொழியி

லேயே ஒருவரோடொருவர் உரையாடலாயினர். ஜக தீசருக்கு அப்போது அவர்களோடு ஆங்கில மொழியில் பேசுதற்கு வேண்டிய அவ்வளவு ஆங்கிலமொழிப் பயிற்சி இன்மையால் அச்சிறுவர்களோடு பெரிதும் கலந்து உறவாடுதற்கு அவரால் இயலவில்லை. ஆதலால் அவர் பெரும்பாலும் தனிமையாகவே இருந்து காலங் கழிக்க விரும்பினார். அவர் நாய் பூனை முதலிய பிராணிகளை வாங்கி வளர்த்து அவைகளோடும் சிறிது பொழுது போக்குவார்.

ஜகதீசர் தங்கியிருந்த இடத்துக்கு அருகே ஒரு சிறு தோட்டம் இருந்தது. அத்தோட்டத்தில் சிறு செடிகளை வைத்து வளர்ப்பதிலும் அவைகட்குத் தண்ணீர் பாய்ச்சுவதிலும் நம் ஜகதீசர் தம் ஓய்வுக் காலத்தைச் செலவழிக்கலாயினர். பிற்காலத்தில் அவர் மரஞ்செடி வகைகளை ஆராய்ச்சி செய்ய நேர்ந்தபோது, இந்தப் பழக்கம் அவருக்குச் சிறிதே னும் துணை புரிந்திருக்கலாம்.

## 6. ஜகதீசர் புரிந்த மற்போர்

உயர்நிலைப்பள்ளியை அடைந்த சிறிது காலத் திற்குள் நம் ஜகதீசர் யாது காரணம் பற்றியோ மற் போர் புரிய வேண்டியவரானார். போர் தொடங்குதற் குரிய இடமும் காலமும் குறிக்கப்பட்டன. ஜகதீசரை எதிர்த்தவன் அவரினும் வயதில் மூத்தவன். அன்றி யும் மற்போர் புரிதலிலும் பழக்கமுடையவன். மற் போர் இன்னதென்றே அறியவராத ஜகதீசர் அவனி டம் எவ்விதம் போர் புரிந்து வெற்றி பெறுவர்!

குறித்த காலத்தில் போர் துவங்கியது. அந்தப் பெரிய மாணவன் நம் ஜகதீசரைப் பன்முறை மூக் கின்மீதும் கண்களின்மீதும் தாக்கினான். ஜகதீசர் அந்த மாணவனிடம் நன்றாக மொத்துண்டு தோல்வி யுறுவார் எனவே அங்குக் குழுமியிருந்த மாணவர்கள் நிச்சயித்தார்கள். அந்த மாணவன் விட்ட குத்துக்

களைவிட ஆங்கே குழுமியிருந்த பிற மாணவர்களின் ஆரவாரமே நம் ஜகதீசருக்குப் பெரிதும் மானக்கேட்டினை விளைவித்தது. மானமே உயிர் எனக் கருதும் ஜகதீசர் இம் மானக்கேட்டினை எவ்விதம் ஏற்று வீடு திரும்புவார்! ஜகதீசர் அப்போது தம் உயிரினைத் துரும்பென மதித்தார். அவருக்கு உடனே என்றும் இல்லாத வல்லமையும் தீரமும் எவ்விதமோ வந்து விட்டன. தாம் பெற்ற குத்துக்களால் மயங்கிக் கீழே விழும் நிலையில் இருந்த நம் ஜகதீசர் பெரிதும் ஆவேசம் கொண்டவர் போல் வீறிட்டுக் கிளம்பி அந்த மாணவன்மீது புலிபோல் பாய்ந்து அவனை நையப் புடைத்தனர்.

எதிர்பாராத வகையில் திடுமெனத் தாக்குண்ட அந்த மாணவன் மூர்ச்சையடைந்து கீழே விழுந்து மறுபடியும் எழுந்து நிற்கவும் இயலாதவனாய்த் தரையில் கிடந்தான். அங்கே குழுமியிருந்த மாணவர்கள் நம் ஜகதீசரின் வீரத்தையும் தீரத்தையும் கண்டு வியப்புற்றனர். அன்றுமுதல் அங்குள்ள மாணவர்களுக்கெல்லாம் நம் ஜகதீசரிடம் ஒரு வகையில் மதிப்பும் மற்றொரு வகையில் அச்சமும் இருந்து வந்தன. இந்தச் சம்பவம் நிகழ்ந்த பின்னரும் ஜகதீசர் தனியே இருந்து காலம் கழித்தலையே பெரிதும் விரும்பினர்.

## 7. செயற்கரிய செயல்

உயர்நிலைப்பள்ளியில் படிக்கும்போதே நம் ஜகதீசர் ஏதேனும் செயற்கரிய செயலினைச் செய்தல் வேண்டும் என அடிக்கடி எண்ணுவார். ஆண்மையும் வீரமும் ஓர் இளைஞனுக்கு இன்றியமையாதன என்பதும் அவர் எண்ணம். ஆதலின் மிக்க ஆண்மையோடு கூடிய ஒரு வீரச் செயலைப் புரிய அவர் உள்ளம் பெரிதும் அவாவியிருந்தது.

அவரது பதினைந்தாம் வயதில் ஒருநாள் நம் ஜகதீசர் ஒரு குதிரையின்மீது ஏறிக்கொண்டு தம்

ஊருக்குப் புறத்தேயுள்ள இடங்களைச் சுற்றிப் பார்த்த வண்ணம் சென்றார். அவர் ஆற்றின் பக்கமாக வரும்போது அந்த ஆறு வெள்ளப் பெருக்குடன் வேகமாய் ஓடுதலைக் கண்டார். ‘மணலை அறுத்துக் கொண்டு வேகமாய் ஓடும். இந்த வெள்ளப் பெருக்கில் இவ்வாற்றைக் கடந்து மறுகரைக்குச் செல்வதும் ஓர் அரிய செயலே’ என அவர் எண்ணினார்.

அவ்விதம் எண்ணிய உடனே நம் ஜகதீசர் தம் குதிரையை அவ்வாற்றின் குறுக்கே செலுத்தி அதனைக் கடக்க முயன்றார். அந்தக் குதிரையும் நீரின் வேகத்தைப் பொருட்படுத்தாமல் தன் தலைவர் கட்டளைப்படியே நீரில் இறங்கிச் செல்லலாயிற்று. சிறிது தூரம் சென்றதும் அக்குதிரையின் கால்கள் நீர்ச் சுழியில் சிக்கிக்கொள்ள, மேலும் செல்ல இயலாமல் அக்குதிரை நீரில் சாய்ந்து விழுந்தது. அப்போது ஜகதீசர் அவ்வெள்ளத்தில் ஆழ்ந்து குதிரையின் கீழ் அகப்பட்டுக் கொண்டார்.

மேலும் சிறிது நேரம் அவர் அவ்விதமே சிக்கிக் கிடந்தால் அவர் உயிருக்கே இறுதி நேர்ந்திருக்கும். நல்ல காலம்! அவர் அந் நிலையிலிருந்து எங்ஙனமோ மீண்டு நீருக்கு மேலே எழும்பி நீந்திக் கரையை அடைந்தார். மணலில் புதையுண்டு விழுந்து கிடந்த குதிரையும் எவ்விதமோ முயன்று கரையை அடைந்தது.

அன்று முதல் அந்தக் குதிரை எவரையும் தன் முதுகின்மேல் ஏறவிடவில்லையாம். ஜகதீசரின் தந்தையாகிய பகவன் சந்திரராலும் அக்குதிரையின் மேல் ஏறிச் சவாரி செய்ய இயலாமற் போயிற்று. அன்று முதல் அது தன் கொட்டகையிலேயே இருந்து ஓய்வு பெற்று வந்தது.

இதனைப் படிக்கும் மாணவருள் எவரும் இத்தகைய ஆபத்தான செயல்களைச் செயற்கரிய செயல்

கள் என்று எண்ணித் துணிந்து துன்புறமாட்டார்கள் அல்லவா?

## 8. கல்லூரிக் கல்வி

செயின்ட் சேவியர் பள்ளியில் ஜகதீசர் பதினாறு வயது வரையில் படித்து உயர்நிலைக் கல்வியை முடித்தார். பிறகு அவர் கல்லூரிப் படிப்பை அவாவினார். அவர் படித்த கல்லூரியும் செயின்ட் சேவியர் என்னும் பெயர் கொண்டதே. அந்தக் கல்லூரியில் அவர் பூதநூலைப் (Physics) பாடமாகக் கொண்டு கற்கலாயினர்.

நம் ஜகதீசர் அந்தக் கல்லூரி வகுப்பிலும் படிப்பதோடு நிற்கவில்லை. அவருக்கு அந்த வகுப்புக்களில் படிக்கும்போது காட்டில் சென்று வேட்டையாடுதலில் பெரிதும் விருப்பம் உண்டாயிற்று.

வங்காளத்திலே காடுகள் பல உள. அங்கே புலி சிறுத்தை முதலிய கொடிய விலங்குகளும் உண்டு. ஆங்கிலேயர்கள் அக்காடுகளில் சென்று அடிக்கடி வேட்டையாடுவார்கள், அவர்கள் அவ்விலங்குகளைக் கொன்ற வரலாறுகளும் அடிக்கடி பத்திரிகைகளில் புகைப்படங்களுடன் வெளிவரும். செயற்கருஞ் செயல்களில் பெரிதும் விருப்பம் வாய்ந்த நம் ஜகதீசருக்கு இவ்வெண்ணம் அவர் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும்போதே இருந்தது.

ஜகதீசருக்குத் துணையாக இருப்பதற்கு வயது சென்ற இரஜபுத்திரப் போர்வீரன் ஒருவன் கிடைத்தான். துப்பாக்கியால் குறிபார்த்துச் சுடும் நுட்பங்களை யெல்லாம் அந்தப் போர்வீரன் நம் ஜகதீசருக்குக் காண்பித்திருந்தான். ஆதலால் அவர் காட்டில் சென்று வேட்டையாட விழைந்தனர்.

பத்தொன்பதாவது வயதில் நம் ஜகதீச சந்திரர் பி. ஏ. பட்டம் பெறுதற்குரிய நான்காவது வகுப்பில்

படித்து வந்தார். அப்போது அவர் தமக்குக் கிடைத்த ஒரு விடுமுறையில் வங்காள மாகாணத்தில் உள்ள சிறந்த காடுகளில் ஒன்றினில் வேட்டையாடத் துவங்கினார்.

காட்டு விலங்குகளை வேட்டையாடுவோர் பெரும்பாலும் ஒருநாள் அல்லது இரண்டு நாட்கள் அந்தக் காட்டிலேயே தங்கி அந்தக் கொடிய விலங்குகளுக்காகக் காத்திருந்து வேட்டையாடி மீள்வர். நம் ஜகதீசரோ அந்தக் காடுகளிலே சுமார் முப்பது நாட்கள் வரையில்கூடக் காத்திருந்து வேட்டையாடினாராம். இதிலிருந்து அவர்தம் உடல் வளம், ஊக்க மிகுதி, உள்ள அமைதி, ஆண்மை, அஞ்சாமை முதலிய சிறந்த இயல்புகளை நீங்கள் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

## 9. வீர ஜகதீசர்

ஜகதீச சந்திரரின் தந்தையாராகிய பகவன் சந்திர போஸ் நாட்டு முன்னேற்றத்திலும் கருத்துடையவராய் இருந்தனர். அதன் காரணமாக அவர் உழவு, கைத்தொழில், வாணிபம் முதலிய துறைகளிலும் பெரிதும் பொருட் செலவு புரிந்து வந்தார். அஸ்ஸாம் மாகாணத்திலே தேயிலைத் தோட்டம் வைத்தால் நல்ல பலன் கிடைக்கும் என்று எண்ணி அங்கே நிலம் வாங்கி அதற்கு ஆவன புரிந்து வந்தார். ஆதலால் அந்த மாகாணத்திற்கு நம் ஜகதீசர் செல்லுதல் உண்டு.

அஸ்ஸாமிலே குறுநில மன்னர் (ஜமீன்தாரர்) ஒருவர் வாழ்ந்துவந்தார். அவருக்கு வேட்டையாடுதலில் மிகுதியும் விருப்பம். இதன் காரணமாக நம் ஜகதீசருக்கும் அவருக்கும் இடையே நட்பு உண்டாயிற்று. ஒரு முறை அந்தக் குறுநில மன்னர் விலங்கு வேட்டை காரணமாக உடனே வரும்படி நம் ஜகதீசருக்கு ஒரு அழைப்பு விடுத்தார். அக்காடுகளில் காட்டெருமைகளும் பிற முரட்டு மிருகங்களும் அதிகம்

உண்டு. ஆதலால் ஜகதீசர் அவ்வழைப்பினைப் பெற்றதும் பயணம் கொள்ள எண்ணினார்.

நம் ஜகதீசர் போய்ச் சேரவேண்டிய ஊர் புகைவண்டி நிலையத்திலிருந்து இருபத்தொரு கல் தொலைவில் இருந்தது. ஆதலால் அவர் பகல் முழுதும் புகைவண்டியில் பயணம் செய்து இரவு நெருங்கும் மாலைக் காலத்தே அவ்வண்டியை விட்டு இறங்கினார். பிறகு அவர் ஒரு பல்லக்கின் மூலமாக அன்று இரவே பயணம் செய்து அந்தக் குறுநில மன்னரின் ஊரினை அடைந்தார்.

இவ்விதம் ஜகதீசர் பகலிலும் இரவிலும் பலவிதமாகப் பயணம் செய்து களைத்திருந்தும் ஒரு நாளேனும் ஓய்வுகொள்ளக் கருதாது பொழுது புலர்ந்த உடனே அந்தச் செல்வருடன் வேட்டையாடுதற்குக் கானகம் சென்றார்.

முன்பே களைப்புற்றிருந்த நம் ஜகதீசர் அந்தக் காட்டிலே பெரிதும் அலைந்து திரிந்து வேட்டையாட வேண்டியவரானார். ஆதலால் மாலைப்போது நெருங்குதற்குள் அவருக்குக் கொடிய காய்ச்சல் நோய் கண்டுவிட்டது.

ஜகதீசர் அந்தக் காய்ச்சலோடு உடனே தம் ஊருக்குத் திரும்பத் தீர்மானித்தார். அந்தச் சிற்றூரிலே சிறந்த மருத்துவர் இரார் அல்லவா? ஜகதீசர் கருத்துக்கு அந்தச் செல்வரும் இணங்கலாயினர். ஆனால் இருபத்தொரு கல் தொலைவில் உள்ள புகைவண்டி நிலையத்திற்குச் செல்லுதல் எவ்வாறு? முன்பு ஜகதீசரைச் சுமந்துவந்த பல்லக்கு வேறொருவரின் பொருட்டுப் பிறிதோரிடத்துக்கு அனுப்பப்பட்டிருந்தது. அச்சமயம வேறு ஊர்தியும் கிடைக்கவில்லை.

"தாங்கள் ஒரு குதிரை உதவக்கூடுமா?" என்றார் ஆழ்ந்த எண்ணத்தில் இருந்த நம் ஜகதீசர்.

"இப்போது என்னிடம் ஒரு குதிரைதான் உளது. அது மிகவும் விரைவாகவும் செல்லக்கூடியது. ஆனால் அஃது எவரையும் தன்மீது ஏறவொட்டாமல் முரட்டுத்தனம் செய்கிறது. முன்பு ஒரு முறை ஒருவன் ஏற முயன்றபோது, அது அவனை உடனே கீழே தள்ளி உதைத்துக் கொல்லவும் முயன்றது. அதிலிருந்து ஒருவரும் அதன்மீது சவாரி செய்வதில்லை," என்றார் அச்செல்வர்.

"அப்படியா! நான் அந்தக் குதிரையை நேரில் பார்க்கவேண்டும்," என்று ஜகதீசர் கூறிக்கொண்டே அந்தச் செல்வருடன் குதிரையைக் காணச் சென்றார்.

ஜகதீசர் அக் குதிரையின் அருகே சென்றதும் அது வெகுண்டு எழும்பிக் குதித்தது. அவர் அதனை அவிழ்த்து விடும்படி கூறி, சிறிது அமைதியுற்றிருக்கும் சமயம் பார்த்து, அஃது அறியாவண்ணம் திடுமெனத் தாவி அதன் முதுகின்மேல் அமர்ந்தார். முரட்டுக் குணம் வாய்ந்த அந்தக் குதிரை, தன் முதுகின் மேல் என்றும் இல்லாத ஒரு புதிய சுமை ஏற்பட்டுள்ளதை அறிந்து, பெரிதும் மருண்டு நாலுகால் பாய்ச்சல்கொண்டு ஓட ஆரம்பித்தது. நம் ஜகதீசர் அச் செல்வரிடம் விடைபெறவும் இயலாதவராய் அது செல்லும் நெறியிலேயே அதனை ஓடவிட்டுத் தாம் செல்லவேண்டிய இடத்துக்குத் திருப்பினார்.

தமக்குள்ள காய்ச்சலையும் மறந்தவராய் நம் ஜகதீசர் அந்தக் குதிரையின் போக்கிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார். அக்குதிரை நெடிது ஓடி வெள்ளம் நிறைந்த ஓர் ஆற்றின் கரையினை அடைந்தது. அந்த ஆற்றினைக் கடப்பதற்கு அங்கு இரண்டு வழிகள் காணப்பட்டன. ஒன்று அகன்ற பாலத்தின் மேல் செல்லும் வழி; மற்றொன்று ஒரு கிளைவழி.

நம் ஜகதீசர் என்ன நினைத்தோ பாலத்தின் வழியைவிட்டுக் கிளைவழியின் பக்கமாகக் குதிரை

யைச் செலுத்தினுர். அந்த வழி ஒரு குறுகிய மூங்கிற் பாலத்திற்கு அருகே கொண்டுவந்து விட்டது. அந்த முரட்டுக் குதிரை நாலுகால் பாய்ச்சலோடு மூங்கிற் பாலத்தின் மீது பாய்ந்தபோது அந்தப் பாலமே முறிந்து விழும்போல் இருந்தது. எனினும் எத் தகைய தீங்கும் நேராமல் அவர் அதனைக் கடந்து விட்டார்.

கிளைவழியில் செல்லாமல் நம் ஜகதீசர் அந்த அகன்ற பாலத்தின்மீது சென்றிருப்பாராஞல், அன்று அவர் உயிருக்கு இறுதியே நேர்ந்திருக்கும். அந்தப் பெரிய பாலம் உடைப்புண்டிருந்தது கிளைவழியாகச் சென்றபோது தெரியவந்தது. நல்ல காலம்! இம் முறையும் நம் ஜகதீசர் காப்பாற்றப்பட்டார்.

அந்தக் குதிரை அதன் பிறகும் அமைதியுற வில்லை. ஏறத்தாழப் பதினன்கு கல் ஓடிய பின்னரே சிறிது அமைதியுற்றது. இவ்விதம் நம் வீர ஜயசிங் கர் புகைவண்டி நிலயத்தை அடைந்தார்.

## 10. பி. ஏ. பட்டம்

ஜகதீசர் அங்கே சென்றதும் தமக்குத் தெரிந்த ஒருவரிடம் அக்குதிரையை ஒப்படைத்துச் சிறிது இளைப்பாறினுர். அந்தக் காய்ச்சல் மட்டும் அவரை விட்டபாடில்லை. அவர் அதன் பொருட்டுப் பலப் பல மருந்துகளை உட்கொண்டும் அது முற்றிலும் குணமடையாமல் மாறிமாறி வந்தவண்ணமே இருந் தது.

பி. ஏ. தேர்வுக்குச் செல்லும் காலம் நண்ணி யது. அப்போதும் நோய் அவரைவிட்டு அகலவில்லை. அவர் அதனுடன் போராடிக்கொண்டே தேர் வுக்குச் சென்ருர்.

இத்தகைய துன்பங்களின் இடையே நம் ஜகதீ சர் தமது இருபதாம் வயதில் பி. ஏ. பட்டம் பெற்ருர்.

அதனோடு அவர் அமைதியுறவில்லை. இங்கிலாந்து சென்று தம் கல்வி அறிவைப் பெருக்கிக்கொள்ள அவர் விரும்பினார்.

ஜகதீசரின் தந்தையாருக்கு அப்போது பொருள் முட்டுப்பாடு மிகுதியாய் இருந்தது. தேயிலைத் தோட்டத்தாலும், மற்றும் பல்வேறு முயற்சிகளாலும் பொருள்முடை அவருக்கு அதிகரித்திருந்தது. அன்றியும் அவர் அப்போது உடல் நலம் குன்றியமை காரணமாக இரண்டு ஆண்டுகள் விடுமுறை பெற்றுக் குறைந்த ஊதியம் ஏற்றுவந்தார்.

இக்காரணங்களால் இங்கிலாந்துக்குச் செல்லும் எண்ணம் ஈடேறாததுபோல் தோன்றியது. ஆனால் அறிவிற் சிறந்த அவர்தம் அருங்குண அன்னையார், தம் அணிகலன்களை விற்றேனும் தம் மைந்தரை இங்கிலாந்துக்கு அனுப்புதல் நலம் என எண்ணினார்.

நம் ஜகதீசர் இங்கிலாந்து சென்று, ஐ. சி. எஸ். என்னும் பட்டம் பெற விரும்பினார். தம் மைந்தர் தம்மைப்போல் அரசாங்க ஊழியராய் இருக்கப் பகவன் போஸ் விரும்பவில்லை. ஜகதீசர் கலெக்டர் பதவியைப் பெற்றுப் பலரையும் அடக்கி ஆளுதலைவிடத் தம் நாட்டுக்குப் பயன்படத்தக்க உழவு முதலிய துறைகளில் தேர்ச்சி பெறுதல் நலம் என அவர் எண்ணினார். ஜகதீசர் அவைகளை விரும்பாமல் வேறு பல எண்ணி முடிவில் மருத்துவக் கல்வியை அவாவினார். அவர்தம் தந்தையும் அதற்கு இணங்கவே, ஜகதீசர் இங்கிலாந்து செல்லுதல் உறுதியடைந்தது.

## 11. கப்பற் பயணம்

ஒரு நல்ல நாளிலே ஜகதீசர் தம் பெற்றோரிடமும் மற்றோரிடமும் விடைகொண்டு கப்பலேறிப் பம்பாய் நகரம் சென்றார். இங்கிலாந்துக்குப் புறப்படும் காலம்

அறிந்து நம் ஜகதீசர் உவகையும் உள்ளக் கிளர்ச்சியும் பொங்கக் கப்பலில் ஏறினர். அக் கப்பலும் தனக்குரிய பெருமிதத்தோடு புறப்படலாயிற்று.

அந்தக் கப்பல் வாழ்க்கை நம் ஜகதீசருக்கு ஒரு சில நாட்களே இன்பமாக இருந்திருக்கும். முன்பு அடிக்கடி வந்து துன்புறுத்திய பழைய மலேரியா என்னும் முறைக் காய்ச்சலால் அவர் மறுபடியும் துன்புறலாயினர். கப்பல் மருத்துவர் தம்மால் இயன்ற உதவி புரிந்தும் அது நிற்கவில்லை. அவரோ தன்னந் தனியவர்; போய்ச் சேரவேண்டிய இடமோ நெடுந் தூரத்தில் உளது. கப்பலில் உள்ளவரோ முன்பின் அறிந்திராத அயலார். எனினும் அவர்களும் ஜகதீசர் நிலையினை நினைந்து வருந்தலாயினர். "பாவம்! இந்த இளைஞன் இங்கிலாந்திலே அடிவைக்கப் போவதில்லை," என அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டதையும் ஜகதீசர் ஒருவாறு அறிந்துகொண்டார். அப்போது அவர் உள்ளம் எவ்வாறு இருந்திருக்கும்? "இவ்விதம் நடுக்கடலில் இறந்து விடுவதற்காகவா நான் இவ்வளவு பாடுபட்டு வந்தேன்! என் எண்ணமெல்லாம பயனற்றுப் போய்விடுமா! ஆ! என் பெற்றோர்கள் எவ்வளவு வருந்துவார்கள்!" என இவ்வாறு பலப்பல நம் ஜகதீசர் எண்ணியிருக்கக் கூடும்.

இத்தகைய நிலையிலும் நம் ஜகதீசர் உள்ளம் தளர்ந்திலர். 'என்ன வரினும் நான் என்னால் இயன்ற வரையில் தாங்கி அதை வெல்ல முயலுவேன்,' என்னும் உள்ளத் துணிவே அவர்தம் முகத்தில் தென்பட்டது. பல அரிய உண்மைகளைக் கண்டறியப் பிறந்துள்ள அப்பெரியார் அவ்விதம் அக்கடலுக்கா இரையாவார்? இங்கிலாந்து நெருங்க நெருங்க நம் ஜகதீசருக்குக் காய்ச்சலும் சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித்தது. கப்பல் கடற்கரையை நெருங்கியதும் காய்ச்

சலும் அடியோடு நின்றுவிட்டது. எனினும் அவர் உடல் மிகவும் மெலிந்தே இருந்தது.

## 12. இங்கிலாந்திலே நேர்ந்த இடையூறுகள்

சில நாட்களில் நம் ஜகதீசர் தம் தந்தையாரிடம் உரைத்து வந்த வண்ணமே லண்டன் பல்கலைக் கழகச் (London University) சார்பிலே உள்ள மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு அவர் முதல் ஆண்டிலே பூதநூல் (Physics), வேதிநூல் (Chemistry), விலங்கு நூல் (Zoology), தாவர நூல் (Botany) முதலியன கற்றார். இரண்டாம் ஆண்டிலே உடல்களை அறுத்துப் பார்க்கும் பயிற்சி துவங்கியது. பிணங்களின் பல உறுப்புக்களையும் அறுத்துப் பார்க்கும்போது எழும் கெட்ட நாற்றம், மிகவும் மெலிந்திருந்த அவர்தம் நிலைக்கு ஏற்றதாக இல்லாமையால், பழைய காய்ச்சல் நோய் அவருக்கு மறுபடியும் கண்டது. அவர் அதற்காகப் பலவித மருத்துவ முறையினைக் கையாண்டும் அந்த நோய் நிற்கவில்லை. அவருக்கு மருத்துவம் பார்த்துவருபவரும் கல்லூரி ஆசிரியரும், 'உன் உடல்நிலைக்கு மருத்துவக் கல்வி ஏற்றதன்று' என்று கூறிவிட்டனர். அதனால் ஜகதீச சந்திரர் அந்தக் கல்வித் துறையை அறவே நீத்துக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் சார்பிலே உள்ள கல்லூரியைச் சார்ந்து விஞ்ஞானப் பாடத்தில் பி. ஏ. பட்டம் பெற முயன்றார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகச் சார்பில் உள்ள கிறிஸ்துவக் கல்லூரியில் விஞ்ஞானக் கலைகளில் புலமை நிரம்பிய ஆசிரியர் பலர் இருந்தனர். ஆதலின் விஞ்ஞான அறிவினை மேலும் பெருக்கிக் கொள்வதற்கு ஜகதீசருக்கு வாய்ப்பு பெரிதும் இருந்தது. எனினும் அங்கேயும் அவருக்கு முதலில் உடல்நிலை நல்ல நிலையில் இல்லை. அந்தப் பாழும் காய்ச்சல் நோய் அப்

போதும் வந்து அவரைத் துன்புறுத்தியது. பலமுறை வந்த காய்ச்சலால் அவர்தம் உடல் மிகவும் இளைத்துப்போய் இருந்தது. 'இவ் விளைஞர் தம் தாய் நாட்டுக்கு இனிதே போய்ச் சேருவாரோ !' எனப் பலரும் ஐயுற வேண்டிய நிலையில் நம் ஜகதீசர் இருந்தார்.

'போதிய வன்மை இன்மையாலேயே இக் காய்ச்சல் இவருக்கு அடிக்கடி வருகிறது. படகு தள்ளும் பயிற்சியை நாள்தோறும் ஒழுங்காகப் புரிந்து வந்தால உடல் வன்மையுறும்; காய்ச்சலும் நின்றுவிடக் கூடும்' எனச் சில அறிஞர் கூறினர். நம் ஜகதீசர் அவர்கள் கூறியவாறே நாள்தோறும் படகு தள்ளும் பயிற்சியைப் புரிந்துவரலாயினர்.

இதனால் முதலில் சிறிது நன்மை உண்டாயிற்றெனினும் இதன் காரணமாகவும் ஓர் எதிர்பாராத இடையூறு நேர்ந்தது. நம் ஜகதீசர் ஒருமுறை ஆற்றில் படகு தள்ளிச் சென்றபோது எவ்விதமோ அப்படகிலிருந்து தவறி நீரில் விழுந்துவிட்டார். உடல் மெலிவினையுடைய அவர் பனிக்கட்டிபோல் குளிர்ந்திருந்த அந்த நீரில் விழுந்த காரணத்தால் பழைய காய்ச்சல் நோய் மறுபடியும் வந்து அவரைத் துன்புறுத்தியது.

இவ்விதமாக நம் ஜகதீச சந்திரர் அக்கல்லூரியில் சேர்ந்த முதல் ஆண்டு முழுவதும் நோயுடன் போராட வேண்டியவராகவே இருந்தார். பின்னரே அவர்தம் உடல் நல்ல நிலைமைக்கு வந்தது. அப்போதுதான் அவர் அங்குள்ள மாணவர்களுடன் கலந்து உறவாடலாயினர். அதிலிருந்து அவர்தம் வாழ்க்கை இன்பமாகவே யிருந்தது. அந்த மாணவர்களின் கூட்டுறவால் அவர் விடுமுறை நாட்களில் பல்வேறிடங்களுக்கும் சென்று இன்புற்று வந்தார். அவர்தம் உடலும் வன்மையும் வனப்பும் உற்றுச் செழுமையுடன் விளங்கத் துவங்கியது.

## 13. பட்டம் பெறுதலும் நாடு திரும்பலும்

எத்தகைய இடையூறுகளையும் தம் உள்ளத் துணிவாலும், முயற்சியாலும் வென்று தாம் கொண்ட எண்ணத்தை முடிக்க வல்லவராய் பெரியார் ஜகதீச சந்திர போஸ் தமக்கு நேர்ந்த பல இடையூறுகளையும் பொருட்படுத்தாது பொறுமையோடு முயன்று தமக்குரிய பாடங்களை யெல்லாம் ஆர்வத்துடன் கற்று 1884-ஆம் ஆண்டில் 'லண்டன் பி. ஏ.' என்னும் பட்டம் பெற்றார். அதனோடு அவர் இயற்கை விஞ்ஞானக் கலைப்பயிற்சிக்குப் பண உதவி (Scholarship) யும் பெற்றார். அதற்கு அடுத்த ஆண்டில் 'பி. எஸ். ஸி.' பட்டம் பெற்று விஞ்ஞான இளம் புலவராய்ச் சிறந்து விளங்கினார். ஆதலால் நம் ஜகதீசர் தம் தாய் நாடாகிய இந்தியாவுக்குத் திரும்ப எண்ணங் கொண்டார். அப்போது பேராசிரியர் பாஸெட் (Professor Fawcett) என்னும் பெரியார் இந்தியாவிலே அரசப் பிரதிநிதியாய் இருந்த லார்டு ரிப்பன் என்பவருக்கு ஓர் அறிமுகத் தாளினை எழுதி நம் ஜகதீசரிடம் தந்தார்.

அறிஞர் ஜகதீசர் இங்கிலாந்திலிருந்து தம் தாய் நாடு திரும்புதற்குக் களிப்புடன் கப்பலில் ஏறினார். அந்தக் கொடிய காய்ச்சல் நோய் இங்கிலாந்தோடு ஒழிந்தது. அவருக்கு வேறு எத்தகைய துன்பமும் தாய்நாடு திரும்பும்போது நேர்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அப் பெரியார் மறுபடியும் பல முறை இங்கிலாந்துக்கு வர நேரும்; விஞ்ஞானம் கற்பித்த நாட்டினருக்கே தம் புதிய விஞ்ஞான உண்மைகளைத் தெளிவுறுத்த நேரும்; அதனால் பேரும் புகழும் பெருகும் என்பனவற்றை அப்போது சிறிதேனும் நினைந்திருப்பாரா? அவர் அவ்வாறு நினைத்தற்கு இடன் இல்லை என்றாலும், 'நானும் பிற பெரியார்களைப் போல் எப்போது பேரும் புகழும் பெறுவேன்! நம் நாடு அந்த ஆங்கில நாட்டினைப்போல் எப்போது

விஞ்ஞான அறிவால் சிறந்து திகழும் என்பன போன்றவற்றையேனும் அவர் பல முறை எண்ணி யிருப்பார் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

## 14. சம்பளம் இல்லாச் சேவகம்

நம் ஜகதீசர் இந்தியாவை அடைந்தவுடனே தம் அருமைப் பெற்றோரைக்கூடப் பார்க்க எண்ணவில்லை. தமக்கு அந்த அறிஞர் அளித்த அறிமுகக் கடிதத்தை அதற்கு உரியாராய இந்திய அரசப் பிரதிநிதியிடம் அளித்தலே தமது முதற் கடமை என அவர் எண்ணினார். ரிப்பன் மேன்மகனாரும் அவரை உவகையுடன் வரவேற்று இன்னுரை பலவும் புகன்றார்.

பிறகு ஜகதீசர் தம் பெற்றோரையும் மற்றோரையும் கண்டு அளவளாவினார். அவர் தம் அருங்குண அன்னையார் அவரைப் பெற்ற ஞான்றினும் பெரு மகிழ் வெய்தினார்; அருமைத் தந்தையார் தம் கடமை தீர்ந்தமை நினைந்து களிகூர்ந்தனர்.

காண வேண்டியவர்களை யெல்லாம் கண்டு நலம் வினவிய பின்னர் ஒருநாள் நம் ஜகதீசர் வங்காள மாகாணக் கல்வித்துறைத் தலைவரைக் காணுதற்குச் சென்றார். அவர் அவ்வாறு செல்லுதற்கு முன்பே அத்தலைவருக்கு ரிப்பன் பிரபுவினிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அக்கடிதத்திலே, இங்கிலாந்தி லிருந்து நன்மதிப்போடு வந்துள்ள நம் ஜகதீசருக்குக் கல்வித் துறையில் ஓர் உயர்தொழில் அளித்தல் குறித்து அந்தத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

விஞ்ஞானக் கலையில் சிறந்தொளிர இந்தியரால் இயலாதென்பதும், அக்கலையில் அவர்கள் கற்றுத் தேறி யிருந்தாலும் கல்லூரி மாணவர்கட்கு அவைகளை விளக்கமுறக் கற்பிக்க அவர்களால் இயலாதென் பதும் அத்தலைவரின் எண்ணம்.

நம் ஜகதீசரின் விஞ்ஞான அறிவினையும், கற்பிக்கும் திறத்தினையும் அத்தலைவரால் அப்போது எவ்விதம் அறிந்துகொள்ள இயலும்? ஆதலால் அவர் நம் ஜகதீசருக்குக் கல்லூரி ஆசிரியப் பதவியைத்தர இசையாதவராய் அதனினும் தாழ்ந்த பதவிகளுள் ஒன்றினைத் தர எண்ணினார். இங்கிலாந்து சென்று நன்மதிப்புப் பெற்று வந்த ஓர் இந்தியன் அதனைப் பெறுதல் இந்தியருக்கே மானக்கேடு என்னும் எண்ணத்தால் நம் ஜகதீசர் அதனை ஏற்காது தம் இல்லம் மீண்டனர்.

அந்த நிகழ்ச்சியிலிருந்து நம் ஜகதீசரின் வாழ்க்கை நிலை முற்றிலும் மாறியிருத்தல் வேண்டும். இந்தியா விஞ்ஞானத் துறையில் ஈடுபடும் காலம் நண்ணியதால் அந்த நிகழ்ச்சி அதனோடு நில்லாது மேலும் வளர்வதாயிற்று.

அரசப் பிரதிநிதியாய ரிப்பன் மேன்மகனார் நம் ஜகதீசருக்கு ஒரு தகுதிவாய்ந்த பதவியைத் தேடித் தருதலில் கண்ணுங் கருத்துமாய் இருந்தார். ஆதலால் அவர் மறுபடியும் அந்தக் கல்வித் தலைவருக்கு அதனை நினைப்பூட்டினார். இவ்வளவு தூண்டுதலின் பேரில் அந்தக் கல்வித் தலைவர் ஜகதீசரை அழைத்து அவருக்குக் கல்கத்தா மாகாணக் கல்லூரியில் பூதநூல் கற்பிக்கும் பேராசிரியர் பதவியைத் தந்தார். நம் ஜகதீசப் பெரியார் அதனை ஆவலுடன் ஏற்றுத் தம் விஞ்ஞானப் புலமையைப் புலப்படுத்த முயன்றார்.

துன்பங்களையே இன்பமாகக் கொண்டு தம் வாழ்க்கையை நடாத்தற்குரிய வீரர் ஜகதீசருக்கு இந்தப் பதவி காரணமாகப் பிறிதொரு குறையும் நேரலாயிற்று. அக்காலத்தே இங்கிலாந்திலிருந்து வருவோருக்கு ஒருவகை ஊதியமும், இந்தியருக்கு ஒருவகை ஊதியமும் அரசாங்கத்தார் வழங்கி வந்தனர். ஆங்கிலேயருக்கு அளிக்கும் ஊதியத்தில் மூன்றில் இரண்டு

பங்கு ஊதியமே இந்தியராகிய ஜகதீசருக்கு அளிக்கப்படும் என்றும், அந்தப் பதவி உறுதி செய்யப்படாத பதவியாய் இருந்ததால் அந்த இரண்டு பங்கு ஊதியத்திலும் அரைப்பகுதியே தரப்படும் என்றும் கல்லூரித் தலைவர் அவருக்குத் தெரிவித்தனர். அது நம் ஜகதீசருக்கு முற்றிலும் எதிர்பாராததாய் இருந்தது. இங்கிலாந்திலே கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகச் சார்பிலே தேறிப் பட்டம் பெற்று வந்த தமக்கு ஆங்கிலேயர் பெறும் ஊதியமே தரல்வேண்டும் என்னும் எண்ணம் அவருக்குத் தோன்றி யிருக்கலாம். ஆதலால் அவர் அப்பதவியில் இருந்துகொண்டே முதலில் நேர்மையான முறையில் தமக்குள்ள குறையினைக் கல்லூரித் தலைவருக்கு விண்ணப்பித்துக் கொண்டார்.

பெரிது முயன்றும் அம் முயற்சி பயனற்றுப் போனதால், நம் ஜகதீசர் தம் எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு புது முறையைக் கையாண்டார். அம் முறை பெரிதும் அமைதியானது. சட்டத்திற்கு உட்பட்டது. அஃதாவது தமக்கு நேர்மையான ஊதியம் வரும் வரையில் சம்பளம் பெறாமலேயே உத்தியோகம் புரிதல் என்பதேயாகும்.

## 15. வாழ்க்கையில் சீர்திருத்தம்

ஊதியம் இல்லாத உத்தியோகத்தை நம் ஜகதீசர் புரிந்தது ஒரு திங்கள் அன்று; இரு திங்களும் அன்று. அவர் மூன்று ஆண்டுகள் ஒரு செப்புக் காசும் பெறாமல் அந்தக் கல்லூரியில் ஊழியம் புரிந்தார்.

ஜகதீசரின் தந்தையாராய பகவன் சந்திர போஸ் போதிய பணம் இன்மையால் துன்பப் பட்டதை நீங்கள் முன்பே அறிந்திருக்கிறீர்கள். நம் ஜகதீசர் சுமார் ஐந்து ஆண்டுகள் இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்தபோது பெரிதும் செலவு பிடித்திருக்

கலாம் அல்லவா? இதனோடு உழவு, கைத்தொழில், வாணிபம் முதலிய நடத்தியும் பெரிதும் பொருள் இழந்திருக்கிறார். இக்காரணங்களால் பகவன் சந்திர போஸுக்குக் கடன் தொல்லை அதிகமாய் இருந்தது.

தம் மைந்தர் இங்கிலாந்திலிருந்து உயர்ந்த பட்டங்களுடன் திரும்பி வருவதால் தம் கடன்கள்பெரும்பாலும் நீங்கிவிடும் என ஜகதீசர் தந்தையார் எண்ணுவது இயல்புதானே. இத்தகைய நிலையில் ஜகதீசர் ஊதியம் பெறாத ஊழியம் செய்தால் அந்தக் குடும்பம் எவ்வளவு துன்பப்படும்? நம் ஜகதீசர் இந்தத் துன்பத்தினையும் தமது உள்ள உறுதியினால் தாங்கித் தம் குடும்ப வாழ்க்கையை ஒழுங்குபடுத்த முயன்றார்.

ஜகதீசர் முதலாவதாகச் செய்தது கடன் ஒழிப்பே ஆகும். கடன்காரர் நாற்புறமும் தொந்தரை செய்ய வீடுகளையும், நிலங்களையும் வைத்துக்கொண்டு பெருமையோடு வாழ விரும்புதல் தவறு என்று அவர் எண்ணினார். 'கடனுண்டு வாழாமை காண்டல் இனிதே' என்னும் மூதுரைக் கேற்பத் தாம் சிறந்திருக்க எண்ணித் தம் நிலங்களை விற்றுக் கடனில் பெரும் பகுதியைத் தொலைத்தார்.

கடன் வட்டிமேல் வட்டியாக ஏறப் பெண்கள் கழுத்திலும் காதுகளிலும் கைகளிலும் நகைகளை அணிந்துகொண்டு வாழ விரும்புவதும் நம் ஜகதீசருக்குத் தவறு என்று தோன்றியது. அவர்தம் அருங்குண அன்னையாரும் அவைகளைக் கழற்றிக் கொடுக்க இசைந்தனர். ஜகதீசர் அவைகளையும் விற்று முக்கால் பகுதி கடனைத் தொலைத்துவிட்டார். அவர் தம் செயல்களைக் கண்டு கடன் கொடுத்த அறிஞர்களில் சிலர் அத்தொகையினைப் பெற்றுக்கொள்ள மறுத்தனர். எனினும் ஜகதீசர் அவர்களைப் பெற்றுக்கொள்ளும்படி செய்தனர்.

## 16. திருமணம்

இங்ஙனம் ஓர் ஆண்டு ஊதியம் இல்லா வாழ்க்கையை மிகச் சிக்கனமான முறையில் நம் ஜகதீசர் நடத்திவந்தனர். அடுத்த ஆண்டின் துவக்கத்தில் அவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. அதுவும் தற்கால நாகரிகத்துக்கு ஏற்ற முறையிலே மிகவும் சிக்கனமாகவே நிகழ்ந்தது. அந்த மணமகளாரும் கணவனார் கருத்துக்கு ஏற்றபடியே தம் வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

பெரிய கல்லூரியிலே பேராசிரியர் பதவியில் உள்ள அவர் தம் தகுதியையும் காத்துக்கொள்ள வேண்டும்; சிக்கனமாகவும் வாழவேண்டும் அல்லவா? நம் ஜகதீசர் தங்கியிருந்த இல்லத்துக்கும் கல்லூரிக்கும் இடையே ஆறு தடையாக இருந்தது. அவ்வாற்றைக் கடந்துவிட்டால் செல்லுதல் மிகவும் எளிது. ஆதலால் அவர் ஒரு சிறு படகு வைத்திருந்தார். அதில் அவரும் அவர்தம் வாழ்க்கைத் துணைவியாரும் ஏறிக்கொள்வார்கள். ஜகதீசர் மறு கரையை அடைந்ததும் அந்த அம்மையார் தாமே அந்தப் படகினைத் தள்ளிக்கொண்டு இல்லம் வந்து சேர்வார்.

இந்த ஒரு சிறு செய்தியிலிருந்தே அவர்கள் இருவரும் தமக்குள் கருத்தொருமித்துத் தம் வாழ்க்கையை எவ்வளவு சிக்கனமாகவும் பார்ப்போர் மதிக்கும்படியும் நடத்தி வந்தார்கள் என்பது தெரிய வருகிறது.

## 17. பேராசிரியர் தொழில்

நம் அறிஞர் ஜகதீச சந்திர போஸ் மூன்று ஆண்டுகள் வரையில் பொருள் கருதாமல் இங்ஙனம் தமது ஆசிரியத் தொழிலைப் புரிந்து வந்தாரெனினும், மாணவர்கட்குப் பாடம் கற்பிப்பதில் அவர் சிறிதும் ஊக்கம் தளர்ந்திலர். அம்மட்டில் நில்லாமல் விஞ்ஞானம் கற்பிப்பதில் இந்தியர்கள் மேல் நாட்டினர்கட்கு

எவ்வகையிலும் குறைந்தவர் அல்லர் என்பதைக் கல்வித் துறைத் தலைவரும் பிறரும் நன்கு உணர்தல் வேண்டும் என்னும் எண்ணத்தோடும் அவர் தமக்குரிய விஞ்ஞானச் சொற்பொழிவுகளை ஆற்றலாயினர். ஆதலால் நம் ஜகதீசப் பெரியாரின் சொற்பொழிவை மாணவர்கள் மிக ஆவலோடு கேட்கலாயினர்.

மாணவர்கள் ஒவ்வொரு பாடப் பகுதிக்கும் ஒழுங்காக வருதற்காக ஒவ்வொரு பாடப் பகுதியிலும் பெயர் கூப்பிடும் பழக்கம் அக்காலத்திலே ஆங்கே நிகழ்ந்து வந்தது. நம் ஜகதீசர் வகுப்பில் எல்லா மாணவரும் ஒழுங்குபெற வருங் காரணத்தால் அவர் அப்பழக்கத்தையே ஒழித்துவிட்டனர்.

எந்தப் பாடத்திற்கும் மாணவர்கள் தங்கள் பாட புத்தகங்களோடு விளக்கவுரை நூல், வினாவிடை நூல் என்னும் பாடத்துணைப் புத்தகங்களையும் வாங்கி அவைகளை நெட்டுருப் போட்டு எழுதித் தேர்வுபெற முயலுதலை நம் ஜகதீசர் வன்மையாகக் கண்டித்தனர். கல்லூரியில் கற்கும் மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களின் சொற்பொழிவுகளைத் தெளிவுபெறக் கேட்டுக் குறிப்பெடுத்துக்கொண்டு எழுத முயலுதலே சிறந்த முறை என்பதை அந்த மாணவர்களுக்கு விளக்கி அதனை நடைமுறையிலும் அவர் கொண்டுவந்தனர்.

இங்ஙனம் மூன்று ஆண்டுகள் கழிந்தன. கல்லூரித் தலைவரும், மாகாணக் கல்வித் துறைத் தலைவரும் அப்போதுதான் அவர்தம் விஞ்ஞான நூற்புலமையையும், சொற்பொழிவாற்றும் திறனையும் உணரலாயினர்; ஊதியம் கருதாதிருந்தும் பாடம் ஒழுங்குபெறக் கற்பித்து வந்த அவர் தம் நேர்மையையும் கண்டு மகிழ்ந்தனர். ஜகதீசர்மீது அவர்கட்கு அன்பு பெரிதும் உண்டாயிற்று. இத்தகைய அறிஞருக்கு ஊதியத்தில் வேறுபாடு காட்ட நேர்ந்தமைக்கு அவர்கள் பெரிதும் வருந்தினர்கள்; உடனே அந்த

மூன்று ஆண்டு முழு ஊதியத்தையும் மொத்தமாக நம் ஜகதீசருக்கு அளித்தார்கள்; அவர்தம் பதவியையும் உறுதியாக்கினார்கள்.

உண்மையும் உழைப்பும் வீணாதல் இல்லை அல்லவா? ஜகதீசப் பெரியார் அந்தத் தொகையினை மகிழ்வோடு பெற்றுத் தமக்கிருந்த கடனில் ஒரு பகுதியை அடைத்தார். கடன் முழுவதையும் தீர்த்தற்கு மேலும் ஆறு ஆண்டுகள் சென்றன.

## 18. ஒரு நல்ல நாள்

முப்பது வயதுக்கு மேல்தான் ஜகதீசரின் வாழ்க்கை ஒழுங்குபடலாயிற்று. எனினும் அப்போதும் ஒரு சில இடையூறுகள் அவருக்கு வந்துகொண்டுதான் இருந்தன. அவர்தம் குடும்பக் கடனைத் தொலைத்த ஓர் ஆண்டினுக்குள் அவர்தம் அருமைத் தந்தையார் விண்ணுலகம் விழைந்தனர்; அதற்கு அடுத்த இரண்டு ஆண்டுகளில் அவர்தம் அருங்குண அன்னையாரும் இந்நிலவுலகை நீத்தனர்.

இவைகளால் நம் ஜகதீசப் பெரியார் உள்ளம் பெரிதும் புண்பட்டிருக்கும். தம் பிற்கால வாழ்க்கையைக் குறித்தும், தாம் புரியவேண்டிய கடமைகளைக் குறித்தும் கூர்ந்து நினைத்துப் பார்ப்பதற்கு இவ்விரண்டு நிகழ்ச்சிகளும் அவருக்கு உறுதுணை செய்திருக்கும்.

1893-ஆம் ஆண்டு நவம்பர் 30-ஆம் நாள் இந்தியருக்கே ஒரு சிறந்த நாள் ஆகும். அது நம் ஜகதீசப் பெரியாருக்கு முப்பத்து நான்காவது வயது முடிந்து முப்பத்து ஐந்தாவது வயது துவங்கும் நாள். இந்த நல்ல நாளிலேதான் நம் ஜகதீசர் தம் பெற்றோரின் பிரிவு, தமது வாழ்க்கை நிலை, இந்தியாவின் இழிந்த நிலை, பிறநாடுகளின் முன்னேற்ற நிலை, தமது கடமை முதலியவற்றை நீள நினைந்து பார்த்தார்.

ஜகதீசப் பெரியார் தம் கல்லூரித் தொழிலைப் புரிந்துகொண்டே ஒழிவு நேர்ந்த காலமெல்லாம் தாம் கொண்ட எண்ணத்தை நிலைநாட்டுதலிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்தார். அப்போது அக் கல்லூரியிலே இருந்த விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம் மிகச் சிறியது. ஆய்வதற்கு வேண்டிய கருவிகள் அங்கே ஒரு சிறிதேனும் இல்லை. ஆதலால் அவர் தமக்கு வேண்டிய கருவிகளுள் சிலவற்றைத் தாமே செய்து கொள்ளலாயினர். இவ்வாறு அவர் பெரிதும் முயன்று பல அரிய விஞ்ஞான உண்மைகளைக் கண்டறிந்தனர். அவை மேல் வகுப்பு மாணவ மாணவிகளுக்கே நன்ருக விளங்கும். எனினும் நீங்கள் அவைகளை மேற்போக்காக ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

## 19. மின்சார அலைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள்

நம் பெரியார் முதலில் கண்டறிந்தது மின்சார அலைகளைக் குறித்த அதிசயங்களே. மின்சார அலை என்பது நம் கண்களுக்குப் புலப்படாத ஒருவகை அலை. அது பெரும்பாலும் சாதாரண ஒலி அலையையே ஒத்திருக்கின்றது என்பதை அவர் தாமே செய்து முடித்த சில விஞ்ஞானக்கருவிகளைக்கொண்டு விளக்கிக் காட்டினுர். ஜகதீசர் தாம் கண்டறிந்த இந்த உண்மையினைப் பல கட்டுரைகளாக இங்கிலாந்தில் உள்ள விஞ்ஞான அறிஞர் கழகத்துக்கு எழுதி அனுப்பினுர். அவைகளைப் படித்துப் பார்த்த அந்தக் கழக அறிஞர்கள் அவைகளை அச்சிட்டுப் பலர்க்கும் அறிவித்ததோடு நம் பெரியாரை இங்கிலாந்துக்கேஅழைத்துச் சொற்பொழிவாற்றும்படியும் செய்தனர். அந்தச் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்த அவர்கள் நம் பெரியாருக்கு 'விஞ்ஞான அறிஞர்' (Doctor of Science) என்னும் பட்டத்தை அளித்தனர். அதிலிருந்து அவருக்குப் பல இடங்களிலிருந்து பாராட்டுக் கடிதங்கள் வந்தன.

அறிஞர் ஜகதீசர் அதனோடு நில்லாது மேலும் மேலும் ஆராய்ச்சி புரிதற்குரிய விஞ்ஞான ஆய்வு நிலையம் ஒன்றினை நிறுவ விழைந்தனர். அதற்குப் போதிய பொருளும் ஆதரவும் இல்லாமையால் அவ்வெண்ணம் சிறிது தடையுற்றது. நம் பெரியார் புரிந்த விஞ்ஞான ஆராய்ச்சியைப் பாராட்டி, அதனுல் அவருக்கு நேர்ந்த செலவுகட்கு ஈடாக அரசாங்கத்தார் பொருளுதவி புரிய விரும்பினர். அவ்வாராய்ச்சி நிறைவேறிவிட்டமையால் அதற்காகப் பொருளுதவி வேண்டியதில்லை என அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார். ஆகவே அவர் மேலும் நிகழ்த்தவேண்டிய ஆராய்ச்சிகளுக்காக அவருக்கு ஆண்டுதோறும் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா தருதற்கு அரசாங்கத்தார் முன் வந்தனர்.

மேல் நாட்டினரின் பாராட்டும், நம் அரசாங்கத்தினர் பொருளுதவியும் நம் ஜகதீசருக்கு இயல்பாக உள்ள உணர்ச்சியை மேலும் தூண்டின. ஆதலால் அவர் முன்னினும் ஊக்கததோடு முயன்று மற்றுமோர் புதுமையினைக் கண்டறிந்தனர். அதாவது கம்பியின் உதவி சிறிதும் இல்லாமலேயே மின்சார அலைகளைத் தூண்டிப் பயன்படுத்துவது. இதனை அவர் வங்காள ஆட்சித் தலைவர் முன்னிலையில் செய்து காட்டினர். மின்சார அலையானது கம்பியின் உதவியின்றியே மூன்று சுவர்களைக் கடந்து சென்று அங்கிருந்த பாரமான ஒரு பொருளை அப்புறப்படுத்தி, மணியடிக்கும் கருவியை ஒலிக்கச் செய்து, வெடிமருந்து திரளையும் பற்றவைத்தது. இதனைக் கண்ட அறிஞர் பலரும் பெரிதும் வியப்புற்றனர். அறிஞர் மார்க்கொனி கம்பியில்லாத் தந்தியை உலகிற்கு உதவுதற்கு முன்பே நம் பெரியார் இவைகளைக் கண்டறிந்தார். எனினும் அவர் இதனை இவ்வளவோடு நிறுத்திக்கொண்டு மேலும் பல புதுமைகளில் தம் கருத்தைச் செலுத்தியதனுல் அந்தப் பெருமையினை மார்க்கொனியே பெறலாயினர்.

மின்சார அலைகளைக் குறித்த ஆராய்ச்சியை அறிஞர் ஜகதீசர் மேன்மேலும் செய்து அவைகளைப் பல கட்டுரைகளாக எழுதி மேல்நாடுகளுக்கு அனுப்பிய வண்ணம் இருந்தார். அவைகளைப் படித்த அறிஞர் பலரும் பெரியார் ஜகதீசரை மறுபடியும் காண விழைந்தனர். ஆதலால் அவர் ஓர் ஆண்டு விடுமுறை பெற்று இங்கிலாந்துக்கு இரண்டாவது முறையாகச் சென்று தாம் கண்டறிந்துள்ள புதிய கருவிகளையும் அவைகளைக் கொண்டு அறியத்தக்க விஞ்ஞான உண்மைகளையும் அவர்களுக்கு விளக்கிக் காட்டினர். பிறகு அவர் பிரான்சு, ஜெர்மனி முதலிய நாடுகளுக்கும் சென்று சொற்பொழிவாற்றி அவர்களை மகிழ்வித்தனர்.

பாரிஸ் மாநகரத்தில் நம் பெரியார் சொற்பொழிவு ஆற்றும்போது அதனைக் கேட்டிருந்த அறிஞர்களுள் சுவாமி விவேகானந்தரும் ஒருவராக விளங்கினர். உலகம் போற்றும் கவிஞராய் விளங்கிய இரவீந்திரநாத தாகூர் நம் ஜகதீசரைப் பாராட்டி ஒரு பாடலும் வரைந்தனர். வேதிக் கலையில் வல்லுநராய்ப் பல உண்மைகளைக் கண்டு உலகத்துக்கு உதவிய பி. ஸி. ராய் என்னும் பிரபுல்ல சந்திரரும் நம் பெரியாரைக் குறித்துப் புகழ்ந்து பேசியிருக்கின்றனர்.

## 20. தாவரங்களைப் பற்றிய ஆராய்ச்சிகள்

ஜகதீச சந்திரர் கண்டறிந்த உண்மைகளுள் பலரையும் வியக்கச் செய்தது மரஞ் செடிகளைப் பற்றிய ஆராய்ச்சியே யாகும். மரஞ் செடி கொடிகளுக்கு மக்கள் விலங்கு முதலியவைகளைப்போல் இன்ப துன்பங்களை உணரும் உணர்ச்சி உண்டு என்பதை நம் பெரியார் மின்சாரக் கருவிகள் மூலம் உலகுக்கு விளக்கிக் காட்டினர். மேல்நாட்டு விஞ்ஞானிகளுள் சிலர் இதனை முதலில் எதிர்த்தனர். மரஞ் செடிகளுக்கு அத்தகைய

உணர்ச்சி சிறிதும் இல்லையென்று விஞ்ஞானக் கழகக் கூட்டத்திலேயே ஒரு பெரிய மரநூலறிஞர் அழுத்தம் திருத்தமாகக் கூறி நம் பெரியாரின் சொற்பொழி வைக் கண்டித்து விட்டனர். அவரைத் தழுவி மற்றும் சில அறிஞர்களும் பேசி முடிவுகட்டி விட்டனர். அத னோடு நம் ஜகதீச சந்திரரின் பேரும் புகழும் இருந்த இடம் தெரியாமல் மங்கிப்போய் இருக்கும்.

ஆனால், எத்தகைய எதிர்ப்புக்களுக்கும் உள்ளங் கலங்காத நம் வீரர் ஜகதீச சந்திரர் மேலும் சில மாதங் கள் விடுமுறை பெற்று அங்கேயே இருந்து பலப்பல எடுத்துக்காட்டுகளைக் கொண்டு பல சொற்பொழிவு கள் ஆற்றித் தம்மை எதிர்த்த அவ்வறிஞர்களே தம்மை ஆதரிக்கும்படி செய்து விட்டனர். எனினும் மற்று மோர் தடை இவருக்கு நேர்ந்தது. ஜகதீசர் கூறுவது ஓர் புதுமையான செய்தி அன்று என்றும், இதை இவ ருக்கு முன்னரே ஓர் அறிஞர் வெளியிட்டுள்ளனர் என் றும் கூறி அவ்வெளியீட்டினையும் ஒரு சிலர் கொண்டு வந்து காட்டலாயினர். ஜகதீச சந்திரர் அதற்குச் சிறி தும் உளம் தளராமல் உண்மை என்றும் நிலை நிற்கும் என்னும் எண்ணமுடையவராய், அதற்காக ஒரு குழு அமைத்து அதனை ஆராய்ச்சி செய்து முடிவு காணும் படி கேட்டுக் கொண்டனர். அக்குழுவினர் ஆராய்ச்சி செய்ததில் நம் பெரியார் ஜகதீச சந்திரரின் வெளியீட் டைக் கண்ட பின்னரே அந்த அறிஞர் எழுதியிருத் தல் வேண்டும் என்பதைக் கால வேறுபாடு, பொரு ளின் சிறப்பு முதலியன பலவும் நோக்கி முடிவு கட்டி னர். இதனால் ஜகதீசரின் புகழ் அதிகரித்ததே அன்றிச் சிறிதும் குறையவில்லை.

பின்னர் ஜகதீசர் பலவிடங்களுக்கும் சென்று விஞ்ஞானத்தில் தாம் நன்குணர்ந்த புதிய உண்மை களை வெளிப்படுத்திப் பல சிறப்புக்களோடு இந்தியா வுக்குத் திரும்பினர்.

## 21. பாராட்டும் புகழும்

இவ்விதம் நம் ஜகதீசர் மூன்று நான்கு முறை இங்கிலாந்துக்குச் சென்று மரஞ் செடிகளைக் குறித்த உண்மைகளையே மேலும் மேலும் பலப்பல புதிய கருவிகளால் விளக்கிக் காட்டித் தம் கொள்கையை நிலை நிறுத்தினர். அப்போது அவருக்குப் பேரும் புகழும் பட்டங்களும், பதவிகளும், பாராட்டுரைகளும் மேலும் மேலும் வந்து குவிந்த வண்ணம் இருந்தன. அவர் ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள பல இடங்களுக்கும் சென்றார்; அவ்விதமே அமெரிக்காவுக்கும் சென்றார்; பொதுவாக இவ்வுலகிலே உள்ள சிறந்த இடங்களுக் கெல்லாம் சென்று தாம் கண்டறிந்த புதுமைகளைக் கூறிச் சொற்பொழிவாற்றியும், மின்சாரக் கருவிகளைக் கொண்டு நேரில் விளக்கிக் காட்டியும் பேரும் புகழும் பெற்றார். நம் இந்தியாவிலும் வடகோடி முதல் தென் கோடி வரையில் சென்று சொற்பொழிவாற்றினர். ஆங்கில மன்னரும் அவரைப் பாராட்டினர் எனில் மேலும் கூற வேண்டுமோ?

பெரியார் ஜகதீச சந்திரர் மரஞ் செடிகளைப் பற்றிக் கண்டறிந்த உண்மைகள் பலப்பலவாகும். அவைகளுள் மிகவும் சிறந்தது மரஞ் செடிகளும் நம்மைப் போல் இன்ப துன்பங்களை உணர்ந்து கொள்ளும் என்பது. சிறிது துன்புறுத்தினாலும் அவை நம்மைக் காட்டிலும் மிகுதியும் துன்புறுமாம்.

காபேஜ் (Cabbage) என்னும் கோஸ் மொட்டு இதழினைச் சிறிது கிள்ளிக் கொதிக்கின்ற நீரிலே நம் பெரியார் இட்டனர். அப்போது அது அடைந்த மரண வேதனையை மின்சாரக் கருவி மூலம் இங்கிலாந்திலே காட்டியபோது பெர்னட் ஷா என்னும் பெரியார் 'ஐயோ பாவம்!' என்று பெரிதும் வருந்தினராம். ஒரு முள்ளங்கிக் கிழங்கை ஒரு ஊசியால் குத்துவதால் அஃது எவ்வளவு துன்பப்படுகிறது என்

பதை அறிஞர் ஜகதீசர் நிகழ்ச்சித்தாள் ஆசிரியர் ஒருவருக்கு விளக்கிக் காட்ட, அப்போது அவர் பெரிதும் உளம் வருந்தி நின்றனராம். கள்ளினை அருந்தும் மக்கள் மயக்கமுறுவதைப் போன்று செடிகளும் மதுவின் மயக்கத்தால் தலைகால் தெரியாமல் ஆடுகின்றனவாம். விஷத்தைத் தந்தால் மக்களுக்கு இறப்பு நேர்வதைப் போல் மரஞ்செடிகளும் இறத்தல் கூடும் என்பதை நம் பெரியார் மின்சாரக் கருவியின் வாயிலாக விளக்கிக் காட்டினர். மருத்துவர் மக்களுக்குக் 'குளோரோபாரம்' என்னும் மயக்க மருந்தினைத் தந்து உறுப்புக்களை அறுத்து நோயினைத் தீர்த்தல்போல் மரஞ்செடிகளுக்கும் புரியலாம் என்பதை ஜகதீச சந்திரர் நேரில் செய்து காட்டியிருக்கின்றனர்.

மரஞ்செடிகளுக்கும் நம்மைப்போல் நரம்பு, தசை முதலியன உண்டு; மூச்சு விடுதற்கும் வாங்குதற்கும் ஏற்ற உறுப்புகள் உண்டு; அவைகளும் நம்மைப் போல் உண்ணுதல், உறங்குதல் முதலியன புரிகின்றன; ஆகிய பலவற்றையும் நம் ஜகதீசர் மின்சாரக் கருவிகள் மூலமாக விளக்கிக் காட்டியிருக்கின்றார்.

அந்த மின்சாரக் கருவிகள் மிக நுண்ணியனவாயும் ஒரு கைப் பெட்டிக்குள் அடங்கத் தக்கனவாயும் இருக்கின்றன. அக்கருவிகளை மேல் நாட்டினர் கண்டு அதிசயித்து, 'இக்கருவிகளை நீங்கள் எங்குப் பெற்றீர்கள்?' என்று வினவியபோது, நம் பெரியார் ஜகதீசர் "இவை எங்கள் இந்தியாவிலே இந்தியர்களாலேயே செய்யப் பெற்றவை" என்று பெருமிதத்தோடு கூறினாராம்.

இவ்விதம் நம் ஜகதீசப் பெரியார் பல புதுமைகளைக் கண்டறிந்து இவ்வுலகிற்கு உதவியதோடு, சுமார் இருபத்து மூன்று ஆண்டுகள் வரையில் ஊதியத்திலிருந்தே சிறுகச் சிறுகப் பொருள் சேர்த்தும், பல பெரியோர்களின் பொருளுதவி கொண்டும் ஒரு

விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்தை நிறுவியுள்ளனர். இவ்வுலகில் உள்ள பல இடங்களிலிருந்தும் மாணவர்கள் அந்த நிலையத்திற்கு வந்து தாவரங்களைக் குறித்த புதுமுறை விஞ்ஞான ஆராய்ச்சியை அறிந்து செல்கின்றனர்.

## 22. ஜகதீசர் திருப்பெயர் வாழ்க

அறிஞர் ஜகதீச சந்திர போஸ் ஒருமுறை தம் வாழ்க்கைத் துணைவியாரோடு மேல் நாடுகளுக்குச் சென்று வந்தனர். அவர் தம் இல்லக் கிழத்தியாரோடு 50 ஆண்டுகள் இனிதே வாழ்க்கை நடாத்தியதன் காரணமாக 1937-ஆம் ஆண்டு ஜனவரி 27-ஆம் நாள் அவர்கட்குப் பொன் விழா நிகழ்ந்தது. அது நிகழ்ந்த ஓர் ஆண்டிற்குள், அதாவது 1937-ஆம் ஆண்டு நவம்பர் 11-ஆம் நாள் அவர் இம்மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகம் விழைந்தனர். அவர் பிரிவைக் குறித்து வருந்தாதார் இலர். அவர் தம் பொன்னுடல் மறைந்ததெனினும் புகழுடல் நின்று நிலவும் அன்றோ! அவர்தம் திருப்பெயர் நீடூழி வாழ்க! வாழ்க!

மாணவ மாணவிகளே, அப்பெரியாரின் தளரா முயற்சியினைப் பின்பற்றி நீங்களும் நம் நாட்டுக்குப் பேரும் புகழும் கொண்டு வருவீர்களாக. உங்களாலும் நம் நாடு மேன்மையுறுவதாக. நம் நாடு முன்னேற்ற முறுவதற்கு வேண்டிய வழிகளைக் கண்டறிந்து பாடுபடுதலே நாம் நம் ஜகதீசப் பெரியாருக்குக் காட்டும் நன்றியறிதல் ஆகும்.


# ஸர் பி. ஸி. ராய்

## 1. தோற்றுவாய்

மாணவ மாணவிகளே!

நீங்கள் இதுகாறும், ஸர் ஜே. ஸி போஸ் என வழங்கும் பெரியார் ஜகதீச சந்திரரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தீர்கள். அவருக்கு நேர்ந்த பல இடையூறுகளையும் அவர் அவைகளைத் தம் தளரா உள்ளத்தாலும் இடையறு முயற்சியாலும வென்று தம் எண்ணத்தை நிறைவேற்றியதையும் நீங்கள் உணர்ந்தீர்கள். அவர் தம் உழைப்பால் கண்டறிந்து உதவிய விஞ்ஞான உண்மைகளையும், அவைகளால் அவர் அடைந்த பலப்பல சிறப்புக்களையும் நீங்கள் தெரிந்து கொண்டீர்கள். அவரைப்போல நம் நாட்டுக்குப் பேரும் புகழும் கொண்டுவர நீங்களும் இவ்விள வயதிலிருந்தே முயலவேண்டும். ஆனால், அவர் தம் வாழ்க்கை நிலைக்கும் உங்கள் வாழ்க்கை நிலைக்கும் வேறுபாடு பெரிதாய் இருக்கலாம். எனினும் இடையூறு நேர்ந்தபோது தளராத உள்ளமும், குன்றாத முயற்சியும் வேண்டும் என்பது எல்லோருக்கும் இன்றியமையாததே.

எல்லோருக்கும் ஓரேவிதமான துன்பம் நிகழ்வதில்லை. அத்துன்பத்தைப் போக்கும் வழியும் வெவ்வேறு வகையில் ஏற்படும். எவ்விதம் இருப்பினும் முயற்சி எதற்கும் வேண்டும். அம் முயற்சிக்கு ஓர் அளவே இல்லை. உள்ளம் சிறிதும் தளராமல், பொறுமையைக் கடைப்பிடித்து நீங்கள் எவ்வளவு முயற்சி புரிகின்றீர்களோ அவ்வளவு உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றமுறலாம். இதற்கு எடுத்துக்காட்டாக வேறொரு பெரியாரின் வாழ்க்கை வரலாற்றைக் கவனிப்போம்.



ஸர் பிரபுல சந்திர ராய்

இதோ இப்படத்தைக் கூர்ந்து நோக்குங்கள். இப்படத்தில் காணப்படும் பெரியார் **ஸர் பி. ஸி. ராய்** என்பவர். இவர் ஓர் ஏழைத் துறவிபோல தாடியும் மீசையுமாகக் காணப்படுகிறார்! இவர் ஒரு பெரிய கோடீஸ்வரரைப்போல் திகழலாம். ஆனால், இவர் அவ்விதம் வாழ விரும்பவில்லை. ஒருவகையில் துறவி போன்றே இவர் தம் வாழ்க்கையைக் கழித்தார். 'விஞ் ஞானத் துறையில் இவர் உழைத்த உழைப்போ மிகப் பெரிது; கண்டறிந்த உண்மைகளும் உலகத்துக்குப் பெரிதும் பயன்படுவன. இவர் அடைந்த பேரும் புகழும் அளப்பில. இவரால் நம் இந்தியநாடே செழிப் புற்று வருகிறது எனக் கூறலாம். இவர்தம் வாழ்க்கை வரலாறு வருமாறு:

## 2. பிறப்பு வளர்ப்பு

வங்காள மாகாணத்திலே, கூல்னு ஜில்லாவிலே, ராருலி—காட்டிபரா என்னும் சிற்றூரிலே பெரியார் **பிரபுல்ல சந்திர ராய்** தோன்றினர். அவரைப் பி. ஸி. ராய் எனவும் அழைப்பர். அவர் பிறந்தது 1861-ஆம் ஆண்டு ஆகஸ்டு 2-ஆம் நாள் ஆகும். அவர்தம் தந்தை யாரின் பெயர் **பாபு ஹரீஷ் சந்திர ராய்** என்பது.

பிரபுல்ல சந்திரரின் குடும்பம் பல தலைமுறைக ளாகப் புகழ் பெற்று வருவது. முகலாயர் ஆட்சி புரிந்த காலத்திலிருந்தே அக்குடும்பத்தினருக்கு நல்ல மதிப்பு உண்டு. பிரபுல்லரின் பாட்டனர் 'ஷெரிஸ்ட தார்' என்னும் பதவியில் இருந்தவர். அவர்தம் புதல் வரும் பிரபுல்லரின் தந்தையாரும் ஆகிய ஹரீஷ் சந்திர ராய் 'ஜமீன்தார்' என்னும் குறு நில மன்னராக விளங்கினர். பாபு ஹரீஷ் சந்திரர் பாரசீகம், சமஸ் கிருதம், அரபி முதலிய பல மொழிகளில் வல்லவர்; அன்றியும் ஆங்கிலமும் நன்கு அறிந்தவர்; எதையும் நெட்டுருப் போடுவதில் மிகவும்வல்லவர்; நல்ல இசைப் புலமையும் இவருக்கு இருந்தது. 'பிடில்' என்னும் இசைக் கருவியை வாசிப்பதில் இவருக்கு நல்ல

தேர்ச்சி உண்டு. இவர் தமக்குரிய வைதிகக் கொள்கையோடு மேல் நாட்டாரிடம் காணும் சிறந்த நலன்களையும் கடைப்பிடித்து ஒழுகுவார்.

ஹரிஷ் சந்திரர் நாட்டு முன்னேற்றத்திலும் பெரிதும் எண்ணமுடையவர். ஆதலின் அவர் அவ்வூரில் உள்ள குழந்தைகளுக்காகத் தம் பொறுப்பிலேயே பள்ளி ஒன்று ஏற்படுத்தி நடத்திவந்தார். அந்தப் பள்ளி இப்பொழுது ஆங்கில உயர்நிலைப் பள்ளியாக மாறியிருக்கிறது. இன்றும் அது அவர்கள் மாளிகையிலேயே இருந்து வருகிறது. அந்த மாளிகை கட்டப்பட்டு ஒரு நூற்றாண்டுக்குமேல் ஆகியும், அது நல்ல நிலைமையிலேயே இருக்கிறது. அவ்வூரிலே அந்த மாளிகையே எல்லாவற்றிலும் சிறந்ததுஎனில், அதன் அமைப்பையும் உயர்வையும் மேலும் விளக்கிக் கூற வேண்டியதில்லை.

பிரபுல்லருக்கு ஒரு தமையனாரும் இருந்தார். ஹரீஷ் சந்திரர் தம் இரு குழந்தைகளுக்கும் மிக இளம் பருவத்திலேயே பல அரிய செய்திகளைச் சொல்லிவைத்திருந்தார். அவ்விதம் அவ்விள வயதில் கேட்டவைகளைப் பிரபுல்ல சந்திரர், பெரியாரானபோதும் மறவாமல் நினைவில் வைத்திருந்து தக்க சமயம் நேர்ந்தபோதெல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்.

ஹரீஷ் சந்திரர், தம் இரு குழந்தைகளையும் முதலில் தமது பள்ளியிலேயே படிக்கவிட்டனர். பிரபுல்ல சந்திரர் ஒன்பது வயது வரையில் தம் தந்தையார் பள்ளியிலேயே படித்தார். பிறகு தந்தையார் தம் மைந்தர்கள் மேலும் கல்வியில் சிறந்திருக்கவேண்டித் தம் சொந்த ஊரை விட்டுக் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார்.

'ஹேர் பள்ளி' என்னும் பள்ளி நிலையத்திலே பிரபுல்லரும் அவர் தமையனாரும் சேர்ந்து படித்து வந்தனர். பிரபுல்லர் அப்பள்ளியில் கற்றதைவிடத் தம்

தந்தையரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டவைகளே அதிகம் என்று கூறலாம். ஹரீஷ் சந்திரர் தம் குழந்தைகளிடம் ஓர் அருமை நண்பரைப்போல் இருந்து, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் அன்போடும் அருமையோடும் விடையளித்து வந்தார். அதனால் பிரபுல்லர் பல பெரியோர்களின் சரிதங்களையெல்லாம் அந்த இளவயதிலேயே அறிந்திருந்தார். சிறந்த பாடங்களை நெட்டுருப்போடும் பழக்கத்தையும் ஹரீஷ் சந்திரர் தம் குழந்தைகளுக்கும் பழக்கி வைத்திருந்தார். ஆதலால் பிரபுல்லர் இளம் பருவத்திலேயே ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கிலப்புலவர் இயற்றியுள்ள நாடகங்களுள் பல பகுதிகளை மனப் பாடமாக ஒப்பிப்பார்.

## 3. எதிர்பாராத இடையூறு

இவ்விதம் பிரபுல்லர் அப் பள்ளியிலும், தந்தையார் மூலமாகவும் நான்கு ஆண்டுகள் கற்று உயர் நிலைப்பள்ளிக்குச் செல்லவேண்டிய நிலையில் இருந்தார். அப்போது அவருக்கு வயது பதின்மூன்று.

மேல் வகுப்புக்குச் செல்வதில் பெரும்பாலும் எல்லா மாணவர்களுக்கும் இன்பம் அதிகம். அதிலும் நடுத்தரப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லுவதில் மிகுதியும் இன்பம் இருத்தலைச் சொல்ல வேண்டியதே இல்லை. கல்வியில் பெரிதும் ஆர்வமுள்ள பிரபுல்ல சந்திரருக்கு அப்போது எவ்வளவு ஆனந்தம் இருந்திருக்கும் என்பதை நீங்களே எண்ணிப் பார்த்துக்கொள்ள வேண்டும். அவ்வளவு இன்பமும் துன்பமாக மாறுதற்கு நம் பிரபுல்ல சந்திரருக்கு ஓர் எதிர்பாராத இடையூறு நேர்ந்துவிட்டது. அஃது என்ன எனில், மக்களுக்குப் பெரிதும் துன்பத்தைத் தரத்தக்க சீதபேதி என்னும் கொடுமையான நோய் அப்போது அவரைத் துன்புறுத்தத் தொடங்கியது. இது மக்களை இலேசில் விடுவதில்லை. சிலருக்கு இஃது

5878a

எத்தகைய மருந்தினுலும் தீராத ஓர் இயற்கை நோயாக மாறிவிடுவதும் உண்டு. அத்தகைய நிலைமையினை நம் பிரபுல்ல சந்திரர் அடைந்துவிட்டார். பலவித மருந்துகளை அருந்தியும் அந்நோய் அவரை விட்டு நீங்கவேயில்லை. இத்தகைய நிலையில் அவர் எவ்விதம் பள்ளிக்குச் செல்வார்?

பிரபுல்ல சந்திரரின் பள்ளிக்கூட வாழ்க்கை இதனோடு நின்றுவிடும்போல் இருந்தது. இந்நோய் மாதக் கணக்கில் வளர்ந்து சென்று, பிறகு ஆண்டுகள் கணக்கிலும் தொடரத் துவங்கியது. கல்வியில் அளவில்லா ஆர்வமும், உள்ளத்தில் குறைவில்லா ஊக்கமும் வாய்ந்த நம் பிரபுல்ல சந்திரர், இத்துன்பத்தினைப் பொருட்படுத்தவில்லை. அவரால் பள்ளிக்குச் செல்ல இயலாதிருந்தும் வீட்டில் இருந்த வண்ணமே பல நூல்களையும் அவர் கற்பதற்கு விழைந்தனர்.

ஹரீஷ் சந்திரர் பல மொழிகளில் வல்லுநர் அல்லவா? அவர் அரிய நூல்கள் பலவற்றையும் வாங்கித் தமக்காகத் தம் வீட்டிலேயே ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தியிருந்தார். அந்நிலையத்தில் இருந்த நூல்களையெல்லாம் நம் பிரபுல்ல சந்திரர் ஒவ்வொன்ருகப் படிக்கத் துவங்கினுர்.

தங்கள் வீட்டிலுள்ள புத்தகங்களை மாணவர்கள் பெரும்பாலும் புரட்டிப் பார்க்க விழைதல் உண்டு. ஆனுல் எத்தகைய புத்தகங்களை அவர்கள் எடுப்பர்? எவ்விதம் படிக்க முயலுவர்? அவர்கள் பெரும்பாலும் எளிய கதைப் புத்தகங்களையே எடுத்துப் படிக்க முந்துவர்; அதிலும் மேற்போக்காகவே படிக்க விழைவர்; அல்லது அப்புத்தகங்களில் உள்ள படங்களை மட்டும் புரட்டிப் பார்த்துவிட்டு வைத்துவிடுதலும் உண்டு. பிரபுல்ல சந்திரரோ அவ்விதம் புரிதற்கு விரும்பவேயில்லை. அவர் தம் தந்தையார் மூலமாகக் கேட்டறிந்த சிறந்த புத்தகங்களையே எடுத்துப் படிக்

கத் துவங்கினர்; அன்றியும் பாடசாலைத் தேர்வுக்காகத் தம் பாடத்தைப் படிக்க விரும்பும் மாணவர்போல் அவைகளை ஆழ்ந்து கூர்ந்து படிக்கலாயினர். விளங்காத பகுதிகளை அவர் ஒரு முறைக்குப் பன்முறை படிப்பர்; இன்பமான பகுதிகளை உடனே நெட்டுருப் போட விழைவர்; அப்புத்தகங்களில் காணும் அரிய செய்திகளைப் பல முறை நினைத்துப் பார்த்து மகிழ்வர்.

பல இடையூறுகளையும் வென்று பேரும் புகழும் பெற்ற மேல் நாட்டுப் பெரியார்களின் சரிதங்களை யெல்லாம் அவர் ஒரு முறைக்குப் பன்முறை மகிழ்வோடு படித்தனர். எந்தப் பொருளையும் தன்னிடத்தே இழுத்துக்கொள்ளும் சக்தி பூமிக்கு உண்டு என்பதை எடுத்து உரைத்த பெரியாரான **நியூடன்** வரலாற்றினையும் சூரியன் பூமியைச் சுற்றி வரவில்லை, பூமியே சூரியனைச் சுற்றுகிறது என்பதை உணர்ந்து வெளிப்படுத்திய பெரியவராய **கலிலியோவின்** வரலாற்றினையும் நமது பிரபுல்ல சந்திரர் மிக்க ஆவலோடு பல முறை படித்ததாக அவரே கூறியிருக்கின்றார். **பென்ஜமின் பிராங்க்லின்** என்னும் அமெரிக்கப் பெரியாரின் சரிதமும் அவருக்குப் பெரிதும் இன்பத்தையும், உள்ளக் கிளர்ச்சியினையும் அளித்ததாம். அப்பெரியார் முதலில் ஓர் அச்சு நிலையத்தில் வேலை செய்து, பிறகு பெரிதும் முயன்று முன்னுக்கு வந்தவர் அல்லவா? இவர் சரிதத்தைப் பிரபுல்லர் படிக்கும்போது 'நானும் இவரைப்போல் வருந்தி உழைத்து நல்ல பேர் எடுப்பேன்' எனத் தமக்குள் கூறிக்கொள்வாராம்.

சரிதங்களை மட்டும் படித்துக் காலம் கழிக்க நம் பிரபுல்லர் விரும்பவில்லை. அப் பெரியார்களைப்போல் பல அரிய நூல்களை வருந்திக் கற்கவும் முயன்றார். ஆங்கிலத்திலே சிறந்த புலவர்களாகக் கருதப்படும் அறிஞர்கள் எழுதிய பல நூல்களையும் அவர் கருத்தூன்றிக் கற்றனராம். அவைகளுள் **கோல்ட்ஸ்மித்**

அடிஸன் என்னும் புலவர்கள் எழுதிய நூல்களை மிக்க ஆவலோடு படித்தனராம்.

இத்தகைய நூல்களைப் பெரும்பாலும் கல்லூரி மாணவர்களே படித்துப் பொருள் உணரக் கூடியவர்கள். கூர்ந்த அறிவும் குன்று முயற்சியும் வாய்ந்த நமது பிரபுல்லர் அந்த இளவயதிலேயே ஆசிரியர் துணையின்றித் தாமே அவற்றைப் படித்துணர்ந்தது பெரிதும் போற்றத்தக்கது.

தமக்கு இருந்த நோயினையும் பொருட்படுத்தாது நம் பெரியார் இவ்விதம் படிக்கும்போது தமக்குப் போதிய காலம் இல்லையே என வருந்துவராம். இராக் காலம் வீணாக உறக்கத்தில் கழிந்துவிடுதலை நினைந்து அவர் அதிகாலை மூன்று மணிக்கும் நான்கு மணிக்கும் எழுந்து படிக்க ஆரம்பிப்பாராம்.

ஆங்கிலத்தில் இலத்தீன் மொழிகள் அடிக்கடி வருவதால் அதையும் பொருள் தெரிந்து படிப்பதற்காகத் தமக்குக் கிடைத்த ஒரு பழைய இலத்தீன் புத்தகத்தை எடுத்து எவர் துணையும் இன்றித் தாமே படித்து அம்மொழியிலும் சிறிது பழக்கம் வைத்துக் கொண்டனராம்.

இவ்விதமெல்லாம் அவர் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் இரவும் பகலுமாகப் படித்தார். நல்ல காலம்! அதனால் அவருக்கு அந்நோய் அதிகப்படாமல் இருந்ததோடு நாளுக்குநாள் நோயின் வன்மை குறைந்து உடல் நலம் பெறவும் துவங்கியது.

## 4. உயர்நிலைக் கல்வியும் கல்லூரிப் படிப்பும்

போதிய உடல் நலம் பெற்றதும் பிரபுல்லர் கல்கத்தாவில் உள்ள ஆல்பர்ட் பள்ளியில் போய்ச் சேர்ந்தார். அந்தக் காலத்திலே கல்கத்தாவிலே உள்ள பள்ளிகளுள் அதுவே சிறந்து விளங்கியது. அந்தப்

பள்ளியை நடத்தி வந்தவர், பிரபுல்லரின் நுண்ணறிவையும், அவருக்குக் கல்வியில் இருந்த அளவிலா ஆர்வத்தையும் கண்டு, தம்மால் இயன்ற உதவிகள் பலவும் புரிந்து வந்தார். பிரபுல்லரும் அப்பெரியாரின் துணையால் மேன்மேலும் கல்வியில் சிறந்து விளங்கினர். ஆங்கில பாடத்தில் மட்டும் அல்லாமல் அவர் தேச சரிதம், பூமி சாத்திரம் முதலிய எல்லாப் பகுதிகளிலும் முதன்மை பெற்று விளங்கினர். ஆண்டுதோறும் அவர் பெறும் பரிசுகள் அவரால் தூக்க முடியாத அளவில் இருக்குமாம்.

பிரபுல்லர் வங்காள மொழியினையும் நன்கு கற்று வந்தார். ஒழிவு நேர்ந்தபோது வங்காள மொழியில் வல்ல பெரியோர்கள் எழுதியுள்ள புத்தகங்களையெல்லாம் அவர் ஆவலோடு படிப்பார்; ஆங்கிலத்திலும் தாய் மொழியிலும் அன்றாடம் வெளிவரும் புதினங்களையும் (செய்தித்தாள்—Newspapers) தவறாமல் படித்து வரும் பழக்கம் அவருக்கு இருந்தது. இவைகளோடு தம் தேக நலத்துக்காகக் காலை மாலை வேளைகளில் உலாவப் போதல், நீந்துதல் முதலியவைகளையும் அவர் ஒழுங்குபெறச் செய்து வந்தனர்.

ஒருவன் கல்வியில் நல்ல புலமை அடைதற்குப் பல நூல்களைக் கற்பதுமட்டும் போதாது; கேள்வி ஞானமும் இன்றியமையாதது. ஆதலால் பிரபுல்லர் அடிக்கடி பல இடங்கட்கும் சென்று, ஆங்காங்கு நடைபெறும் சொற்பொழிவுகளைக் கூர்ந்து கேட்டு வருவார்.

இராஜாராம் மோகன ராய் என்னும் பெரியாரால் தோற்றுவிக்கப் பெற்ற **பிரம்ம சமாஜ இயக்கம்** அந்தக் காலத்தே பல அறிஞர்களாலும் போற்றப்பட்டு வந்தது. **கேசவ சந்திர ஸென்** என்னும் பெரியார் அவ்வியக்கத்தை நடத்தி வந்தனர். அவர் நல்ல ஆங்கிலப் புலமை பெற்றிருந்ததோடு சொற்பொழிவாற்றும் வல்லமையும் உடையவராய் இருந்தார். கேசவசந்திரர்

பேசுகின்றார் என்றால் மக்கள் பெருங் கூட்டமாக வந்து நிரம்பி விடுவார்கள். பிரபுல்ல சந்திரர் அப் பெரியாரின் சொற்பொழிவுகளுக்கெல்லாம் தவறாமல் சென்று ஆவலோடு கேட்பார். ஆதலால் அவர் அப் பருவத்திலேயே சீர்திருத்த நோக்கம் உடையவராய் இருந்து பிறகு அந்த சமாஜத்திலே ஓர் உறுப்பின ராகவும் ஆகிவிட்டார்.

அக்காலத்தே அரசியற் சொற்பொழிவுகளும் ஆங்காங்கே நிகழ்ந்து வந்தன. மக்கள் அச்சொற் பொழிவுகளையும் மிக்க ஆர்வத்தோடு கேட்கலாயினர். **ஆனந்த மோகன் போஸ், சுரேந்திரநாத் பானர்ஜி** ஆகிய இரு பெரியார்களின் சொற்பொழிவுகளையும் பெரிதும் கேட்டு அரசியல் அறிவையும் பெறலானார்.

1879-ஆம் ஆண்டில் பிரபுல்லர் பள்ளி இறுதித் தேர்வில் தேறிக் கல்லூரிப் படிப்பை அவாவினார். மெட்ரோபாலிடன் என்னும் கல்லூரியானது **ஈஸ்வர சந்திர வித்தியாசாகரர்** என்னும் பேரறிஞரால் தோற்று விக்கப்பட்டது. அரசியற் சொற்பொழிவில் வல்ல சுரேந்திரநாத் பானர்ஜி என்னும் பெரியார் அப் போது அக்கல்லூரியின் தலைவராய் இருந்தார். நம் பிர புல்லருக்கு அப்பெரியாரிடமே பாடல் கேட்டல்வேண் டும் என்னும் அவா மிகுந்திருந்தது. ஆதலால் அவர் தம் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்ததும் மெட்ரோபாலிடன் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்கலானார்.

பிரபுல்ல சந்திரர் ஆல்பர்ட் பள்ளியில் படிக்கும் போதே **ஷேக்ஸ்பியர்** முதலிய ஆங்கிலக் கவிகளின் பாடல்களை நன்கு பயின்றிருந்தார். சமஸ்கிருதம், இலத்தீன் இவ்விரண்டு மொழிகளையும் ஒப்பு நோக் கிப் படித்து இரண்டிற்கும் உள்ள ஒப்புமைகளைக் கண்டு வியந்தார். இவைகளோடு நில்லாமல் பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய மொழிகளிலும் போதிய அறி வினைப் பெற்றிருந்தார். இத்தகைய அறிஞருக்குக்

கல்லூரிப் படிப்பில் சிறிதும் துன்பம் நேரக் காரணம் இல்லை அல்லவா? அவர் அங்கே மலை மீதிட்ட விளக்குப் போல் திகழலாயினர். சுரேந்திரநாத் பானர்ஜியின் சொற்பொழிவுகள் அவர்தம் உள்ளத்தே பசுமரத் தாணிபோல் பதியலாயின. 'பிரெஞ்சு தேசப் புரட்சியும் அப்புரட்சிக்குக் காரணமும்' என்னும் சொற்பொழிவே பிரபுல்லரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. இதனால் பிரபுல்லர் தம் பிற்கால வாழ்க்கையில் நாட்டு நலன் குறித்தும் பாடுபடலாயினர்.

சரித்திரப் புலமையும் காவிய உணர்ச்சியும் பெறுவதால் மட்டும் பயனில்லை என்றும் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு விஞ்ஞான அறிவே இன்றியமையாததென்றும் பிரபுல்லர் எண்ணினர். விஞ்ஞானக் கலைகளாகிய பூதநூல் (Physics) வேதிநூல் (Chemistry) முதலியன கற்பதற்கு மேட்ரோபாலிடன் கல்லூரியில் போதிய வசதிகள் இல்லாமையால அப்பகுதியை மட்டும் கல்கத்தா மாகாணக் கல்லூரியில் சென்று படிக்கப் பிரபுல்லர் விரும்பினர். அக்காலத்தே அவ்வாறு சென்று படிக்கும் பழக்கமும் இருந்தது.

பூதநூல் வேதிநூல் ஆகிய இவ்விரண்டினையும் அறிஞர் பிரபுல்லர் மிகவும் கருத்தோடு கற்கலாயினர். அப்போதே அவர் தம் நண்பர் ஒருவரோடு சேர்ந்து சிறு ஆய்வு நிலையம் ஒன்று ஏற்படுத்திக் கொண்டு விஞ்ஞான ஆராய்ச்சி புரியத் துவங்கினர். இவ்விதம் அவர் முயன்று வரும்போது விஞ்ஞானத் துறையில் ஒரு பகுதியை நன்றாகக் கற்று அதில் தேர்ச்சி பெறுதற்கு இங்கிலாந்துக்குச் செல்லுதலே தக்கது என அவர் எண்ணினர். பெரியார் ஜகதீச சந்திரரும் அவர்போன்ற பிற இந்திய மாணவர்களும் அப்போது இங்கிலாந்திலே மேல்நாட்டுக் கல்வியில் தேர்ச்சி பெற்று வருதலும் நமது பி. ஸி. ராய் அவர்கட்கு இவ்வெண்ணத்தைப் பெரிதும் வளர்த்திருத்தல் வேண்டும்.

## 5. இங்கிலாந்து செல்லுதல்

ஓர் இளைஞரைத் தொலை தூரம் உள்ள இங்கிலாந்துக்கு அனுப்ப இந்தியாவில் உள்ளவர்கள் இந்தக் காலத்திலும் பெரிதும் உள்ளம் தயங்குவர் எனில் அக்காலத்துப் பெற்ருேர் எளிதில் இணங்குவரோ? அன்றியும் அப்போது நம் பிரபுல்லரின் தந்தையார் சில எதிர்பாராத இடையூறுகளால் தம் செல்வத்தில் பெரும் பகுதியை இழந்து வறுமையால் துன்புறும் நிலையில் இருந்தார். பிரபுல்லருக்கோ எவ்விதமேனும் இங்கிலாந்துக்குச் செல்லவேண்டும் என்னும் எண்ணம் அதிகரித்துக் கொண்டே வந்தது. ஆதலால் அவர் பீ. ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் போதே ஒரு நாள் தம் கருத்தைத் தந்தையாருக்குத் தெரிவித்தார். போதிய பொருள் இன்மை குறித்து அதற்குத் தந்தையார் சிறிதும் உடன்படடிலர். பல அறிஞர்களின் சரிதங்களை யெல்லாம் இளமையிலே படித்தறிந்து தாமும் அவர்களைப்போல் பேரும் புகழும் பெறவேண்டும் என எண்ணங்கொண்டிருந்த பிரபுல்லருக்கு அப்போது பெரிதும் கவலை உண்டாகி விட்டது. இந்தியாவின் தாழ்ந்த நிலையினையும் பிற நாடுகளின் முன்னேற்ற நிலையினையும் சரிதவாயிலாகச் சுரேந்திரநாத் பானர்ஜியின்பால் கேட்டுத் தம்மால் இயன்ற தொண்டு புரிதல் வேண்டும் என்னும் உறுதியுடன் இருந்த பிரபுல்லரின் உள்ளம் எவ்விதம் அமைதியுடன் இருக்கும்? இங்கிலாந்து செல்லுதற்கு வேறு வழி உண்டா என்பதையே அவர்தம் உள்ளம் ஆராயத் தொடங்கியது.

ஜில்கிரைஸ்ட் என்னும் பெயருடன் ஓர் உதவிநிதி இருப்பதையும், அயல் நாடுகளுக்குச் சென்று படிப்பதற்கு அந்நிதி மாணவர்க்குத் துணை புரிவதையும் பிரபுல்லர் அறிந்தார். ஆனால் அதற்காக ஒரு தேர்வு உண்டு. அந்தத் தேர்வில் யார் நல்ல மதிப்புப் பெறு

கிறார்களோ அவர்களே அவ்விதம் சென்று கற்கமுடியும். ஆதலால் அவர் அதற்காகக் கற்கவேண்டியவைகளை யெல்லாம் இரவும் பகலுமாக வருந்திக் கற்கலாயினார். பிரபுல்லர் அவ்விதம் முயன்று வருவது, அவர் தம் தாய் தந்தையருக்கோ நண்பர்களுக்கோ வேறு எவர்க்கும் தெரியாது. தெரிந்தால் அவர்கள் அதையும் தடுத்து விடுவார்களோ என்னும் அச்சம்தான் அதற்குக் காரணமாக இருந்தல் வேண்டும். எனினும் அவர் தம் தமையனார் ஒருவருக்கு மட்டும் இச்செய்தியைச் சிறிது தெரிவித்திருந்தார். அவரும் அச்செய்தியை எவருக்கும் கூறாமல் இரகசியமாகவே வைத்திருந்தார்.

பீ. ஏ. தேர்வு முடிந்த சில நாட்களுக்குள் ஜில்கிரைஸ்ட் தேர்வும் துவங்கியது. அஃது இந்தியா முழுவதுக்கும் நடைபெறும் தேர்வு. இந்தியாவில் உள்ள பல மாணவருள்ளும் சிறந்த ஒரு சிலரையே அக்கழகத்தினர் தேர்ந்தெடுத்து அவர்கட்கு உபகாரச் சம்பளம் உதவுவர்.

ஒரு நாள் கல்கத்தா நகரில் உள்ள கல்லூரி மாணவர்கள் மிக்க பரபரப்புடன் தினசரிப் பத்திரிகை ஒன்றினைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் முகத்தில் அப்போது ஆச்சரியமும் உவகையும் குடிகொண்டிருந்தன. ஜில்கிரைஸ்ட் தேர்வில் பிரபுல்லர் தேறிவிட்டார் என்னும் செய்தியே அந்த மாணவர்களை அவ்வாறு செய்தது.

அவ்வாண்டு இந்தியா முழுவதுக்கும் இரு மாணவரே தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அவர்களுள் முதன்மை பெற்றவர் நம் அறிஞர் பிரபுல்லர்; மற்றொரு மாணவர் பம்பாய் மாகாணத்தவர். ஜில்கிரைஸ்ட் உதவி நிதிக் குழுவினர், ஒரு மாணவன் அயல் நாட்டிலே சென்று படித்தற்கு வேண்டிய செலவை ஏற்றுக் கொள்கின்றனர். பிரபுல்லர் குறைந்

தது நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளேனும் இங்கிலாந்திலே படித்தல் வேண்டும். அதற்கு வேண்டிய பொருளை அவருக்கு அக்கழகத்தினர் அளிப்பர் என்பதை அறிந்தால் பலரும் ஆச்சரியப்படுவது இயல்புதானே?

பிரபுல்லரின் கல்வித் திறனை அங்குள்ள மாணவர் பலரும் முன்னரே அறிந்திருப்பினும் அவர் இப்போட்டியில் கலந்துள்ளார் என்பது எவருக்கும் தெரியாது. ஆகையால் அவர்கள் அனைவரும் ஆச்சரியமே அடைந்தனர். பிரபுல்லரின் பெற்றோரின் மகிழ்ச்சியைக் குறித்துச் சொல்லவேண்டியதே இல்லை. எனினும் தம் மைந்தரை இங்கிலாந்துக்கு அனுப்புதல் என்பது அவர்கட்குச் சிறிது துன்பமாகத்தான் இருந்தது. அறிவிற் சிறந்த அவர்தம் பெற்றோர்கள் தம் மைந்தரின் விருப்பத்திற்கு முடிவில் இணங்கினார்கள். ஆதலால் பிரபுல்லர் ஒரு நல்ல நாளிலே மிக்க மகிழ்வோடு இங்கிலாந்துக்குப் பயணங் கொள்ளலாயினர்.

நடை, உடை, உணவு முதலிய பலவற்றிலும் பிரபுல்லர் நம் நாட்டுப் பழக்க வழக்கங்களையே கடைப்பிடித் தொழுகுபவர். குளிர் நாடாகிய இங்கிலாந்திலே இவ்விதம் இருத்தல் இயலாதல்லவா? இங்கிலாந்து மக்களோடு அளவளாவி இருத்தற்குத் தக்கபடி நம் பிரபுல்லர் இங்கேயே சிறிது பழகிக்கொள்ள முயன்றார். முதலில் அவர் மேல்நாட்டினரைப்போல் உடை அணிந்துகொள்ளப் பழகிக் கொண்டார்; முள்ளும் கத்தியும்கொண்டு, நாற்காலியில் அமர்ந்து மேஜையின்மேல் உணவு வைத்துக்கொண்டு சாப்பிடும் பழக்கத்தையும் சிறிது கையாண்டனர். கோதுமை ரொட்டியைக் கையால் பகிர்ந்து உண்ணாமல் கத்தியால் அறுத்து முள்போன்ற கருவியினால் குத்தி எடுத்துச் சாப்பிடுவது முதலிய மேல் நாட்டுப் பழக்கங்கள் அவருக்கு முதலில் சிறிது துன்பத்தையே தந்தன.

பிரபுல்லர் இவ்விதமெல்லாம் தம்மைப் பழக்கிக் கொண்டபின் தம் தாய் தந்தையரிடமும், நண்பர் உறவினர் முதலியவர்களிடமும் விடைபெற்று இங்கிலாந்துக்குச் செல்லக் கப்பலில் ஏறினர். கப்பல் பழக்கம் சிறிதும் இல்லாத ஒருவருக்கு முதன் முறையாகக் கப்பலில் செல்லும்போது 'கடல் நோய்' என்னும் ஒருவித நோய் வருதல் உண்டு. அத்தகைய நோய் நம் பிரபுல்லரையும் வருத்தத் துவங்கியது. அப்போது அவர் எழுந்து உணவு கொள்ளவும் இயலாத நிலையில் இருந்தார். கப்பலில் இருந்த தலைமை வேலையாள் ஒருவன் அவர்மீது பெரிதும் இரக்கம் கொண்டு சிறிது பாலும் ரொட்டியும் கொண்டுவந்து உதவினனாம். நாள் செல்லச் செல்ல அவர் உடல் நன்னிலையினை அடைந்தது. அக்கப்பலும் குறித்த காலத்தே இங்கிலாந்தினை அடைந்தது.

## 6. இங்கிலாந்து வாழ்க்கை

அறிஞர் பிரபுல்ல சந்திரர் 1882-ஆம் ஆண்டு இங்கிலாந்தை அடைந்தனர். அப்போது பெரியார் ஜகதீச சந்திரரும், மற்றும் சில வங்காள இளைஞர்களும் மேல்நாட்டுக் கல்வியின் பொருட்டு அங்கே வந்து தங்கியிருந்தனர். ஆதலால் பிரபுல்லர் இங்கிலாந்தினை அடைந்ததும் சுமார் ஒரு வாரம் வரையில் அவர்களோடு அளவளாவியிருந்தனர். அப்போது பிரபுல்லர் அந்நகரைச் சுற்றிப் பார்க்க விழைந்தனர். அவர் அவ்விதம் செல்லும்போது அங்குள்ள தானைக்காரர்களின் பணிவு வாய்ந்த தன்மை அவரைப் பெரிதும் மகிழ்வித்தது. அவர்கள் தங்களை அரசாங்க அதிகாரிகளாக எண்ணிக்கொள்ளாமல் பொது மக்களுக்குத் தம்மால் இயன்ற தொண்டினைப் புரியுந் தன்மையில் விளங்கினர்களாம். பிரபுல்லர், தாம் செல்ல வேண்டிய இடத்துக்கு வழி தெரியாமல் தயங்கிய போது அவர்கள் உடனே வந்து உதவி புரிந்தனராம்.

சில இடங்களில் இருந்த தாணுக்காரர்கள் அங்கே ஓடிக்கொண்டிருந்த 'பஸ்' என்னும் வாடகை மோட்டார் வண்டிகளை நிறுத்தி, 'இவரை ஏற்றிக்கொண்டு போய் இன்ன இடத்தில் இறக்கு' எனவும் அவ் வண்டிக்காரர்களுக்குக் கட்டளை இட்டனராம்.

சுமார் ஒரு வாரம் வரையில் பிரபுல்லர் அந்நகரைச் சுற்றிப் பார்த்த பிறகு தாம் தங்கி யிருப்பதற்கு வேண்டிய ஒரு விடுதியைத் தேடி அமர்த்திக் கொண்டார். இங்கிலாந்துக்குச் செல்லும் இந்திய மாணவர்களில் பெரும்பாலோர், மேல் நாட்டு உயர்நிலை மக்களைப் போல் ஆடம்பரமாக வாழவே விரும்புவர். ஆனால் நம் பிரபுல்லரோ இருபத்தொரு வயதுள்ள இளைஞராக இருந்தும் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையையே விரும்பினர். அவர் எதன் பொருட்டும் வீண் செலவு செய்ததே யில்லை. அவர் மிகவும் குறைந்த வாடகையுள்ள அறையினையே தமக்கு இருப்பிடமாகக் கொண்டார். உணவுக்காகவும் அவர் மிகுதியும் செலவு செய்ததேயில்லை. பிரபுல்லர் தங்கி யிருந்த வீட்டுக்கு உரியோரும் மிகவும் நல்லவராகவே அமைந்தனர். அவர்கள் அவ்வீட்டின் பிற்பகுதியைத் தமக்கு இடமாகக் கொண்டு முற்பகுதியைக் குடிக் கூலிக்கு விட்டனராம். காற்று வெளிச்சம் முதலிய பல நலன்களுக்கும் வீட்டின் முற்பகுதியே சிறந்ததாக இருக்கும் என்பதை விளக்கிக் கூறவேண்டியதில்லை. முற்பகுதியில் உள்ள இவ்வித வசதிகளுக்காக அவ்வீட்டினர் குடிக்கூலியையும் உயர்த்திக் கேட்டதில்லையாம். அவ்வீட்டாரின் குழந்தைகளும் அவரிடம் மிகவும் அன்பாக நடந்து கொண்டார்களாம். மேற்ஜோடு முதலியன கிழிந்துவிட்டால் அவ்வீட்டில் உள்ள பெண் குழந்தைகள் அவைகளை அன்போடு கேட்டு வாங்கி அருமையோடு தைத்துச் செப்பனிட்டுத் தருவார்களாம். இத்தகைய நலன்களால் அறிஞர் பிரபுல்லர் தங்கியிருந்த வீடு அவர்தம் கல்லூரிப்

படிப்பை மேன்மேலும் வளர்த்துக் கொள்வதற்குப் பெரிதும் ஏற்றதாக இருந்தது.

## 7. பல்கலைப் படிப்பும் பட்டம் பெறுதலும்

இங்கிலாந்தினை அடைந்த நம் பிரபுல்ல சந்திரர் எடின்பர்க் பல்கலைக் கழகச் சார்பில் நடைபெறும் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்க விழைந்தார். அவர் அங்கே சென்றதும், 'விஞ்ஞானத்தோடு வேறு சில பகுதிகளையும் பாடமாகக் கொள்ளலாமா' என்று சிறிது சிந்தித்தார். காவியங்களைக் கருத்தூன்றிக் கற்பதிலும், தேச சரித்திரங்களை மேன்மேலும் அறிவதிலும் அவருக்கு இயல்பிலேயே விருப்பம் அதிகம். அவ்விதம் இருந்தும் நம் நாட்டின் முன்னேற்றத்துக்கு விஞ்ஞான அறிவு மிகவும் அவசியமாக இருத்தல் கண்டு, அவ்வொன்றிலேயே தம் எண்ணம் முழுவதையும் செலுத்துதல் வேண்டும் என்று அவர் முடிவு செய்தார்.

பிரபுல்லர் எடின்பர்க் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானம் கற்கும்போது அக்கழகத்தே அமர்ந்திருந்த பேராசிரியர் அனைவரும் பெரிதும் பேரும் புகழும் பெற்ற விஞ்ஞானிகளாக விளங்கினர். அவருடன் ஒரு சாலை மாணவராய் இருந்தவர்களும், பிறகு பேரும் புகழும் பெறக்கூடிய அறிஞர்கள்; அவர்களில் சிலர் அவ்விதமே பிறகு சிறந்து விளங்கினர். இத்தகைய சிறந்த அறிவாளிகளுக்கிடையே நம் பிரபுல்லர் திலகம் போல விளங்கினர். அவர் அங்கே விஞ்ஞானக் கல்வியிலேயே இரவும் பகலும் தம் காலத்தைப் போக்கிய போதும் நம் நாட்டின் முன்னேற்றத்தைக் குறித்த எண்ணமானது அவருக்கு ஒரு புறம் தூண்டிக் கொண்டேயிருந்தது. இங்கிலாந்திலும் பிற இடங்களிலும் நிகழும் பாராளுமன்ற (Parliament) நிகழ்ச்சிகளையெல்லாம் அவர் கூர்ந்து நோக்குவார். இங்கிலாந்திலே உள்ள தொழிற்சாலைகளையும் இயந்திரசாலை

களையும் காணும்போது நம் நாட்டின் நிலை அவருக்கு நினைவு வரும். அங்கே உள்ள மாடமாளிகைகளையும் அவைகளில் வாழும் செல்வர்களையும், சீமாட்டிகளை யும் நோக்கும்போது நம் நாட்டின் இழிந்த நிலையினை எண்ணி எண்ணி நம் பிரபுல்லர் மனம் வருந்துவார். இவைகளுக்கெல்லாம் விஞ்ஞான வளர்ச்சியே காரணம் என்பதை உணரும்போது மேலும் வருந்திக் கற்கத் துவங்குவார்.

இவ்விதம் இரண்டு ஆண்டுகள் கழிந்தன. மூன் றும் ஆண்டு துவங்கியது. அதுவே பீ. எஸ்ஸி. பட் டத் தேர்வுக்குச் செல்லும் ஆண்டு. தேர்வுக்குரிய ஆண்டின்போது கருத்தூன்றிக் கற்க முயல்வது எல்லா மாணவர்களுக்கும் இயல்பே. அவ்விதமே நம் பிரபுல்லரும் கற்கத் துவங்கினர். அப்போது அவர் எண்ணம் தடையுறுதற்கு அங்கே ஒரு நிகழ்ச்சி நேர்ந் தது.

அந்தப் பல்கலைக் கல்லூரியின் தலைவர் ஒரு காலத்தே இந்திய அரசாங்க நிகழ்ச்சி நிலையத்தில் அமைச்சர் (The Secretary of State for India) தொழிலில் இருந்தவர் ஆதலால், இந்தியாவில் நிகழும் நிகழ்ச்சிகளில் அவர் கண்ணுங் கருத்தும் உடையவ ராய் இருந்தார். இந்திய தேச சரிதம் கற்கும் நீங்கள் 'சிப்பாய்க் கலகம்' என்பது குறித்துக் கேள்வியுற் றிருக்கலாம். அந் நிகழ்ச்சியைக் காரணமாகக் கொண்டு, சிப்பாய்க் கலகத்துக்கு முன்னும் பின்னும் இந்தியா இருந்த நிலைமையைப்பற்றி ஒரு சிறந்த கட்டுரை வரைபவருக்குப் பரிசு தருவதாகப் பல்கலைக் கழகத் தலைவர் தெரிவித்திருந்தார். நம் பிரபுல்லர் இத னைக் கேள்வியுற்றூர். அவருக்கு இது, 'வெறு வாய் மெல்லும் ஒருவருக்கு ஒரு பிடி அவல் கிடைத்த' தன்மைபோல் இருந்தது. ஆதலால் அவர் பீ. எஸ்ஸி. தேர்வைக்கூடப் பொருட்படுத்தவில்லை. நம் நாட்டின் நிலைமையினை இங்கிலாந்திலே உள்ளவர்களுக்கு

உணர்த்துதற்கு இதுவே நல்ல தருணம் என அவர் எண்ணினர். அறிஞர் சுரேந்திரநாத் பானர்ஜியினிடம் பாடம் கேட்டபோதே நம் பிரபுல்லர் சிப்பாய்க் கலகத்தின் காரணத்தை யெல்லாம் நன்கு ஆராய்ந்து வைத்திருந்தார். எனினும் அவர் அதனோடு நில்லாது அதற்காக வேண்டிய செய்திகளை யெல்லாம் மறுபடியும் பல நூல்களையும், பாராளுமன்ற நிகழ்ச்சிகளையும் புரட்டிப் பார்க்கலாயினர். உலக அரசியல் நிகழ்ச்சிகள், இந்தியாவின் பொருளாதாரத் திட்டம் முதலியன குறித்த நூல்களையும் இரவும் பகலுமாக வருந்திப் படித்தார். இவ்விதம் அவர் படித்தும், பல குறிப்புக்களைத் தொகுத்துக் கொண்டும், தாம் முன்னரே பெற்றிருந்த நல்ல ஆங்கில மொழிப் புலமையையும் துணை கொண்டு ஓர் அழகிய கட்டுரை வரைந்தார்.

பரிசிற் குழுவினர் அக் கட்டுரையைப் படித்துப் பார்த்து அவரைப் பாராட்டினர். ஆனால் அக்கட்டுரை அக் குழுவினரின் கருத்துக்கு இணங்கி இராததால் அவருக்குப் பரிசில் கிடைக்கவில்லை. பிரபுல்லர் அதனோடு நின்று விடாது அதைத் தம் சொந்தப் பொறுப்பில் நூல் வடிவமாக வெளிப்படுத்தினர். அதைப் படித்த அறிஞர் பலரும் அவரைப் புகழ்ந்தனர். சில சிறந்த பத்திரிகைகள் அவரைப் பாராட்டி எழுதின. பிரபுல்லருக்கு நல்ல கட்டுரை எழுதும் வன்மையும் உண்டு என்பதை அப்போது பலரும் உணர்ந்தனர். தமக்கு அத்தகைய ஆற்றல் உண்டு என்பதைப் பிரபுல்ல சந்திரரும் அப்போதுதான் நன்கு தெரிந்து கொண்டார்.

இந்தக் கிளர்ச்சி நிகழ்ந்த ஆண்டிலேயே அவர் பீ. எஸ்ஸி. தேர்வுக்குச் சென்று, அதிலும் வெற்றி பெற்றனர். பிரபுல்லர் தம் ஆசிரியர்களிடமிருந்து சிறந்த அன்பையும், தம் தோழர்களிடமிருந்து நல்ல மதிப்பையும் பெற்று விளங்கினர். பல்கலைக் கழகச் சார்பிலே உள்ள வேதி நூல் அவையில் (University

Chemical Societies) அவர் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற செயல் ஒன்றே இதனை நன்கு வலியுறுத்தும்.

நம் பிரபுல்லர் அங்கேயே மேலும் இரண்டு ஆண்டுகள் வருந்திக் கற்று நல்ல மதிப்போடு டி. எஸ்ஸி. என்னும் பட்டமும் பெற்றார். அந்த ஆண்டு அங்கே இவர் ஒருவரே அவ்விதம் பட்டம் பெற்றவராம். அன்றியும் அக்காலத்தே இந்தத் தேர்வுக்குச் செல்லுகின்றவர்களே மிகவும் அருமையாக இருந்தனர்.

அறிஞர் பிரபுல்லருக்கு விஞ்ஞானத் துறையில், அதிலும் வேதிக் கலையில், நல்ல புலமை இருப்பதைக் கண்ட ஆசிரியன்மார்களும் பிறரும் அவரைப் பெரிதும் பாராட்டினர். நம் பிரபுல்லர் அங்கேயே மேலும் ஓராண்டு இருந்து இரசாயனப் பொருள்களைப் பகுத்துணரும் செயல் முறைகளில் தேர்ச்சி பெறுதல் நலம் என அங்குள்ளோர் யாவரும் கருதினர்.

ஜில்கிரைஸ்ட் பரிசு ஐந்து ஆண்டுகளுக்கே கொடுக்கப்படும் எனினும் அக்குழுவினர் நம் பிரபுல்லர் பொருட்டு மேலும் ஐம்பது பவுன் அதிகமாகத் தருவதாக வாக்களித்தனர். அவர் அதனோடு "ஹோப்" என்பவரால் ஏற்படுத்தப் பெற்ற உபகாரச் சம்பளமும் பெற்று, ஓர் ஆண்டு அதிகமாக இருந்து, வேதிப் பொருள்களை ஆராய்ந்து பார்க்கும் முறையிலும் சிறந்து திகழ்ந்தார்.

நம் பிரபுல்லரின் அறிவின் திறமையைக் கண்டு ஆசிரியன்மார் பலரும் வியந்தனர். பல புதுமைகளை ஆய்ந்தறியும் சக்தி இவருக்கு உண்டு என்பதை அப்போதே அங்குள்ள ஆசிரியர் ஒருவர் நன்கு உணர்ந்தனர். பிரபுல்லருக்கு ஓர் உயர்ந்த உத்தியோகத்தை வாங்கித் தரப் பல்கலைக் கழகத் தலைவர் பெரிதும் முயன்றனர். அக்காலத்தே அவ்வுத்தியோகங்கள் ஐரோப்பியருக்கே தருவதாய் இருந்ததால் அத்தலைவ

ரின் முயற்சி வீணுயிற்று. இவ்வுத்தியோகத்தின் காரணமாகப் பிரபுல்லர் அங்கேயே இரண்டொரு மாதங்கள் தங்கியிருக்க நேர்ந்ததால் அவரிடமிருந்த ஒரு சிறு பணத் தொகையும் அங்கேயே செலவழிந்து விட்டது. ஆதலால் நம் அறிஞர் பிரபுல்ல சந்திரர் 1888-ஆம் ஆண்டு வெறுங்கையோடு இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குத் திரும்பலாயினர்.

## 8. ஆசிரியர் பதவியும் ஆற்றிய தொண்டும்

பல பட்டங்களோடு இந்தியாவை அடைந்த நம் பிரபுல்ல சந்திரர் முதலில் ஓர் ஆண்டு ஓய்வாகவே இருக்கவேண்டியவராஞர். அப்போது அவர் ஜகதீச சந்திர போஸ் அவர்களின் ஆதரவில் இருந்து அங்கே கிடைத்த நூல்களையும், வெளியீடுகளையும் படித்துக் காலங் கழித்தார். பிறகு அவருக்கு வங்காள மாகாணக் கல்லூரியில் ஒரு பெரிய பதவி கிடைத்தது. அஃது ஒரு பெரிய பதவி அன்று; துணைப் பேராசிரியர் பதவியேயாகும். ஊதியம் மாதம் 250 ரூபாய்களுக்குமேல் இல்லை.

இவரினும் தகுதியில் குறைந்தவர்களெல்லாம் பேராசிரியர் பதவியில் இருக்க, இவருக்கு இப்பதவியைத் தந்தது குறித்துப் பலரும் வருந்தினர். நம் பிரபுல்லரும் இதற்காக மாகாணக் கல்வித் தலைவரிடமும் நேரில் சென்று முறையிட்டனர். அக்காலத்தே பேராசிரியர் பதவி ஐரோப்பியருக்கே தருவதாய் இருந்ததால், அவர் செய்த முயற்சிகள் பலவும் பயனில்லாமலே போய்விட்டன. ஆதலால் அவர் அப்போது அதனை ஏற்றுக்கொள்ள வேண்டியவரே ஆயினர். எனினும், அவர் தம் தொழிலில் சிறிதும் ஊக்கம் குன்றவில்லை.

தம்மிடம் கற்கும் மாணவர்கள் எவ்விதமேனும் பட்டம் பெற்றுவிட்டால் போதுமென அவர் எண்ண

வில்லை. அம்மாணவர்களுக்கு விஞ்ஞானத் துறையில் மிக்க ஆர்வத்தை உண்டாக்குவதே தமது முதற் கடமை என அவர் எண்ணினார். அவர் எல்லோரிடமும் குழந்தைபோன்று நெருங்கிப் பழகுவார். எத்தகைய ஐயங்களையும் மாணவர்கள் அவரிடம் அச்சம் இன்றிக் கேட்டுத் தெளிவர். விஞ்ஞான அறிவில் மிகுதியும் குறைந்திருந்தவர்கட்கும் அவர் பெரிதும் ஊக்கம் தந்து அவர்களை அதில் வல்லவர்களாக்க முயன்றார். இயல்பிலேயே விஞ்ஞான அறிவு பெரிதும் வாய்ந்தவர்களுக்கு அவர் மேலும் மேலும் ஊக்கம் அளித்து அவர்கட்கு வேண்டிய உதவிகளையும் புரிந்தார்.

பிரபுல்லரின் ஆழ்ந்த கல்வியும், கற்பிக்குந் திறனும், குன்றாத முயற்சியும், உள்ளம் சலிக்காத உழைப்பும், எளிய வாழ்க்கையும் மாணவர்களுக்கு அவரிடம் பெரிதும் மதிப்பைத் தந்தன. நம் நாட்டுப் பழங்கால மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களை எவ்விதம் தெய்வம்போல் மதித்தனரோ அவ்விதம் அந்த மாணவர்கள் அவர்களிடம் பயபக்தியுடன் நடந்து கொண்டார்கள். தாம் கூறியவைகளைச் செயல் முறையிலும் நடத்திக் காட்டியதால் அந்த மாணவர்களுக்கு அவர் சொற்களில் மதிப்பு அதிகரிக்கச் செய்தது.

நம் நாட்டின் நிலைமையினையும், நம் நாட்டினர் விஞ்ஞான அறிவு பெறவேண்டிய அவசியத்தினையும், விஞ்ஞான நூலின் எளிமையினையும், அதனால் அடையலாகும் பலனையும் நம் பிரபுல்லர் சமயம் நேர்ந்தபோதெல்லாம் அந்த மாணவர்களுக்கு விளக்கிக் கூறுவார். அதனால் விஞ்ஞான வளர்ச்சிக்காகவே ஒரு மாணவர் குழு ஏற்பட்டது. அக்குழுவினர் தங்களை உயர்த்திக் கொண்டது மட்டுமன்றிப் பிற மாணவர்களையும் தூண்டுதல் செய்தனர். பிரபுல்ல சந்திரப் பெரியார்போன்றே தாங்களும் தங்கள் நாட்டின்

விஞ்ஞான வளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும் என அவர்கள் துணிந்தனர். உத்தியோகத்தால் உயர்வு பெறல்வேண்டும் என்னும் எண்ணத்தை அவர்கள் அறவே ஒழித்தனர். ஆதலால் பெரியார் பிரபுல்லர் அந்த மாணவர்களையும் துணையாகக் கொண்டு விஞ்ஞான உலகில் பல அரிய பெரிய செயல்களைப் புரியலாம் என எண்ணினர்.

## 9. பிரபுல்லரின் வாழ்க்கை நெறி

பெரியார் பிரபுல்லர் இங்கிலாந்துக்குச் செல்லும் போதே அவர் தம் தந்தையார் பொருள் முட்டுப்பாட்டினால் பெரிதும் துன்புற்றிருந்தார் அல்லவா? ஆதலால் ஆறு ஆண்டுகள் கழித்துத் திரும்பி வந்தபோது அவர்தம் தந்தையார் பட்டிருந்த கடன்கள் அதிகப் பட்டிருக்குமே அன்றிக் குறைந்திருக்கக் காரணம் இல்லை. அன்றியும் நமது பிரபுல்ல சந்திரர் ஓர் ஆண்டு வேலையில்லாமலும் இருந்தார். பிறகு கிடைத்த ஊதியமும் மாதம் ஒன்றுக்கு 250 ரூபாய்களே. எனினும் அந்த வருமானத்தைக்கொண்டு தம்மால் இயன்ற வரையில் மிகவும் சிக்கனமாக வாழ்ந்து தம் தந்தையாரின் கடன்களைச் சிறிது சிறிதாகத் தீர்த்துக் கொண்டு வந்தார். இதனோடு அவர் மாதந்தோறும் இரண்டொரு மாணவர்க்கேனும் பொருளுதவியும் புரிவர்.

இவ்விதம் ஐந்தாண்டுகள் சென்றன. பிரபுல்லர் அப்போது மாணவர்களை முன்னுக்குக் கொண்டு வருதலிலும், வேதிநூல் முறைப்படி இரசாயனப் பொருள்களை ஆராய்ந்து பார்ப்பதிலும் மிகத் தீவிரமாகத் தம் கருத்தைச் செலுத்தி வந்தார். அந்தச் சமயத்திலே அவர்தம் அருமைத் தந்தையார் மண்ணுலகு நீத்து விண்ணுலகினை விழைந்தனர்.

தந்தையாரின் இறப்பு பிரபுல்லருக்குப் பெரிதும் துன்பத்தைத் தந்தது. தம் தந்தையாரின் பிரிவுக்கு

உரிய இறுதிக் கடன்களை யெல்லாம் அவர் செய்து முடித்ததும், தம் முன்னோர்களின் நில புலங்களை விற்றுத் தம் தந்தையார் வைத்துச்சென்ற கடன்களை யெல்லாம் தீர்த்தார். அதன் பிறகு அவர் மறுபடியும் தமது விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபடலானார்.

தம் தந்தையாரை இழக்கும்போது பிரபுல்லருக்கு முப்பத்து மூன்று வயது இருக்கலாம். எனினும் அவர் அது வரையில் திருமணம் செய்துகொள்ளவில்லை. அதற்குப் பின்னரும் அவர் திருமணம் புரிந்துகொள்ள விரும்பவில்லை. எல்லா நாடுகளும் விஞ்ஞான வளர்ச்சிக்காகத் தம்மால் இயன்ற தொண்டினைப் புரிந்து வருகின்றன. நம் இந்தியா அதற்காக ஒன்றும் செய்வதில்லை. அதை நினைந்து நம் பெரியார் பிரபுல்லர் விஞ்ஞான வளர்ச்சிக்காகவே தம் ஆயுட் காலம் முழுவதையும் செலவழிக்கத் தீர்மானித்தார். ஆதலால் அவர் திருமணம் செய்துகொள்ள விரும்பாமல் மிகச் சிக்கனமான முறையில் தம் குடும்ப வாழ்க்கையைக் கழித்தார்; ஓழிந்த நேரத்தில் எல்லாம் இரசாயனப் பொருள்களை ஆராய்வதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்.

பெரியார் பிரபுல்லர் சுமார் ஆறு ஆண்டுகள் மேல்நாட்டுப் பழக்க, வழக்கங்களில் ஈடுபட்டிருந்தும், இந்தியாவிலே அவைகளைச் சிறிதும் கையாளவில்லை. அவர் வீட்டிலே தற்கால நவீன நாகரிக முறைக்கு ஏற்ற வகையில் படங்களோ விநோதப் பொருள்களோ வைக்கப்படவில்லை. பழைய மேஜை ஒன்றும் சில நாற்காலிகளுமே அங்கே இருந்தன. புத்தகங்கள் மட்டும் அலமாரிகளில் அடுக்கடுக்காகக் காணப்பட்டன. அவர் உடுத்திக்கொள்ளும் ஆடையும் குறைந்த விலையில் வாங்கத் தக்க பருத்தி நூல் ஆடைகளே. அவர் தாம் செய்யவேண்டிய வேலை ஒவ்வொன்றுக்கும் ஒரு கால அளவை வகுத்துக்கொண்டு அதன் படியே செய்து முடிப்பார்.

அவர் அதிகாலையில் எழுந்ததும், "நான் இந்த நாளை எவ்விதம் நல்ல வழியில் கழிக்கலாம்" என எண்ணுவாராம். இரவு படுக்கச் செல்லும்போதும், "இந்த நாள் நல்வழியில் பயன்பட்டதா" என நினைத்துப் பார்ப்பாராம். கருத்தூன்றிப் படிக்க வேண்டிய நூல்களை அவர், காலை 5-45 மணி முதல் 9 மணி வரையில் படிப்பார். பிறகு அவர் சிறிது நேரம் உலாவப் போவார். தினசரிப் பத்திரிகை படிப்பதற்கு அவர் அன்றாடம் அரை மணி நேரம் செலவழிப்பார்; மாலையில் பூந்தோட்டத்திலே சிறிது நேரம் ஓய்வு கொள்வார்.

'முயலும் ஆமையும்' என்னும் கதையை நீங்கள் கேட்டிருப்பீர்கள். முயலைப் போல் அவசரமாகச் சிறிது நேரம் வேலை செய்து, பிறகு ஓய்ந்து போவதை விட ஆமையைப் போல் பொறுமையும் விடா முயற்சியும் கொண்டு உழைப்பதே நல்லது என்று பிரபுல்லர் அடிக்கடி சொல்லுவாராம்.

## 10. அரிய பெரிய செயல்கள்

நம் பெரியார் பிரபுல்ல சந்திரர் எதையும் தற்செயலாகக் கண்டுபிடித்துவிடவில்லை. அவர் தமது நுண்ணுணர்வாலும், விடாமுயற்சியாலும் அல்லும் பகலும் வருந்தி உழைத்தே பல அரிய உண்மைகளைக் கண்டறிந்து உலகினருக்கு உதவினர். அவர் இங்கிலாந்தில் மாணவராக இருந்தபோதே சுமார் நான்கு ஆண்டுகளாக இரசாயனப் பொருள்களைத் தம் நுண்ணுணர்வால் கூட்டியும் வகைப்படுத்தியும் ஆராய்ந்து பார்த்தலில் பெரிதும் முயன்றிருக்கின்றார். 'இவர் ஒரு காலத்தே ஏதாவது ஒரு புதுமையைக் கண்டு உலகிற்கு உதவுவர்' என்று அப்போதே அவர் ஆசிரியர்களுள் ஒருவர் எண்ணியதையும் நீங்கள் அறிவீர்கள். 'நான் இம்முயற்சியில் மேலும்மேலும் ஈடுபட்டு இரசாயன சம்பந்தமான உண்மைகளுள் சிலவற்றையே

னும் கண்டறிவேன்' என்று நம் பிரபுல்லரும் அப்போதே உறுதி கொண்டிருந்தார். ஆதலால் அவர் வங்காள மாகாணக் கல்லூரியை அடைந்தபோதும் அவ்வெண்ணத்தை விடாமல் ஊக்கமும் உறுதியும் கொண்டவராய் இரசாயன ஆராய்ச்சியில் பெரிதும் ஈடுபட்டு வந்தார்.

இவ்விதம் நம் பெரியார் முயன்று வந்ததன் பயனாக 1895-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு பெரிய புதுமையைக் கண்டறிந்தார். அப்புதுமை இன்னது என்பதை இள வயதுடைய உங்களுக்கு விளக்கிக் கூறவேண்டியதில்லை. மேல் வகுப்புகளில் அவைகளை நீங்கள் உணர்ந்து இன்புறலாம். எனினும், ஒருவகையில் சுருக்கமாகவேனும் தெரிந்துகொள்ளுதல் நலமே. பாதரசம் என்பது உங்களுக்குத் தெரியும். காலகக் காடி (Nitric Acid) என்பதையும் உங்களில் பலர் அறிந்திருக்கலாம். இவ்விரண்டினையும் கலப்பதால் என்னென்ன வேறுபாடுகள் விளையும் என்பதைப் பல நூற்றாண்டுகளாக விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்தும் முடிவுகண்டிலர். இந்த ஆராய்ச்சியில்தான் நம் பெரியார் முதன் முதலில் வெற்றிபெற்றார்.

மேலே கூறிய அவ்விரண்டையும் நம் பெரியார் தாம் எண்ணிய ஒரு வகையில் கலந்து பார்த்தார். அப்போது மஞ்சள் நிறம் வாய்ந்த பளிங்கு போன்ற ஒரு பொருள் காணப்பட்டது. இதைக் குறித்தே இவ்வுலகில் உள்ள விஞ்ஞானிகள் அனைவரும் பெரிதும் நம் பெரியாரை வியக்கலாயினர். விஞ்ஞானத்தில் மேலும் பல உண்மைகளை அறிந்துகொள்வதற்கு இது பெரிதும் பயனுடையதாய் இருக்கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு பெரியார் பிரபுல்ல சந்திரரே பலவகைச் சரக்குகளை உண்டாக்கிக் காட்டினர்.

இரசாயனப் பொருள்கள் ஒன்றிலிருந்து ஒன்றாக மாறுதல் கூடும் என்பதை நம் பெரியார் பிரபுல்லர்

விஞ்ஞான உலகுக்கு விளக்கிக் காட்டினார். இனி உலோகப் பொருள்களையும் அவ்விதமே மாற்றலாம் என்ற முடிவுக்கு விஞ்ஞானிகள் வந்தனர். செம்பைப் பொன்னாக்குவது என்னும் விந்தையைக் குறித்து நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம். அது பொய்யன்று, உண்மையில் செய்யக்கூடியதே என்பது இதனால் பெறப்படுகிறது.

நம் அறிஞர் கண்டறிந்த இந்த இரசக் காலக ஆராய்ச்சியின் (Mercurous Nitrite) காரணமாக அவர் மறுபடியும் ஐரோப்பாவுக்குச் செல்லநேர்ந்தது. ஐரோப்பாவிலே ஆங்காங்கு நிகழும் வேதிக் கலை ஆராய்ச்சிகளை யெல்லாம் நம் பெரியார் நேரில் சென்று பார்த்து வருதல் நலம் என அரசாங்கத்தார் எண்ணினர். 1904-ம் ஆண்டு அவர் இரண்டாம் முறையாக மேல்நாடுகளுக்குச் சென்றனர். இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய பல நாட்டு விஞ்ஞானிகளும் அறிஞர் பிரபுல்ல சந்திரரை அன்போடு வரவேற்றனர்; அவர் கண்டறிந்த உண்மையினையும் பெரிதும் போற்றிப் புகழ்ந்தனர்.

பெரியார் பிரபுல்ல சந்திரரே இவ்விதம் கண்டறிந்தவை நூற்றுக் கணக்கில் இருக்கின்றன. இவ்விதமே அவரும் அவர்தம் மாணவர்களுமாகச் சேர்ந்து கண்டறிந்தவைகளும், மாணவர்களே தனித்து ஆராய்ந்து கண்டறிந்தவைகளும் மிகப் பல. அவைகளின் வரலாறுகளை யெல்லாம் நீங்கள் பின்னரேனும் படித்தறிதல் நலம்.

## 11. வங்காள இரசாயனத் தொழிற்சாலை

அறிவிற் சிறந்த நம் பெரியார் இவைகளால் பெற்ற பட்டங்கள் மிகப் பல. அவைகளை அவர் ஒரு சிறிதும் விரும்பவே இல்லை. நம் நாடு பிறநாடுகளைப்போல் செல்வத்தால் சிறந்திருக்க வழியுண்டா?

என்பதையே அவர் ஆராயமுயன்றார். இவ்வெண்ணம் அவருக்கு இளமையிலிருந்தே இருந்து வருவதை நீங்கள் உணர்ந்திருக்கலாம். அவர் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்த உடனே இதைக் குறித்து அல்லும் பகலும் எண்ணினார். ஆண்டுதோறும் கோடிக் கணக்கான பவுன்கள் செலவழித்து அயல் நாடுகளிலிருந்து நாம் பல பொருள்களையும் பெறுதலை நம் பெரியார் கூர்ந்து நோக்கினார். அந்தப் பொருள்களை நம் நாட்டிலேயே செய்துகொள்ளுதற்கு வேண்டிய வசதிகள் நம் நாட்டில் இருத்தலையும் அவர் நன்கு அறிந்தார். ஆனால் இவைகளைச் செய்து கொள்ளுதற்கு வேண்டிய விஞ்ஞான அறிவும், அறிவைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையும் நமக்குச் சிறிதும் இல்லாதிருத்தலே காரணம் என அவர் தெள்ளிதின் உணர்ந்தார். ஆதலால் சமயம் நேரும்போதெல்லாம் அவர் தம் மாணவர்களுக்கும் நண்பர்களுக்கும் நம்நாட்டின் நிலையினை ஆர்வத்தோடு விளக்கிக் கூறி வந்தார்.

உள்ளம் உருகிக் கூறிய அவர்தம் பொன்மொழிகள் பயன்பட்டன. பல மாணவர்கள் விஞ்ஞான அறிவில் சிறந்து திகழலாயினர். அவர்கள் துணைகொண்டு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த நம் பெரியார் எண்ணினர். இங்கிலாந்திலிருந்து முதன் முறையாகத் திரும்பி வந்த நான்கு ஆண்டுகளுக்குள் நம் பெரியார் இத்தொழிற்சாலையைத் துவங்கினர்.

நம் பெரியார் இதற்காகக் கோடிக் கணக்கில் பணம் வேண்டுமென எண்ணவில்லை. அப்போது அவர் பெற்ற ஊதியம் மாதம் 250 ரூபா என்பது நமக்கு நன்கு தெரியும்; தந்தையார் கடனையும் அவர் இந்தப் பொருளைக்கொண்டே தீர்த்துவர முயன்றதும் நமக்குத் தெரியும்; மாணவர்கட்குப் பொருளுதவியும் இவ்வூதியத்தைக் கொண்டே அவர் புரிந்து வந்துள்ளார். இவைகளோடு தம் வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாச் செலவையும் மிகச் சிக்கனமாகச்

செய்து நான்கு ஆண்டுகளில் அவர் எண்ணூறு ரூபா சேர்த்து வைத்திருந்தார். அந்தச் சிறிய தொகையைக் கொண்டே தம் இல்லத்திலேயே 1892-ஆம் ஆண்டு நம் பெரியார் ஒரு சிறிய தொழில் நிலையத்தைத் துவங்கினார். உண்மையான அன்பும், உள்ளக் கிளர்ச்சியும் வாய்ந்த மாணவர்கள் நம் பெரியாருக்கு உறுதுணையாய் நின்று உதவினர்.

இன்றியமையாத இரண்டொரு மருத்துவப் பொருள்களையும், இரசாயனச் சரக்குகளையும் செய்ய முயன்ற அந்தத் தொழில் நிலையம் நம் பெரியாரின் நுண்ணறிவின் திறனாலும், குன்றா முயற்சியாலும் மாணவர் தம் கூட்டுறவாலும் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கியது. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குள் 50 லட்சம் ரூபா மதிப்புள்ள பெரிய தொழிற்சாலையாய் அது மாறிவிட்டது. அந்த நிலையத்தில் செய்யப்படாத பொருளே இல்லை என்னலாம். தொழில் செய்வதற்கு வேண்டிய கருவிகளைக்கூட அவர்களே செய்துகொள்கின்றனர். அந்தத் தொழில் நிலையம் அறுபது ஏக்கர் பரப்புடைய ஒரு பெரிய நிலப்பகுதியில் அழகாகக் கட்டப்பெற்று விளங்குகின்றது. இந்த உலக யுத்தத்தின்போது அது புரிந்த உதவி மிகவும் பெரிதாக இருந்தது.

அந்நிலையம் முதலில் நம் பெரியாருக்கே உரிமையுடையதாய் இருந்தது. அது பெருந் தொகையான வருவாயினைத் தரத் துவங்கியபோது, அதனைப் பலரும் அடைந்து பயனுறவேண்டும் என்னும் பரந்த நோக்கத்தால் நம் பெரியார், அந்தத் தொழில் நிலையத்தை ஒரு கூட்டுத் தொழிற்சாலை யாக்கி, அதில் பலரும் சேர்ந்துகொள்ளும்படி செய்துவிட்டார். இன்று அது இந்தியாவிலுள்ள இரசாயனத் தொழிற்சாலைகள் பலவற்றுள்ளும் தலைசிறந்து விளங்குகிறது. அதில் செய்யப்படும் பொருள்கள் நம்நாட்டுக்கு அருகிலுள்ள நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## 12. இந்தியக் கலவை நூல்

இந்தியாவில் உள்ளவர்கள் விஞ்ஞான உணர்ச்சி சிறிதும் இல்லாதவர்கள் என்னும் தவறான எண்ணத்தைப் போக்கி, இந்தியர் மிகப் பழங் காலத்திலிருந்தே விஞ்ஞான உணர்ச்சி உடையராய் இருந்திருக்கின்றனர் என்பதை மேல் நாட்டினருக்கு விளக்கிக் காட்டியவர் நம் பெரியார் ஆவர். அங்ஙனம் அவர்கட்கு விளக்கிக் காட்டுதல் மட்டும் அன்றி இந்திய இளைஞர்கட்கும் இதனை உணர்த்துதல் நலம் எனவும் அவர் எண்ணினார்.

கற்றலில் குன்றாத ஊக்கம் வாய்ந்த நம் பெரியார், பல மொழிகளில் வல்லவராய்த் திகழ்ந்த நம் பெரியார், அயல் நாட்டிலிருந்து அவ்வப்போது வெளிவரும் அரிய பெரிய நூல்களையெல்லாம் அவாவுடன் படித்து வரும் இயல்பு வாய்ந்த நம் பெரியார், தமக்கு ஓழிவு நேர்ந்த போதெல்லாம் நம் நாட்டில் உள்ள பழைய நூல்களையும் ஆழ்ந்து படித்து வருவாராயினர். அவ்விதம் படிக்கும்போது இந்தியர் மிகப் பழங்காலத்திலிருந்தே வேதிக் கலையிலே வல்லவராய் இருந்ததை அவர் உணர்ந்தார். ஆகவே அவர் நம் நாட்டுப் பழைய நூல்களையெல்லாம் இதே நோக்கத்தோடு ஆழ்ந்து படிக்கலாயினர். இவ்விதம் அவர் பதினைந்து ஆண்டுகள் வருந்தி உழைத்துப் பல அரிய செய்திகளை யெல்லாம் திரட்டி இரண்டு நூல்கள் வெளியிட்டார். முதற் புத்தகம் 1902-ஆம் ஆண்டு வெளி வந்தது. அதன் பிறகு ஐந்து ஆண்டுகள் கழித்து இரண்டாவது புத்தகம் வெளிவந்தது.

அப்புத்தகங்களில் பல சிறந்த கருத்துக்கள் வெளிவந்துள்ளன. அவைகளுள் ஒரு சில வருமாறு: இந்தியர்கள் இரசவாதத்திலும், இரசவாதப் பரீட்சையிலும் வல்லவர்கள். இரசவாத சம்பந்தமான நூல் ஒன்று புத்தர் காலத்திலேயே நாகார்ச்சுனசித்தர் என்

பவரால் இயற்றப்பட்டிருக்கிறது. பிறகு வந்த பௌத்த துறவிகள் இரசாயனக் கலையை மேற்கொண்டிருந்தனர். 17-ஆம் நூற்றாண்டுவரை இரசவாதத்தைக் குறித்த ஆராய்ச்சி இந்தியாவிலே இருந்துவந்திருக்கிறது. இரச சம்பந்தமாகப் புரியும் ஆராய்ச்சிகளுக்கெல்லாம் முதன் முதல் விதைவிதைத்தவர் இந்தியரேயாவர்.

இந்த இரு நூலினையும் மேல் நாட்டினர் படித்துப் பார்த்தனர். அவர்களுக்கு அப்போதுதான், இந்தியர்கள் மிகப் பழங் காலத்திலிருந்தே வேதிக் கலையில் வல்லவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது ஒரு சிறிது தெரியவந்தது. இந்த நூலைப் படித்ததும் ஒரு மேல்நாட்டறிஞர் 'விஞ்ஞானத்திலே ஒரு புதிய அத்தியாயம் சேர்க்கப்பட்டது' என்று புகழ்ந்தார். "பதின்மூன்றாம் நூற்றாண்டில் இருந்த இந்தியர்கள் அதிகமாக அறிந்திருக்கிறார்கள்" என மற்றொரு மேல் நாட்டறிஞர் கூறினார். நம் நாட்டில் உள்ள தாய் மொழியை நன்கு படித்தறியாத பல இந்தியர்களும் அப்போதுதான் நம் நாட்டின் பெருமையை ஒரு சிறிது உணரலாயினர்.

## 13. பெரியாரின் பிறசெயல்கள்

பெரியார் பிரபுல்ல சந்திரர், விஞ்ஞானத்தில் பல புதுமைகளை வெளியிட்டார்; தொழிற் கல்வியை வளர்த்தார்; விஞ்ஞானக் குழுவினரைக் கூட்டினார்; இந்தியாவின் பெருமையினை நிலைநாட்ட நூல்களை எழுதினார்; பிணி, பஞ்சம் முதலியவற்றால் மக்கள் துன்புற்றபோது தாமே சென்று பல அரிய தொண்டுகளை ஆற்றினார்; தம் தந்தையார் நடாத்திய பாடசாலையை முன்னினும் சிறப்பாக நடாத்திவந்தார்; பல இடங்களிலும் விஞ்ஞான நிலையங்களைத் தோற்றுவித்தார்; மேல்நாடுகளுக்கு மேலும் இருமுறை சென்று விஞ்ஞான அறிவு விளக்கத் தொண்டுகள் ஆற்றினார்.

வங்காள மாகாணக் கல்லூரியிலே 28 ஆண்டுகள் இளைஞர்களுக்குப் பலவகையிலும் உணர்ச்சியினை உண்டாக்கினார்; இந்தியாவிலும் பல இடங்களுக்கும் சென்று சொற்பொழிவாற்றினார்; சென்னைக்கு வந்த போது "சென்னை இளைஞர்களே, விஞ்ஞான அறிவை வளர்த்துக்கொள்ள வங்காளத்துக்கு வாருங்கள்," என நம் நாட்டு இளைஞர்களை நோக்கி அன்போடு கூறினார். சென்னைப் பல்கலைக் கழகத்தினர் அவர் செய்த சொற்பொழிவுக்காகப் பொருளுதவி புரிந்தனர். அதனை அவர் இங்குள்ள மாணவர்களே பெறும்படி பரிசில் நிதியாக வைத்துச் சென்றனர்.

குல உயர்வு தாழ்வுகளையும், மதச் சண்டைகளையும் அவர் வெறுத்தார்; தீண்டாமையை ஒழிக்கப் பெரிதும் பாடுபட்டார். வங்காள விஞ்ஞானிகளைக் குறித்து அவர் ஓர் அழகிய புத்தகம் எழுதி யிருக்கிறார்; அதில் தம்முடைய அநுபவங்களைத் தெளிவாக விளக்கிக் கூறுகிறார். விஞ்ஞானத்தின் அவசியத்தைக் குறித்தும் அவர் ஓர் அருமையான புத்தகம் இயற்றி இருக்கிறார். விஞ்ஞானம், சரிதம் முதலிய எல்லா நூல்களையும் நாம் நம் தாய் மொழியிலேயே கற்றல் நலம் என்று அவர் தெரிவிக்கிறார்.

நம் பெரியார் பிரபுல்ல சந்திரர் நாட்டுப்பற்றும் மிகுதியும் உடையவர்; நூல் நூற்றலில்கூட விருப்புடையவர். அவர்தம் அருங் குணங்களையும் அரிய செயல்களையும் ஸர். ஜே. ஸி. போஸ், இரவீந்திரநாத் தாகூர், காந்தியடிகளார் முதலிய பலரும் பலபடப் பாராட்டிக் கூறியிருக்கின்றனர்.

இத்தகைய சிறப்புக்கள் பலவும் பெற்ற பெரியார், பெரிதும் செல்வத்தைத் தொகுத்தும் அவைகளை யெல்லாம் பிறருக்காகவே பயன்படுத்தித் தாம் இறக்கும் வரையில் எளிய வாழ்வே வாழ்ந்து வந்தார்.

"பயனற்றவற்றைப் படியாதே; பிறர் தயவை எதிர்பாராதே; உன் வாழ்க்கையைத் திருத்திக் கொள்ள இப்போதே முயல்; முக்கியமான வேலையை கைவிடாதே; இறக்கும்வரை ஏதேனும் தொண்டு செய்." இவைகள் நம் பெரியார் பிரபுல்ல சந்திரர் அவர்தம் பொன் மொழிகள்.

நம் பெரியார் இந்த உலகப் போர் நடைபெறும் போதும் உயிருடன் இருந்தார். 16-6-1944 அன்று அவர்தம் பொன்னுடலம் மண்ணுக்கு இரையாகியது; எனினும் அவர்தம் புகழுடலம் என்றும் அழியாமல் நின்று நிலவும். 84 வயது வரையில் இருந்து நம் நாட்டுக்குப் பெரிய புகழையும் நமக்குப் பல நன்மைகளையும் புரிந்து மறைந்த பெரியாரின் பொன்மொழிகளை மாணவ மாணவிகளே, நீங்கள் சிறிதும் மறவாதீர்கள். அவர்தம் சரிதத்தை மற்றும் ஒரு முறை படியுங்கள். ஒரு முறைக்குப் பன்முறை படியுங்கள். ஆவன புரிந்து அப்பெரியாரைப்போல் பேரும் புகழும் பெற இப்போதே முயலுங்கள்.



ஸ்ரீநிவாச இராமானுஜனர்

கணித நூல் அறிஞர்

# ஸ்ரீநிவாச இராமானுஜனர்

## 1. துவக்கம்

தமிழ் நாட்டின் தவமணிகளே,

நீங்கள் இதுவரையில் ஸர் ஜே. ஸி. போஸ், ஸர் பி. ஸி. ராய் ஆகிய இரு பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை ஒருவாறு உணர்ந்திருக்கிறீர்கள். இவ்விருவரும் இரு வேறு வகையில் விஞ்ஞான வளர்ச்சிக்காகப் பாடுபட்டு நம் நாட்டுக்குப் பெருமையைத் தந்து, தாங்களும் பேரும் புகழும் பெற்றார்கள். நீங்களும் இவர்களைப்போல் முயன்று முன்னேற்றம் உறுதல் வேண்டும். ஆனால் இவர்கட்கு அமைந்த பலவித வாய்ப்புக்கள் உங்களில் பலருக்கு இல்லாமல் இருக்கலாம். அது குறித்து நீங்கள் மனச் சோர்வு கொள்ளுதல் கூடாது. உள்ளக் கிளர்ச்சியும் முயற்சியும் கொண்டு நீங்கள் உழைக்க ஆரம்பித்தால், உங்களுக்கு வேண்டுவன யாவும் தாமே வந்து உங்களை அடையும். இதற்கு எடுத்துக்காட்டாகப் பெரியார் பலரின் சரிதங்களைக் கூறலாம். எனினும், நம் மாகாணத்திலேயே பிறந்து, நம் மாகாணத்திலேயே வளர்ந்து, பல துன்பங்களையும் உற்று, முடிவில் பேரும் புகழும் பெற்ற ஒரு வீர இளைஞரின் சரிதம் உங்களை ஊக்குதற்குப் போதிய நிகழ்ச்சிகளை அளிக்கும் என நான் எண்ணுகின்றேன்.

மாணவ மாணவிகளே,

இந்தப் படத்தினைப் பாருங்கள். இது ஸ்ரீநிவாச இராமானுஜனர் என்னும் ஓர் இளைஞரின் படம். இவர் இத்தகைய நிலையினை அடையக் கனவிலும் எண்ணியிருக்கமாட்டார். இங்கிலாந்து செல்லவோ, பட்டம்

பதவிகளைப் பெறவோ, இவருக்கு எத்தகைய வாய்ப்பும் இயல்பிலே அமைந்திருக்கவில்லை. இவ்வினைஞருக்குக் கணித நூலிலே இருந்த பேராவலும், அதற்காக இவர் மேற்கொண்ட முயற்சிகளும் இவரை இத்தகைய உயர் நிலைக்குக் கொண்டுவந்து விட்டன. இவரைப் போற்றாத கணித நூல் அறிஞர் இலர். இவர் கண்டறிந்த கணித முறைகள் யாவும் இன்றும் பொன்னேபோல் போற்றப்படுகின்றன. இவர் ஒரு சாதாரண எளிய குடும்பத்திலே பிறந்தவர்; அன்றியும் நம் தமிழ் நாட்டிலேயே பிறந்த ஒரு தமிழ் இளைஞர். இவர்தம் வாழ்க்கை நிலையும் இவர் முன்னேற்ற முற்ற விதமும் ஒரு வகையில் புதுமையாகவே இருக்கும். இவர்தம் வாழ்க்கை வரலாறு வருமாறு:

## 2. பிறப்பு வளர்ப்பு

நம் தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகிய கோயம்பூதூரிலே ஈரோடு என்னும் நகரிலே ஸ்ரீநிவாச ராமானுஜனர் பிறந்தார். அவர் பிறந்தது 1887-ஆம் ஆண்டு டிசம்பர் 27-ஆம் நாள் ஆகும். அவர்தம் தாய்வழிப் பாட்டனர் ஈரோட்டிலே முன்சீப் கோர்ட்டு என்னும் நீதி மன்றத்திலே அமீனா (Bailiff) உத்தியோகத்தில் இருந்தார். தம் புதல்வியாருக்கு நெடுநாட்களாகப் பிள்ளைப்பேறு இன்மை குறித்து அவர், தம் ஊருக்குச் சிறிது தூரத்திலே எழுந்தருளியுள்ள நாமகிரி தேவியை நோக்கி வரம் கிடந்தார். அதன் பலனாக நம் இராமானுஜனர் பிறந்தார்.

இராமானுஜரின் தந்தையார் பெயர் ஸ்ரீநிவாச ஐயங்கார் என்பது. அவர் கும்பகோணத்திலே ஒரு துணி வர்த்தகரிடம் கணக்குப்பிள்ளையாக இருந்தார். ஆதலால் இராமானுஜர் ஈரோட்டிலே பிறந்தார் எனினும், அவர்தம் இளம் பருவ வாழ்க்கை பெரும்பாலும் கும்பகோணத்திலேயே கழிந்தது.

அறிஞர் இராமானுஜர் இயல்பிலேயே கணித நூற் புலமை யுடையவராய் இருந்தும், இளம் பருவத்திலே அத்தகைய புலமையில் ஒரு சிறிதும் அவரிடமிருந்து வெளி வரவில்லை. சாதாரணமாக இளங் குழந்தைகள் எவ்விதம் இருத்தல் கூடுமோ அவ் விதமே அவரும் தம் வாழ்க்கையைக் கழித்து வந்தார்.

நம் தமிழ் நாட்டு முறைமைப்படி இராமானுஜர் ஐந்து வயதிலே ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டார். அங்கே அவர் இரண்டு ஆண்டுகள் படித்தார். திண்ணைப் பள்ளிகளில் கால், அரைக் கால், வீசம், முந்திரி முதலிய வாய்பாடுகளும், நெல்லிலக்கம், பொன்னிலக்கம், குழிக்கணக்கு முதலிய பலவும் கற்பிப்பதுண்டு. ஞாபக சக்தி மிகுதியும் வாய்ந்திருந்த நம் இராமானுஜர் அவைகளின் அமைப்பைக் கூர்ந்து கவனித்தும், அவைகளை முற்றிலும் நெட்டுருப்போட்டும் இருத்தல் கூடும். அவருக்கு இயல்பாக உள்ள கணித நூல் அறிவுக்கு இவைகள் பெரிதும் துணை புரிந்திருக்கலாம். எனினும், அந்த வயதிலும் அவர் தம் புலமையை எவருக்கும் புலப்படுத்தியதாகத் தெரியவரவில்லை.

இராமானுஜர் பிறகு கும்பகோணத்திலே உள்ள அரசாங்கப் பள்ளியிலே சேர்க்கப்பட்டார். அவர் காலத்திலே 'ஆரம்ப பாடசாலைத் தேர்வு' என அரசாங்கத் தேர்வு ஒன்று ஐந்தாம் வகுப்பிலே நிகழ்ந்து வந்தது. இராமானுஜர் தமது ஒன்பதாவது வயதிலே அந்தத் தேர்வுக்குச் சென்று தஞ்சை ஜில்லாவிலே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். அதன் காரணமாகப் பெற்ற உபகாரச் சம்பளத்தைக் கொண்டு இராமானுஜர் மேல் வகுப்பிலே சேர்ந்து கல்வி பயிலத் துவங்கினார். அவர் அவ்வகுப்பிலே சிறந்த மாணவர்களுள் ஒருவராய்த் திகழ்ந்த காரணத்தால் பிள்ளைகள் சிலர் அவரை நாடி அவர் வீட்டுக்கு

வருதல் உண்டு. இராமானுஜரோ எவரிடமும் அதிகமாகப் பேசும் பழக்கம் இல்லாதவர்; எப்போது பார்த்தாலும் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் உள்ளவர் போல் தோன்றுபவர். ஆதலால், அவர் அந்த மாணவர்களைக் கண்டு அவர்களோடு வெளியில் வந்து அளவளாவிப் பேசவும் இயலாதவராய், பகைணியின் வாயிலாகவே அவர்களிடம் பேசி அவர்களை அனுப்பி விடவே விழைவார். இவ்வித நிலையிலேயே இவர்தம் இளம் பருவம் பெரும்பாலும கழிந்தது.

## 3. கணிதநூல் அறிவின் துவக்கம்

இராமானுஜர் ஆறும் வகுப்புக்கு வரும்வரையில் கணிதத்திலே தமக்குள்ள ஆர்வத்தை எவரிடத்தும் வெளிப்படையாகப் புலப்படுத்தியதாகத் தெரியவில்லை. அக்காலங்களில் அவர் எவரிடமும் அதிகமாகப் பேசுவதில்லை; எப்போது பார்த்தாலும் ஏதோ ஆழ்ந்த எண்ணத்தில் இருப்பவர்போல் தோன்றினர். ஆனால் அவர் ஆகாயத்திலே உள்ள நட்சத்திரங்களைக் குறித்தும், அவைகளின் தூரத்தைக் குறித்தும் பல கேள்விகள் கேட்பதுண்டு.

ஏழாம் வகுப்பிலே படிக்கும்போது இராமானுஜர் தம் நண்பர்களிடம் கணிதத்தைக் குறித்து உரையாடியிருக்கிறார். அவர் ஒரு நாள் தம் நண்பர்களை நோக்கி, 'கணித நூலிலே முடிவான பாகம் எது?' என வினவினராம். அதற்கு அவர்கள் தங்களுக்கு அப்போது எது எது கடினமானதாகத் தோன்றியதோ அதனதன் பெயரைச் சொல்லத் துவங்கினராம்.

இராமானுஜர் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது அவர்தம் கணித ஆசிரியர், "ஒரு எண்ணினை அதே எண்ணால் வகுத்தால் விடை ஒன்று என்னும் எண்ணே வரும்" என்று கூறினர். ஐந்தை

ஐந்தால் வகுத்தாலும், எழுநூற்றெட்டினை எழுநூற்றெட்டால் வகுத்தாலும் விடை ஒன்று என்னும் எண்தானே வரும்? இதையே அந்த ஆசிரியர் தம் மாணவர்களுக்குக் கூறினார். அப்போது ஏதோ ஆழ்ந்த எண்ணத்தில் இருந்த இராமாநுஜர் உடனே எழுந்து, "சுன்னத்தைச் சுன்னத்தால் வகுத்தால் $(0 \div 0)$ ஒன்று வருமா?" என ஆவலோடு வினவினாராம். இது மிகவும் பெரிய கேள்வி. இவ்விதம் வகுத்தால் என்ன விடை வரும் என்பதைக் கல்லூரிக் கணித மாணவர்களுக்கு ஒருவாறு விளக்கலாம். அத்தகைய கேள்வியை இராமாநுஜர் கேட்டது அந்த ஆசிரியருக்கு மிகவும் ஆச்சரியத்தையே விளைவித்திருக்கும். கணித நூலின் நுட்பமான பகுதிகளை நம் இராமாநுஜர் அந்த வகுப்பிலேயே அறியத் துவங்கிவிட்டார் என்பது இதிலிருந்து ஒருவாறு தெரியவருகிறது.

உயர் நிலைக் கல்வியின் துவக்கமாகிய ஒன்பதாம் வகுப்பு என்று சொல்லத் தக்க நான்காம் பிரிவுக்கு (IV Form) இராமாநுஜர் மாற்றப்பட்டார். அந்த வகுப்பிலே அவர் படித்துக்கொண்டு இருக்கும்போது அவர் வீட்டுக்கு அடலிலே கல்லூரி மாணவன் ஒருவன் குடியிருந்தான். அந்த மாணவன் அப்போது கணிதப் பகுதியைப் பாடமாகக்கொண்டு பீ. ஏ. பட்டத் தேர்வுக்குப் படித்துக்கொண்டிருந்தான். மிகவும் சிறுவராய் இருந்த நம் இராமாநுஜர் அந்த மாணவனிடம் சென்று அவனுக்குப் பாடமாக இருந்த திரிகோண அளவை நூலின் (Trigonometry) இரண்டாம் பாகத்தை இரவல் கேட்டு வாங்கினார். அந்தப் புத்தகத்தை அவர் அதற்குமுன் ஒரு முறையேனும் பிரித்துப் பார்த்ததில்லை. அவ்விதம் இருந்தும், அவர், எவர் உதவியும் இன்றித் தாமே அதில் உள்ள கணித விதிகளைப் படித்து அறிந்துகொண்டார். பிறகு அவர், அதில் பயிற்சிக்காகக் கொடுக்கப்பட்டுள்ள கணக்கு-

களை யெல்லாம் போட்டு முடித்து விட்டார். இதனை அறிந்த அந்தக் கல்லூரி மாணவன் பெரிதும் ஆச்சரியமுற்றான். அன்றுமுதல் அந்தக் கல்லூரி மாணவன் தனக்கு விளங்காதவைகளை யெல்லாம் விளக்கிக் கொள்ளுதற்கு நம் இராமானுஜரின் உதவியை நாடலாயினான்.

அறிஞர் இராமானுஜர் ஐந்தாம் பிரிவை (V Form) அடைந்தபோதும் தமக்குள்ள கணித நூற் புலமையை வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த வரலாறுகளை யெல்லாம் நீங்கள் மேல்வகுப்புக்களிலே படிக்கும்போது உணர்ந்துகொள்ளலாம். ஏழ்மை யான குடும்பத்திலே பிறந்து உபகாரச் சம்பளத்தால் கல்வி கற்று வந்த இராமானுஜர் எவர் துணையும் இன்றித் தாமே முயன்று கணித நூற் புலமையில் சிறந்து விளங்கிய வகையினையே நீங்கள் இப்போது உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

## 4. ஒரு புத்துணர்ச்சி

1903-ஆம் ஆண்டிலே இராமானுஜர் ஆறும் பிரிவை (VI Form) அடைந்தார். அப்போதுதான் அவருக்குக் கணித நூலிலே ஒரு புதிய உணர்ச்சி பிறந்தது. அவ்வாண்டிலே அவர்தம் நண்பருள் ஒருவன் மேல்வகுப்பிற்குரிய ஒரு கணித நூலினைத் தந்தான். அந்த நூலினைப் பார்த்தபோதுதான் நம் அறிஞருக்கு அந்தப் புத்துணர்ச்சி பிறந்தது. அன்று முதல் அவர், பல புதிய கணக்குகளைத் தாமே கட்டத் தொடங்கிவிட்டார். சதுரக் கட்டங்களில் அமைக் கப்படும் விசித்திரக் கணக்குகளில் (Magic Squares) அவர் முதலில் ஈடுபட்டிருந்தார். பிறகு அவர் க்ஷேத்திரக் கணித ஆராய்ச்சியில் (Geometry) சிறிது நுழைந்தார்; அதிலிருந்து அவர், பூமத்திய ரேகை யின் (Equator) சுற்றளவு நீளத்தைத் தாமே முயன்று கணிக்கலாயினார். இவர் கண்டறிந்த விடை முன் னரே தீர்மானிக்கப்பட்ட சுற்றளவுக்கு ஏறத்தாழப்

பொருத்தமாகவே இருந்தது. முடிவில் அவர் இவை களை யெல்லாம் விடுத்து, அக்ஷர கணிதம் (Algebra) என வழங்கும் பொதுக் கணக்கில் தம் ஆர்வததைச் செலுத்தினர். அந்தத் துறையிலே அவர் பல புதிய முறைகளை யெல்லாம் கண்டறியலானர்.

உயர்நிலைப்பள்ளி மாணவராய்ப் பதினறு வய தும் நிரம்பப் பெருத நம் இராமானுஜனர், எவர் உதவியும் இன்றிப் பல அரிய கணக்குகளைக் கண்டறிய முயன்றது பெரிதும் வியக்கத் தக்க செயலே ஆகும். இத்தகைய திறமையினை அவர் இன்னவிதம் பெற்ருர் என்பதை அவரே நன்ருக அறிந்துகொள்ளவில்லை என்றே சொல்ல வேண்டும். அவர்தம் நண்பர்கள் அவரை நோக்கி, "நீர் இந்தப் புதுமைகளை எவ்விதம் கண்டறிந்தீர்?" என வினவியபோது அவர், "நான் நாமகிரி தேவியை மனதில் நினைத்துக்கொண்டே உறங்கி விடுவேன். அந்தத் தேவி நான் உறங்கும் போது என் கனவில் வந்து எனக்கு அறிவிக்கின்ருள்," என்றே விடை யளித்தனர். அவர் கூறுவதற்கு ஏற்றபடி அவரும் பல புதிய கணக்குகளின் விடை களை யெல்லாம் உறங்கி யெழுந்த உடனே தான் கண்டு அறிந்தனராம்.

நம் அறிஞர் இராமானுஜர் அதிகாலையில் எழுந்து முயன்றே பல புதிய கணக்குகளின் விடைகளைக் கண் டறிந்தார் என்பதில் நீங்கள் சிறிதும் ஐயுறவேண்டிய தில்லை. ஆனல், 'நாமகிரிதேவி கனவிலே வந்து கூறி ஞள்,' என்பதில்தான் உங்களுக்கு ஐயுறவு நிகழக் கூடும். அந்தப் பெரிய விஷயம் ஒருபுறம் இருக்கட்டும். உலகிலே இன்றைக்கும் நிகழக்கூடிய சர்வ சாதாரண மான ஒரு நிகழ்ச்சி உண்டு. சில மாணவர்கள் தமக் குத் தெரியாத ஒரு கணக்கினை எடுத்துக்கொண்டு இரவெல்லாம் பலமுறை போட்டுப்பார்த்துச் சரியான விடை வாராமையால் முடிவில் வெறுப்போடு படுக் கைக்குச் செல்வர். அவர்கள் உறங்க எண்ணும்

போதும் அந்தக் கணக்கே அவர்கள் கண் முன்புவந்து நிற்கும். அவர்கள் அதை நினைத்துக் கொண்டே உறங்கிவிடுவார்கள். அவர்கள் உறங்கினாலும் அவர்கள் மூளைமட்டும் வேலை செய்துகொண்டே இருந்து சரியான வழியைக் கண்டுபிடித்துத் தயாராக வைத்திருக்கும். சில சமயங்களில அவர்கள் அதைக்குறித்து கனவுகண்டு விழித்துக் கொள்வதும் உண்டு. பொழுது விடிந்ததும் அவர்கள் அந்தக் கணக்கினைப்போட முயன்றால், யாரோ ஒருவர் சொல்லிக் கொடுத்தது போல் அந்தக் கணக்கின் வழி அவர்களுக்குத் தெரிந்து விடும். இத்தகைய நிகழ்ச்சியை நீங்களும் உங்கள் அனுபவத்தில் கண்டிருக்கலாம்; அல்லது பிறர் சொல்லக் கேட்டும் இருக்கலாம்.

சாதாரண மாணவர்களுக்கு அல்லது மாணவிகளுக்கு இந்த நிகழ்ச்சி என்றைக்கேனும் ஒருமுறை வரும். நம் அறிஞர் இராமானுஜரைப்போல அல்லும் பகலும் அதே நினைவாய் இருப்பவர்க்கு அது நாள்தோறும் நேரக்கூடும் அல்லவா! ஆதலால் இந்த விஷயத்திலும் நீங்கள் சிறிதும் ஐயுறவேண்டியதில்லை. நம் இராமானுஜரைப்போல் நீங்களும் அல்லும் பகலும் அதே எண்ணமாய் இருந்தால் உங்களுக்கும் நாள்தோறும் பலப்பல புதிய கணக்குகள் எவரும் கற்பிக்காமலேயே வருதல் கூடும். கணிதம் மட்டும் அன்று; விஞ்ஞானம், சரிதம், இலக்கணம், இலக்கியம் முதலிய பல துறைப்பட்ட அறிவினையும் நீங்கள் பெறுதல் கூடும். ஆனால் அவருக்கு இருந்த ஆர்வமும், முயற்சியும் உங்களுக்கு இருக்கவேண்டும். இராமானுஜரின் ஆர்வத்தையும் முயற்சியையும் தெரிவிக்கும் நிகழ்ச்சிகள் பலப்பல உள.

## 5. உணர்ச்சியின் வளர்ச்சி

இவ்விதம் இராமானுஜர் கணிதத்திலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தும் அந்த ஆண்டு நிகழ்ந்த

மெட்ரிகுலேஷன் பரீட்சையில் நல்ல மதிப்புடன் தேறிவிட்டார். இப்போது ஆறும் பிரிவின் இறுதியில் நிகழும் பள்ளி இறுதித் தேர்வு (S.S.L.C. Examination) அப்போது இல்லை. சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் இப்போதும் நடத்தப் பெற்றுவரும் மெட்ரிகுலேஷன் பரீட்சையே அப்போது நடைமுறையில் இருந்தது.

இராமானுஜர், கணிதத்திலும் ஆங்கிலத்திலும் நல்ல மதிப்போடு அந்தப் பரீட்சையில் தேர்ந்ததால், 'சுப்பிரமணியம் பரிசு' என்னும் உபகாரச் சம்பளத்தைக் கொண்டு கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் சேர்ந்து படிகக ஆரம்பித்தனர். இந்தச் சமயத்திலேதான் அவருக்குக் கணிதப் பித்து மிகவும் அதிகரித்துவிட்டது. அவர் கணிதத்தைத் தவிர்தது வேறு எதையும் எண்ணவேயில்லை. ஆதலால் கல்லூரியில் நடைபெறும் முதல் ஆண்டுத் தேர்விலேயே அவர் தவறிவிட்டார்.

பரீட்சையில் தவறிவிட்ட துன்பத்தாலும், நண்பன் ஒருவனின் தூண்டுதலாலும் இராமானுஜர் தம் மனநிலை மாறி எவரிடமும் கூறாமல் தம் வீட்டை விட்டு வடதிசை நோக்கிச் செல்லலாயினர். அவ்விதம் சென்றவர் ஆந்திர நாட்டிலே இரண்டொரு மாதங்கள் சுற்றியலைந்து முடிவிலே தம் ஊருக்கு வந்து மறுபடியும் கல்லூரியிற் போய்ச் சேர்ந்தார். அவர் நெடு நாட்களாகக் கல்லூரிக்குச் செல்லாமையால் 1905-ஆம் ஆண்டில் நிகழ்ந்த இண்டர்மீடியட்* தேர்விலே கலந்து கொள்ளுதற்குத் தடை நேர்ந்தது. ஆதலால் அவர் 1906-ஆம் ஆண்டிலே சென்னையில் உள்ள பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார். ஆனால் தேர்வின்போது நோய்வாய் உற்ற காரணத்தால் அவர்

---

* அந்தக் காலத்திலே இண்டர்மீடியட் தேர்வுக்கு எப். ஏ. பரீட்சை என்று பெயர் வழங்கிவந்தது.

மீண்டும் கும்பகோணம் வந்து சேரலாயினர். அங்கே அவர் கல்லூரியில் சேராமலே தனிப்பட்ட முறையிலே 1907-ஆம் ஆண்டு பரீட்சைக்குச் சென்றார்; ஆனால் அதிலும் தவறிவிட்டார்.

எப். ஏ. பரீட்சையில் தவறிவிட்ட நம் இராமானுஜருக்கு அப்போது இன்னது செய்வதென்று தெரியவில்லை. அவர்தம் எண்ணமெல்லாம் கணித ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருந்தது. ஒரு கலையிலேயே பேரா வல் கொண்டுள்ளவர்கள் அக் கலையினை மட்டும் கற்றுத் தேர்ந்திருப்பதற்கு நம் நாட்டுக் கல்வி அமைப்பிலே இடம் இல்லை. ஒரு முறைக்குப் பன் முறை தேர்வுக்குச் செல்லவும் அவர்தம் குடும்ப நிலை இடம் தரவில்லை. ஆதலால், அவர்தம் கல்வி நிலை அதனோடு நின்றுவிட நேர்ந்தது. எனினும், கணித ஆராய்ச்சியிலேயே பித்தேறியுள்ள நம் இராமானுஜர் அதனைச் சிறிதும் கைவிட்டாரில்லை. கணிதத் தேர் வுக்குச் செல்லும் ஒருவரேபோல அவர் இரவும் பக லும் ஏதேதோ கணக்குகளைப் போட்ட வண்ணம் இருந்தார். அவர் தமது பிற்கால வாழ்க்கையைக் குறித்தோ சிறிதும் கவலைகொண்டதாகத் தெரியவில்லை. அவர் எப்போதும் ஒரு குறிப்புப் புத்தகத் தைக் கையில் வைத்துக்கொண்டிருந்தார். அவ்வப் போது தமக்குத் தோன்றும் புதுப்புதுக் கணக்கு முறைகளை யெல்லாம் அப்புத்தகத்திலே குறித்துக் கொண்டே வந்தார்.

அறிஞர் இராமானுஜர் கண்டறிந்த கணக்கு முறைகளுள் பெரும்பாலானவை புத்தம் புதியனவே ஆகும். அத்தகைய கணக்குகளை அதுவரையில் எவ ரும் கனவிலும் கண்டறிந்ததில்லை. நம் இராமானுஜ ருக்கோ அவை சாதாரணக் கூட்டல் பெருக்கல் கணக்குகள்போல் அடுக்கடுக்காக அவர்தம் உள்ளத் திருந்து உதித்தன. நாமகிரி தேவியின் அருளால்

தோன்றிய அந்த அற்புதக் கணக்குகளை அவர் எவரிடம் காட்டுவார்? அக்கணக்குகளின் அருமை பெருமைகளை உள்ளபடி அறிந்து அவரைப் போற்று வார் யார்? ஒரு வகையில் பித்தர் போன்றே அறிஞர் இராமானுஜர் தமக்குள் தாமே மகிழ்வெய்திருந்தார்.

## 6. உத்தியோக முயற்சி

இராமானுஜரின் கணிதப் பித்தினைத் தெளிய வைப்பதற்கு அவர் வீட்டார் ஒரு வழி தேடினர். அந் தப் பித்தத்தைத் தெளிவிப்பதற்கு மருந்து திரு மணமே என அவர்கள் நிச்சயித்தனர். அவர்கள் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப 1909-ஆம் ஆண்டு நம் கணித அறிஞருக்கு ஒரு சிறுமியைத் தேடிப் பிடித்துத் திருமணம் செய்து வைத்தனர். பெரு நெருப்பிலே இட்ட ஈரக்கட்டைப் போன்று அவர்கள் கொண்டிருந்த எண்ணம் ஈடேறாது போயிற்று. நம் இராமானுஜனருக்குக் கணிதப் பித்து நீங்காது மேன் மேல் வளர்ந்தது. எனினும், அதனோடு அவருக்குக் குடும்பக் கவலையும் வந்து சூழ்ந்து கொண்டது. "எங் கேனும் வேலைக்குச் சென்று சிறிது பொருளை சம்பா தித்துக் குடும்பத் தொல்லையைத் தீர்த்துவிட்டால், ஓழிவு நேர்ந்த நேரத்திலேனும் கணித ஆராய்ச்சி புரியலாம்," என அவர் எண்ணினார்.

நம் இராமானுஜர் கம்பீரமான தோற்றம் உடை யவர் அல்லர்; காலநிலைமைக்கு ஏற்றவண்ணம் தம்மை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக்கொள்ளும் மனப்பான்மை உடையவரும் அல்லர். கணித நூல் ஆராய்ச்சியிலேயே கவலைகொண்டுள்ள ஒருவருக்கு இவைகளில் எவ்விதம் எண்ணம் செல்லும்? அவர் அதிக உயரமுள்ளவர் அல்லர்; சிறிது பருமனாகவும் இருந்தமையால் பார்வைக்குக் குள்ளமாகவே காணப் பட்டார்; பெரிய தலையும் அதற்கேற்ற நெற்றியும் உடையவர்; கண்கள் மட்டும் கூர்மையும் பிரகாசமும்

உடையன என்றும் பலரும் கூறுவர். அவ்வப்போது க்ஷவரம் செய்துகொள்ளுதலிலும் அவர் அதிகக் கருத்தில்லாதவர். உடை மிக சாதாரணமானதாக இருந்தாலும் சுத்தமானதாக இருக்கும். அவர் எப்போதும் ஒரு நலங்கிய குறிப்புப் புத்தகத்தைக் கையில் கொண்டு திரிவார். எது எவ்விதம் இருந்தாலும் பீ. ஏ., எம். ஏ., முதலிய பட்டங்களை னும் பெற்றிருந்தால், உடனே நல்ல வேலை கிடைத்தல் கூடும். ஏழ்மையான குடும்பத்திலே பிறந்து எததகையோர் அறிமுகமும் இல்லாத இவருக்கு எவ்விதம் நல்ல வேலை கிடைக்கும?

முயற்சியில் குன்றாதவராய நம் இராமானுஜனார் வேலையின் பொருட்டுப் பலப்பல இடங்களுக்கும் சென்று அலையலாயினார். கணித நூற் புலமையுடையோரைக் கண்டால் தமக்குள்ள கணித நூல் அறிவுக்காக மனம் உவந்து வேலை தருதல் கூடும் என அவர் எண்ணினார். இராமானுஜனார் அவ்விதமே கணித நூல் அறிஞர்களுள் சிலரைக் கண்டனர். அவர்கள் அனைவரும் இராமானுஜரின் கணித முறைகளைக் கண்டு பெரிதும் வியப்புற்றனர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர் பி. வி. சேஷு ஐயர், ஆர். இராமச்சந்த்ர ராவ் ஆகிய இரு பெரியாருமே ஆவர். நம் இராமானுஜனாரின் வரலாற்றை நாம் ஒருவாறு உணர்ந்துகொள்ளுதற்கு இவ்விருவருமே காரண பூதராய் இருந்தனர். இவர்கள் நம் இராமானுஜனாருக்குப் பல வகையில் உதவி புரிந்தும் இருக்கின்றனர்.

அறிஞர் இராமானுஜனார், ஒரு நிலையான உத்தியோகத்துக்காகத் தென்னாற்காடு, சென்னை, நெல்லூர் முதலிய பல இடங்களுக்கும் சென்று அலைந்து முடிவில் சென்னையிலே உள்ள போர்ட் டிரஸ்ட் என்னும் உத்தியோக சாலையிலே மாதம் முப்பது ரூபாய் வருமானம் உள்ள ஒரு சிறிய வேலையிலே அமர்ந்தார். அப்போது அவருக்கு வயது இருபத்தைந்து.

## 7. மேல் நாட்டார் அறிமுகம்

உத்தியோகத்திற்காகப் பல இடங்களிலும் அலைந்து கொண்டிருந்த காலத்திலும் இராமானுஜர் தமது கணித ஆராய்ச்சியை விடவேயில்லை. சென்னையில் உள்ள போர்ட் டிரஸ்ட் என்னும் உத்தியோக சாலையிலே அமர்ந்தபோதும் அவர் தமது ஆராய்ச்சியைச் சிறிதும் விட்டுவிடவில்லை. ஆனால் அவர் எண்ணியபடி ஓய்வாக இருந்து கணித ஆராய்ச்சியினைப் புரிதற்கில்லை. மிக்க பொருள் சேர்த்துக்கொண்டு இன்பமாக வாழவோ, பட்டம் பதவிகள் பெற்று மகிழவோ இராமானுஜர் சிறிதும் விரும்பவில்லை. குடும்பத்தொல்லையைத் தீர்க்கச் சிறிது பொருளும், கணித ஆராய்ச்சி புரிந்த வண்ணம் இருக்கப் போதிய ஓய்வும் அவர் வேண்டினார். அந்தச் சமயத்தில் இங்கிலாந்திலேயுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலிருந்து வெளிவந்த கணித ஆராய்ச்சி நூல் ஒன்றை நம் இராமானுஜனார் பார்க்க நேர்ந்தது. ஜி. எச். ஹார்டி என்னும் கணித நூலறிஞர் கணித சம்பந்தமான சில ஐயப்பாடுகளை அந்த நூலிலே தெரிவித்திருந்தார். இராமானுஜனருக்கு அவை மிகச் சாதாரணமானவைகளாகத் தோன்றின. ஆதலால் அவர் அறிஞர் பி. வி. சேஷு ஐயரின் துணைகொண்டு ஜி. எச். ஹார்டி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் ஜி. எச். ஹார்டி அவர்கள் கொண்டுள்ள ஐயப்பாடுகளைத் தம்மால் ஒருவகையில் நீக்க முடியும் என்பதைத் தெரிவித்து அந்தத் துறையிலேயே தாம் இயற்றிவரும் கணக்கு வகைகளில் சிலவற்றை எழுதி அனுப்பினார்.

அறிஞர் ஹார்டி துறைமகனார் கேம்பிரிட்ஜ பல்கலைக் கழகச் சார்பிலே உள்ள டிரினிடி கல்லூரியின் கணித குழுவினருள் ஒருவர். அவர் இராமானுஜனாரின் கடிதத்தையும், அதனுடன் அனுப்பப்பெற்ற ஆராய்ச்சிக் கணக்குகளையும் கண்டார். இராமானுஜனாரின் கணிதத் திறமையினை உணர்ந்த ஹார்டி அள

விலா மகிழ்ச்சியுற்றார். இராமானுஜர் அனுப்பிய கணக்குகளுள் ஒரு சில அவருக்கு விளங்காதிருந்தன. ஒரு சிறந்த கணித நூல் அறிஞர் நூறு ஆண்டுகள் முயன்றாலும் போட முடியாத கணக்குகளும் இருந்தன. இத்தகைய கணக்குகள் நூற்றுக்கு மேற்பட்டனவாய் இருந்தன. இத்தகைய இளைஞர் ஒருவர் இந்தியாவிலே இருப்பதை அறிந்து அவர் பெரிதும் ஆச்சரியம் உற்றார். அந்த அறிஞர் உடனே நம் இராமானுஜருக்கு ஒரு பாராட்டுக் கடிதம் அனுப்பினார். இராமானுஜர் அனுப்பிய கணக்குகளைத் தங்கள் கழக வெளியீட்டில் அச்சிடுவதாகவும் கூறினார். அவ்விதம் ஏற்று அச்சிடுதல் இலேசான காரியம் அன்று. மிகச் சிறந்த அறிஞர்களுடைய கட்டுரைகளே அவ்வெளியீட்டில் இடம் பெறும். ஓர் இந்திய இளைஞராய இராமானுஜருக்கு அத்தகைய தகுதி கிடைத்தது போற்றக் கூடியதேயாகும். ஆனால் நம் இராமானுஜரின் அறிவின் திறமையை நோக்க அது அவருக்கு அவ்வளவு பெரியதன்று.

தமக்குள்ள திறமையைத் தாமே அறியாமலிருந்த இராமானுஜர் ஹார்டி துரைமகனாரின் பாராட்டுக் கடிதம் கண்டவுடனே அளவிலா மகிழ்ச்சியில் திளைத்தார். 'அல்லும் பகலும் வருந்தி உழைத்துக் கண்டறிந்த கணித உண்மைகளை ஒருவாறு உணர்ந்துகொள்வதற்கு இவர் ஒருவரேனும் இருக்கின்றாரே' என எண்ணி எண்ணி அவர் இன்புற்றார். அவர்தம் ஆராய்ச்சிக் கணக்குகள் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக வெளியீட்டில் வருவதால் மேலும் பல கணக்கறிஞர்கள் கண்டு தம் கருத்தைத் தெரிவித்தல் கூடும் என அவர் ஆறுதலடைந்தார். மேலும் புதுப் புதுக் கணக்கு முறைகளைக் கண்டறிதற்கு அவருக்கு ஊக்கம் பிறந்தது. இராமானுஜர் உடனே அந்தத் துரைமகனாருக்குத் தம் நன்றியறிதலைத் தெரிவித்தார். மாதம் முப்பது ரூபாய் ஊதியம்பெற்றுக் காலை முதல்

மாலை வரையில் சென்னை, போர்டு டிரஸ்ட் உத்தியோக சாலையில் வேலை செய்பவருக்குக் கணித ஆராய்ச்சிக்குப் போதிய ஓய்வு எவ்விதம் கிடைக்கும்? ஆதலின் அது குறித்தும் அந்த மேன்மகனாருக்கு அக்கடிதத்திலே கண்டிருந்தார். வயிற்றுக்குச் சிறிது உணவும், கணித ஆராய்ச்சிக்குப் போதிய ஓய்வும் இருந்தற்காக இந்திய அரசாங்கத்தாருக்கேனும் சென்னைப் பல்கலைக் கழகத்தினருக்கேனும் ஒரு கடிதம் எழுதித் தமக்கு உபகாரச் சம்பளம் வாங்கித் தரும்படி அக்கடிதத்திலேயே அவர் தெரிவித்திருந்தார்.

## 8. இங்கிலாந்து செல்லுதல்

கேம்பிரிட்ஜ் கணக்கறிஞராய ஹார்டி அக்கடிதத்தைக் கண்டதும் இராமானுஜனாரை இங்கிலாந்துக்கு அழைத்துக் கொள்ளுதற்கு வேண்டிய ஏற்பாடுகள் பலவும் செய்தார். இச் செய்தி நம் இராமானுஜனாருக்கு எட்டியதும், தம்மால் இங்கிலாந்துக்கு வர இயலாதெனக் கூறிவிட்டார். கணித அறிவினை வளர்த்துக் கொள்ளுவதற்கு அவருக்கு ஆவல் இருந்தும், அந்தணர்கள் கடல் கடந்து செல்லுதல் கூடாதென்னும் கொள்கையால் இராமானுஜனார் இங்கிலாந்துக்குச் செல்ல இசையவில்லை.

அதே சமயத்தில் மற்றொரு நிகழ்ச்சியும் நடைபெற்று வந்தது. கணித அறிஞர் ஜி டி. வால்கர் என்னும் துரைமகனார் சிம்லாவிலிருந்து சென்னைக்கு வந்திருந்தார். சென்னை போர்ட் டிரஸ்ட் உத்தியோக சாலையின் தலைவர் நம் இராமானுஜரின் கணித நூற்புலமையைக் குறித்து வால்கரிடம் புகழ்ந்து பேசி இராமானுஜரின் கணக்குப் புத்தகத்தையும் அவரிடம் காண்பித்தார். வால்கர் இராமானுஜரை நேரில் பார்க்காமலிருந்தும் அவரது குறிப்புப் புத்தகத்தைக் கொண்டே அவர்தம் கணிதப் புலமையை நனகு

உணர்ந்துகொண்டார். உடனே வால்கர் சென்னைப் பல்கலைக் கழகத்தாருக்கு இராமானுஜரின் கணிதப் புலமையை விளக்கி, அத்தகைய அறிஞரைப் பல்கலைக் கழகத்தினர் ஆதரிக்கவேண்டியது மிகவும் அவசியம் என்பதையும் வற்புறுத்தி ஒரு கடிதம் எழுதினார். சென்னை பல்கலைக் கழகத்தினர் இராமானுஜருக்கு மாதம் எழுபத்தைந்து ரூபா தருவதாகவும், அதன் பொருட்டு அவர் அக்கழக வெளியீட்டுக்குக் கணித ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதித் தரவேண்டும் என்றும் பணித்தனர். இராமானுஜர் உடனே போர்ட் டிரஸ்ட் வேலையை விட்டு நீங்கிப் பல்கலைக் கழகத்தில் அமர்ந்து கணித ஆராய்ச்சியையே தமக்குத் தொழிலாகக் கொண்டு இரவும் பகலும் கணிதக் கலையினையே சிந்தித்து வருவாராயினர்.

சென்னைப் பல்கலைக் கழகத்தினர் தமக்கு மாதம் எழுபத்தைந்து ரூபா அளித்து வருவதே தமக்குப் போதுமானதென இராமானுஜர் எண்ணினார். அதனால் தாம் அடைந்த மகிழ்ச்சியினையும் தமக்குள்ள நன்றியறிதலையும் இராமானுஜர் ஹார்டி துரையவர்களுக்கு அப்போது எழுதிய கடிதத்திலும் குறிப்பிட்டிருந்தார்.

அறிஞர் இராமானுஜர் இங்கிலாந்துக்குச் செல்லாவிடினும் ஹார்டி துரையவர்களிடம் கடிதப் போக்குவரவு வைத்துக் கொண்டே இருந்தார். இராமானுஜரை எங்ஙனமேனும் இங்கிலாந்துக்கு வரவழைக்க வேண்டும் என ஹார்டி எண்ணங் கொண்டவராய் இருந்தார். அன்றியும் இங்கிலாந்துக்கு வருவதால் விளையக்கூடிய நன்மைகளைக் குறித்து இராமானுஜருக்கும் அவர் அடிக்கடி கடிதத்தின் மூலம் தெரிவித்துக் கொண்டிருந்தார். இராமானுஜரின் நண்பர்களும் இராமானுஜரை இங்கிலாந்துக்குச் செல்லத் தூண்டிக்கொண்டே இருந்தனர். அதே சமயத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தினர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்

கழகத்திலிருந்து ஈ. எச். நேவிலி என்னும் அறிஞரைச் சொற்பொழிவுக்கு அழைத்திருந்தனர். அப்போது ஹார்டி துரைமகனுர் ஈ. எச். நெவிலியினிடம், "தாங்கள் சென்னைக்குச் சென்ருல், இராமானுஜர் என்னும் இளைஞரைக் கண்டு, அவருக்கு வேண்டுவன கூறி, அவரை எங்ஙனமேனும் இங்கிலாந்துக்கு அழைத்து வருதல் வேண்டும்," எனத் தெரிவித்திருந்தனர்.

அறிஞர் நெவிலியும் சென்னையை அடைந்ததும் இராமானுஜரைக்கண்டு, "இத்தகைய பெரிய செயல்களில் ஜாதிக் கட்டுப்பாடுகளைப் பார்த்தல் கூடாது" எனவும், "இங்கிலாந்துக்கு வந்தால் நீங்களும் நன்மையடைவதோடு கணித உலகத்துக்கே பல நன்மைகளைப் புரிதல் கூடும்" எனவும், இவைபோன்றபலவும் விளக்கமாகக் கூறினர். இராமானுஜரும் முன்னமே தம் நண்பர்களின் பற்பல எடுத்துக் காட்டுகளால் ஒருவாறு மனந் திரும்பி இருந்தார். ஆதலால் நெவிலி கூறிய இரண்டொரு வார்த்தைகளில் இராமானுஜர் இங்கிலாந்துக்குப் புறப்படச் சம்மதித்து விட்டார். ஆனல் அவர்தம் அன்னையாரோ ஒரே பிடிவாதமாய் 'என் மகனை நான் அந்த நாட்டுக்கு அனுப்பவே மாட்டேன்' என்று கூறிவிட்டார். இதனுல் இராமானுஜர் இங்கிலாந்துக்குப் புறப்படும்எண்ணத்தை அடியோடு விட்டுவிடவேண்டும்போல் இருந்தது.

பிறகு நாமகிரி தேவியால் அந்த எண்ணம் கைகூடலாயிற்று. தம் மைந்தரின் பிரிவுக்குச் சிறிதும் இணங்காதிருந்த அவ்வன்னையார் ஒரு நாள் ஒரு நூதனமான கனவு கண்டனராம். இராமானுஜனுர் ஒரு பெரிய மண்டபத்திலே பல ஐரோப்பிய மேன்மக்களுக்கு இடையே பெருமையோடு வீற்றிருப்பதாகவும், அப்போது நாமகிரி தேவி தோன்றி, 'இத்தகைய பெருமையை உன் மைந்தன் அடைய இருக்க, அதை நீ ஏன் தடை செய்யவேண்டும்,' என்று கூறுவதாகவும் அவ்வன்னையார் கனவு கண்டனராம்.

அந்தக் கனவினைக் கண்ட மறுநாளே அவ்வன்னை யார் தம் மகனாரை இங்கிலாந்துக்கு அனுப்பச் சம்மதித்து விட்டார். உடனே அறிஞர் நெவில் சென்னைப் பல்கலைக் கழகத்தினருக்கு ஒரு விண்ணப்பம் வரைந்து விடுத்தனர். இராமானுஜருக்கு அமைந்துள்ள கணிதத் திறமையினையும், அவர் இங்கிலாந்து செல்வதால் அடையக் கூடிய நலன்களையும், அதனால் கணித உலகத்திற்கே விளையக்கூடிய பெரிய நன்மையினையும், சென்னைப் பல்கலைக் கழகம் அடையும் பெருமதிப்பினையும் அந்த விண்ணப்பத்தில் அவர் தெளிவாக விளக்கியிருந்தார். அதே சமயத்தில் மற்றும் பலரும் இராமானுஜருக்காகப் பாடுபட்டனர். இத்தகைய முயற்சிகளால் சென்னைப் பல்கலைக் கழகத்தினர், இராமானுஜனர் இங்கிலாந்து செல்லுவதற்கு வேண்டிய பயணச் செலவை ஏற்றுக் கொண்டதோடு அவருக்கு உபகாரச் சம்பளமாக ஆண்டுதோறும் இருநூற்று ஐம்பது பவுன் வீதம் (3750 ரூபாய்) இரண்டு ஆண்டுகளுக்குப் பொருள் உதவவும் மகிழ்ச்சியோடு இணங்கினர். ஆதலால் அறிஞர் இராமானுஜனர் 1914-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ஆம் நாள் இங்கிலாந்துக்குப் புறப்பட்டனர். அப்போது அவருக்கு வயது இருபத்தேழு.

## 9. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம்

இங்கிலாந்துக்குச் செல்லுதற்கு முன்பு நம் இராமானுஜனர் கணித நூற் புலமையிலே சாணை பிடிக்கப்படாத மாணிக்கம் போன்று சிற்சில வகைகளிலே காணப்பட்டனராம். இயல்பிலேயே கணித நூற் புலமையுடையவராய் விளங்கிய காரணத்தால் அவர் சில சிறந்த கணித நூற் பகுதிகளையும் முறைகளையும் அறியாதிருந்தனராம். அவர் கடைப்பிடித்த சில கணித முறைகள் இந்திய நாட்டின் பழைய முறைகளுக் கேற்ப இருந்தனவாம். இராமானுஜ

னாருக்கு இருந்த இக்குறைகளைப் போக்குதற்கும், அவருக்கு இயல்பிலே அமைந்திருந்த அற்புத சக்தியினை மேல் நாட்டிலே உள்ள பலருக்கும் அறிவித்தற்குமே ஹார்டி துரைமகனார் அவரை இங்கிலாந்துக்கு அழைத்தனர்.

இராமானுஜனார் இங்கிலாந்தை அடைந்ததும் ஹார்டி துரைமகனார் அவரைக் கேம்பிரிட்ஜ் நகரிலே உள்ளதும் டிரினிடி கல்லூரி (Trinity College) என வழங்கப்படுவதும் ஆகிய தங்கள் கலலூரியில் சேர்த்துக் கொண்டார். அங்கே அந்தத் துரைமகனாரும் லிட்டில்உட் என்னும் மற்றொரு கணித நூற்புலவரும் நம் இராமானுஜனாருக்குப் பெரிதும் துணை புரிந்தனர். அவ்விருவர்தம் துணைகொண்டு அறிஞர் இராமானுஜனார் கணித நூல் அறிவினை மேன்மேலும் வளர்த்துக்கொண்டதோடு, பல அரிய கணித நூல் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் அவ்வப்போது வெளியிட்டு வந்தனர்.

நம் இராமானுஜனாருக்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தினர் அளித்துவந்த தொகையோடு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தினரும் ஆண்டுக்கு அறுபது பவுன் விகிதம் அளிக்க இசைந்தனர். இவ்விரு தொகையினையும் பெற்று வந்த அறிஞர் இராமானுஜனார் சிறிதும் மகிழ்ச்சியுறவில்லை. "எனக்கு இவ்வளவு பணம் ஏன்?" என்றே அவர் எண்ணினார். அவருக்கு அங்கே எத்தகைய கட்டுப்பாடும் இல்லை. அவர் எங்கே செல்ல விரும்பினும் சென்று வரலாம்; எப்போது விரும்பினும் செல்லலாம். ஆனால், அவர் அவ்விதம் இன்பமாகக் காலங் கழிக்க என்றும் விரும்பியதில்லை. அவர் மிகவும் எளிய வாழ்க்கையையே விரும்பினார்; மிகவும் சிக்கனமாகவே செலவு செய்தார்; கணித நூல் ஆராய்ச்சியே அல்லும் பகலும் கருத்தூன்றிப் புரிந்து வந்தார்.

தாம் அறிந்துகொள்ளவேண்டிய ஒரு சிலவற்றை நம் இராமானுஜர் மிகச் சீக்கிரத்திலே உணர்ந்து கொண்டார். முதலிலே அறிஞர் ஹார்டி, அறிஞர் லிட்டில்வுட் ஆகிய இரு பெரியார்கள் நம் இராமானுஜ ரின் கணித ஆராய்ச்சிக்குத் துணைபுரிந்து வந்தனர். இராமானுஜர் இங்கிலாந்தை அடைந்த சில மாதங் களுக்குள் 'முதலாவது உலகப் பெரும் யுத்தம்' (The First Great World War) துவங்கிவிட்டமை யால், அந்தப் போரின் காரணமாக லிட்டில்வுட் அறிஞர் வெளியே சென்றிருக்க நேர்ந்தது. ஆதலால் நம் இராமானுஜருக்கு அவ்வறிஞரின் துணை அதிக நாள் இல்லாமல் போய்விட்டது. ஹார்டி ஒருவரே அவருக்குத் துணைபுரிந்து வந்தார்.

1915-ஆம் ஆண்டிலே ஹார்டி சென்னைப் பல் கலைக் கழகத்துக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அக் கடிதத்திலே, "இராமானுஜரின் முன்னேற்றத்திற்கு இந்தப் போர் தடைசெய்கிறது; அறிவிற் சிறந்த இவருக்கு என் ஒருவன் துணை போதாது; கணிதத் திலே இவருக்குள்ள மிதமிஞ்சிய திறமையைக் குறித்து எவராலும் மறுத்துரைக்க முடியாது; ஒரு வகையில் எண்ணிப் பார்க்குமிடத்து நான் இதுவரை யில் இவரைப்போன்ற ஒரு கணிதநூற் புலவரைக் கண்டதேயில்லை என்றே கூறுதல்வேண்டும்," என்று அவரே பலபடப் புகழ்ந்திருக்கின்றார்.

ஹார்டி துரைமகனார் நம் இராமானுஜனாரின் சரிதத்தை எழுத நேர்ந்தபோது, "நான் அவருக்குக் கற்பித்ததைக் காட்டிலும் நான் அவரிடமிருந்து தெரிந்து கொண்டதே அதிகம்," என்று கூறியிருக் கின்றார் என்றால், மேலும் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? இத்தகைய ஓர் அறிஞர் நம் தமிழ் நாட்டிலே தோன்றினார் என்றால், இதைவிட நமக்கு வேறு பெருமை என்ன வேண்டும்? ஆனால் தமிழ் நாடு செய்த தவக் குறையோ! அன்றி இவ்வுலகத்

திற்கே உள்ள பெருங் குறையோ! 1917-ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து நம் இராமானுஜரின் உடல் நலம் மிகவும் குன்ற ஆரம்பித்தது. இங்கிலாந்திலே உள்ள மருத்துவ நிபுணர்கள் அவர்தம் உடல் நிலையை ஆய்ந்து பார்த்து மருந்தினால் தீராததாய காசநோயி னால் அவர் தாக்கப்பட்டுள்ளார் என்னும் முடிவுக்கு வந்தார்கள். இராமானுஜர் இங்கிலாந்திலே இருப் பதைவிட இந்தியாவுக்குச் செல்லுதல் நலம் எனவும் அவர்கள் எண்ணினார்கள். அப்போது போரின் காரணமாக இந்தியாவிலே இருந்த சிறந்த மருத்துவ நிபுணர்களில் பெரும்பாலோர் வெளிநாடுகளில் இருந் தனர். அன்றியும் கப்பலில் செல்லுவது அந்தக் காலத்தே மிகவும் ஆபத்தாகவும் இருந்தது. ஆதலால் இங்கிலாந்திலேயே அவர்தம் உடல்நலத்திற்கு ஏற்ற இடங்களில் அவரை அமர்த்தி அவருக்கு மருத்துவம் பார்ப்பதெனத் தீர்மானித்தனர்.

## 10. பட்டமும் பதவியும்

மருத்துவ நிபுணர்கள் நம் இராமானுஜரை மிக்க பொறுப்போடு கவனித்து வந்தனர். இராமானுஜரும் பெரும்பாலும் தம் படுக்கையைவிட்டு எழாமலேயே இருந்துவந்தார் எனினும் அவர் அந்த நிலையிலும் கணித ஆராய்ச்சியை மறக்கவேயில்லை. அவர் இவ் விதம் ஏறக்குறைய ஓராண்டு படுத்த வண்ணமாக இருந்தார். 1918-ஆம் ஆண்டு அவர்தம் உடல்நிலை சிறிது நன்னிலையில் இருந்தது. ஆதலால் அவர் மறு படியும் தமக்கு உரிய கணித ஆராய்ச்சியிலேயே பெரி தும் ஈடுபடத் துவங்கிவிட்டார். அந்த ஆண்டிலே **ராயல் சொஸைடி** என்னும் அறிஞர் கழகத்தினர் இரா மானுஜரைத் தம் குழுவினருள் ஒருவராகத் தேர்ந் தெடுத்தனர். இப்பதவி எவருக்கும் எளிதிலே கிடைப் பதன்று. இந்தியருக்குள் முதன் முதலில் இப்பதவி யைப் பெற்றவர் இவரே. அன்றியும் மிக இளவயதா

கிய முப்பதில் பெற்றிருக்கின்றார். இப்பட்டத்தைப் பெற்ற பிறகும் அவர் பெருமிதம் கொண்டதாகத் தெரியவில்லை. அவர் தமக்கு இயல்பாக உள்ள தன்மைகளில் சிறிதும் மாறுதலின்றி இருந்துவந்தார். ஆனால் அவர் தமது நன்றியறிதலைக் காட்டும் முறையிலே முன்னினும் பன்மடங்கு கணித ஆராய்ச்சியினைப் புரிந்து வந்தார். உடல்நிலை முற்றிலும் குணமடையாத அக்காலத்திலேதான் அவர் மிக அருமையான கணித உண்மைகளை யெல்லாம் கண்டறிந்தனர்.

அதே ஆண்டிலே சில மாதங்களுக் கெல்லாம் அவர், டிரினிடி கல்லூரிக் குழுவினருள் ஒருவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அன்றியும் அக்குழுவினர் அவர்தம் கணிதப் புலமையைப் பாராட்டும் முறையில் ஆண்டுக்கு இருநூற்று ஐம்பது பவுனுக ஆறு ஆண்டுகளுக்குப் பரிசில் தொகை உதவவும் இணங்கினர். அப்பரிசிலுக்கு ஈடாகக் கட்டுரை எழுதுதல் முதலிய எத்தகைய திட்டங்களையும் அவருக்கு விதிக்கவில்லை.

நம் இராமானுஜனார் இங்கிலாந்திலே பெற்ற பட்டங்களையும் பதவிகளையும் குறிப்பிட்டு, அறிஞர் ஹார்டி சென்னைப் பல்கலைக் கழகத்தினருக்கு எழுதியுள்ள கடிதம் பெரிதும் போற்றத்தக்கது. "இதுவரையில் எந்த இந்தியரும் அடைந்திராத பேரும் புகழும் அறிஞர் இராமானுஜர் அடைந்திருக்கின்றார். அவரை இந்தியர்கள் ஒரு சிறந்த பொக்கிஷம் போல் போற்றவேண்டும். அவர் சீக்கிரத்திலே இந்தியாவுக்குத் திரும்புதல்கூடும். சென்னைப் பல்கலைக் கழகத்தினர் அவருக்கு நிரந்தரமான ஊதியத்தைத் தந்து அவரைத் தம் விருப்பம்போல் கணித ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கச் செய்தல் வேண்டும்," என அறிஞர் ஹார்டி அன்பும் அருமையும் ததும்ப எழுதியிருக்கின்றார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தினர் அதனைப் படித்துப் பேருவகை பூத்தனர். அவர்கள் நம் இராமா

னுஜருக்கு ஆண்டுதோறும் இருநூற்று ஐம்பது பவுன் விகிதம் இரண்டு ஆண்டுகளுக்கு அளித்துவந்ததை மேலும் ஐந்து ஆண்டுகளுக்குத் தருவதாகத் தெரிவித்தார்கள். அதனோடு அந்த ஐந்து ஆண்டுகளில் அவருக்கு நேரக்கூடிய கப்பல் போக்குவரவுச் செலவுகளையும் ஏற்றுக்கொள்வதாக அவர்கள் ஹார்டி துரைமகனாருக்குத் தெரிவித்தார்கள். இராமானுஜர் சென்னையை அடைந்த பின்னர் அவர்தம் தகுதிக்கேற்ற ஒரு பதவியை அவருக்குத் தருதற்பொருட்டும் சென்னைப் பல்கலைக் கழகத்தினர் சிந்தித்துக் கொண்டிருந்தனர்.

## 11. இந்தியாவுக்குத் திரும்புதல்

அறிஞர் இராமானுஜனாருக்கு நாளுக்கு நாள் உடல் நிலை நல்ல நிலைமையினையே அடைந்து வந்தது. ஆனால் காசநோயின் அறிகுறிமட்டும் இருந்து வந்தது. எனினும் இனி முன்புபோல் அவ்வளவு ஆபத்தான நிலைமை அவருக்கு நேராது என மருத்துவ நிபுணர்கள் கூறினர். ஆனால் இங்கிலாந்தின் குளிர்ச்சி வாய்ந்த நிலை இராமானுஜனாருக்கு ஏற்றதாக இல்லை என்றும், அதனாலேயே அவர் உடல் நன்னிலையடைதற்குச் சிறிது தாமதப்படுகின்றதெனவும் மருத்துவர் எண்ணினர். ஆதலால் இராமானுஜரை இந்தியாவுக்கு அனுப்புதலே நலம் எனவும் அவர்கள் தீர்மானித்தார்கள். மருத்துவரின் விருப்பத்திற்கிணங்க நம் இராமானுஜனார் இந்தியாவுக்குப் புறப்படச் சித்தமாயினார். இராமானுஜர் இங்கிலாந்திலே இருந்தபோது அவர்தம் உடல் நிலையைக் கவனித்தற்காகப் பொருள் பெரிதும் வேண்டியிருந்தது. அவர் இனி இந்தியாவிலே தங்கியிருக்கப் போவதால் சென்னைப் பல்கலைக் கழகத்தினர் தமக்கு அவ்வளவு பொருள் உதவ வேண்டியது இல்லை என அவர் எண்ணினார். ஆதலால் அவர் இங்கிலாந்திலே இருந்தபோதே

சென்னைப் பல்கலைக் கழகத்தினருக்கு ஒரு கடிதம் எழுதலாயினர்.

"என்மீது அருள் மிகுந்து எனக்குத் தாங்கள் பெருந் தொகையான பொருளை உதவ முன்வந்தது குறித்து நான் தங்களுக்குப் பெரிதும் நன்றியறிதலுடையவனாய் இருக்கின்றேன். நான் இந்தியாவுக்கு வந்த பிறகு எனக்கு அவ்வளவு பொருள் வேண்டியிராது. ஆதலால் எனக்கும் என் குடும்பத்துக்கும் வேண்டிய பொருள் போக மிகுதியை ஏழை மாணவர்களுக்குச் சம்பளம் தருதலிலும், புத்தகம் வாங்கித் தருதலிலும் பயன்படுத்தும்படி நான் தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன். நிற்க, எனக்கு உடல் நலம் குன்றி இருந்ததால் சுமார் இரண்டு ஆண்டுகளாக நான் போதிய கணித ஆராய்ச்சி வேலைகள் புரியவில்லை. தங்களிடம் பெறும் உதவிக்கு ஏற்ப இனி என் பணியினை மேலும் அதிகமாகப் புரிவேன் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்."

இஃது அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தினருக்கு எழுதிய கடிதத்தின் திரண்ட பொருள் ஆகும். இதிலிருந்து நம் இராமானுஜரின் பொருட் பற்றற்ற தன்மை, நன்றியறியும் குணம், பரந்த உளப் பண்பு முதலிய பலவற்றையும் நாம் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

அறிஞர் இராமானுஜனர் 1919-ஆம் ஆண்டு பிப்பிரவரி 27-ஆம் நாள் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டு மார்ச்சு மாதம் 27-ஆம் நாள் பம்பாய் நகரை அடைந்தார். அவர் புறப்படும்போது நல்ல நிலையிலேயே இருந்தார். ஆனால் அவர் பம்பாய் நகரை வந்து அடைவதற்குள் அவர் உடல் நலம் பெரிதும் குன்றி விட்டது. ஏப்ரில் மாதம் 2-ஆம் நாள் அவர் சென்னையை வந்து அடையும்போது மிக்க ஆபத்தான நிலைமையிலேயே இருந்தார்.

## 12. தமிழர் தவக்குறை

இங்கிலாந்திலே அறிஞர் இராமானுஜனர் அடைந்த பெருமதிப்பினைப் பத்திரிகைகளில் கண்டு களிப்புற்றிருந்த அறிஞர் பலரும் அவரை நேரில்கண்டு அளவளாவப் பேராவல் கொண்டிருந்தனர். ஆனால் அவர்தம் எண்ணமெல்லாம் ஏமாற்றமாய் முடிந்தது. அறிஞர் இராமானுஜனர் பேசுதற்கும் இயலாத நிலையில் இருந்தார். போதிய அளவுககுமேல் தடித்திருந்த அவரது உடலம் பெரிதும் இளைத்திருந்தது. வதனம் வாடிக் கிடந்தது. ஒளி வாய்ந்த அவர்தம் விழிகள் மட்டும் அப்போது முன்னினும் விளக்கமுற்றுத் தோன்றின. அவர் அப்போதும் கணித ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருந்தனர்.

தமிழ்நாட்டுப் பொக்கிஷம், தமிழர் வாழ்வுக்கு விளக்கந்தர வந்த தவமணி நெடுங்காலம் நிலைத்திருக்க வேண்டுமென அன்பர் பலரும் சூழ்மி ஆவன பலவும் புரிந்தனர். அவர்தம் அருமை பெருமைகளைச் சிறிதும் அறியாதிருந்த பலரும அப்போதுதான் ஒரு சிறிதேனும் உணர்ந்து உள்ளம் துடிக்கலாயினர். அறிஞர் இராமானுஜனர் மட்டும் தம் உடல்நிலையைக் குறிதத கவலை ஒரு சிறிதும் இன்றித் தம் கணிதத் தொண்டிலேயே கருத்தைச் செலுத்திவந்தனர்.

அவர் சென்னையிலே மூன்று மாதம் தங்கியிருந்தார்; பிறகு இரண்டு மாதம் காவேரி நதிக்கரையில் உள்ள கொடுமுடியில் தங்கினர்; செப்டம்பர் மாதம் 3-ஆம் நாள் குபகோணம் சென்றார். இதற்குள் அவர்-தம் உடலம் பெரிதும் மெலிந்துவிட்டது. மருத்துவத்திற்குச் சென்னையே சிறந்ததென்று எண்ணிய அவர்-தம் உறவினர் 1920-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அவரைச் சென்னைக்கு அழைத்து வந்தனர்.

சென்னையிலே சேத்துப்பட்டு என்னும் ஊரில் உள்ள ஒரு மாளிகையிலே அவர் தங்கியிருந்தனர்.

சில செல்வர்களின் முயற்சியால் சிறந்த மருத்துவ முறைகளையெல்லாம் கையாண்டு பார்த்தனர். அறிஞர் இராமானுஜரோ மருந்தினை அறவே வெறுத்தார்; கணித ஆராய்ச்சியிலேயே காலத்தைக் கழித்தார். 1920-ஆம் ஆண்டு ஜனவரி 12-ஆம் நாள் ஹார்டி துரைமகனுக்கு அவர் ஒரு கடிதம் எழுதினார். எதைக் குறித்து? தம் உடல் நலம் குறித்தன்று. அதைக் குறித்து அக்கடிதத்திலே அவர் ஒரு வரியும் எழுதவில்லை. தாம் அப்போது புதிதாகக் கண்டறிந்த ஒரு கணித முறையினைக் குறித்தே எழுதினார். அக்கணித முறையினையும் அக்கடிதத்தோடு எழுதி அனுப்பினார். அதன் பின்னரும் அவர் அவ்வாராய்ச்சியிலேயே மூழ்கிக் கிடந்தார். கடைசியில் 1920—ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 26-ஆம் நாள் கணித அறிஞர் ஸ்ரீநிவாச இராமானுஜனார் தமிழரின தவக்குறையால் தரணி நீத்தனர்.

அறிஞர் இராமானுஜனார் இறந்தபோது அவருக்கு வயது முப்பத்திரண்டே. இதனை எழுதும் காலத்தே அவர் இருப்பதாக இருந்தாலும் அவருக்கு வயது ஐம்பதெட்டுக்குக் குறைவாகவே இருக்கும். இதற்கு மேலும் அவர் பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கலாம்! ஆ! அவ்விதம் அவர் இருந்திருப்பாராயின், கணித உலகிலே மேலும் என்னென்ன புதுமைகளை அவர் கண்டறிந்திருப்பாரோ; அவரால் மேலும் அடையக்கூடிய பெருமைகளை அடைதற்குத் தமிழர்கள் கொடுத்து வைக்கவில்லை.

## 13. இராமானுஜரின் கணித அறிவின் சிறப்பு

அவர் இறக்கும்போது வயது முதிர்ந்த அன்னையையும், வயதில் இளைய மனைவியையும், ஓர் இளைய உடன்பிறப்பாளனையும் விட்டுச்சென்றார். அவர்தம் பெயரைச் சொல்லிக்கொண்டு வாழுதற்கு ஒரு குழந்தை

யேனும் இல்லை. எனினும் அரிய கணித ஆராய்ச்சிக் கட்டுரைகளாகிய பல குழந்தைகள் இருக்கின்றன.

அவர்தம் கட்டுரைகள் நூல்வடிவிலே வெளிவந்துள்ளன. அவர் தம் கையெழுத்துப் பிரதிகள் இங்கிலாந்திலேயும் நம் சென்னையிலேயும் பொன்னேபோல் போற்றப்பட்டு வருகின்றன. அவர்தம் கணித ஆராய்ச்சிகளில் பல எவர்க்கும் விளங்கவேயில்லை. ஒரு சில அரைகுறையாகவும் இருக்கின்றன. நீங்கள் பெரியோர்களானல் அவைகளைப் படித்துப் பார்த்துப் பூர்த்தி செய்ய முயலுங்கள்.

அவர்தம் கணித ஆராய்ச்சிகள் இத்தன்மையன என்பதை உங்களுக்கு விளக்கிக் கூற இயலாது; கூறினும் விளங்காது. இதற்கு எடுத்துக்காட்டாக ஒன்று கூறுகின்றேன். இராமானுஜனர் சென்னையிலே இருந்தபோது அறிஞர் ஹார்டி அவர்கட்குப் பல கடிதங்களும் கணித ஆராய்ச்சிகளும் எழுதி அனுப்பினர் அல்லவா? அவைகளுள் ஒன்றின் சுருக்கம் வருமாறு :

"அறிஞரே, 1, 2, 3, 4 இவைகளை முறையே நெடுகக் கூட்டிக்கொண்டே போனல் முடிவில் $\frac{1}{12}$ என்பதே வரும். இவ்விதம் சொன்ன என்னை நீங்கள் உடனே பயித்தியர் இருக்கும் மருத்துவ நிலையத்துக்கே அனுப்ப விழைவீர்கள். என் எண்ணத்தை விளக்கித் தெரிவித்தால் நீங்கள் பெரும்பாலும் உடன் படுவீர்கள் என்றே எண்ணுகின்றேன்." இது அந்த ஒரு கடிதத்தில் எழுதிய பல கணிதங்களுள் ஒன்று.

அத்தகைய அறிஞர் மறைந்த இந்தத் தமிழ் நாட்டிலே மேலும் பல கணித அறிஞர்களும் பிற அறிஞர்களும் தோன்றுவார்களாக.

# 14. வேண்டுகோள்

தமிழ்நாட்டு மாணவ மாணவிகளே,

நீங்கள் இதுபோழ்து மூன்று அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகளை ஒருவாறு உணர்ந்துள்ளீர்கள். இந்தியர்கள் கவிகள் கட்டுதலிலும், காவியம் இயற்றுதலிலும், நீதி உரைத்தலிலும், நிடலனைத் தொழுதலிலும் இவைபோன்ற பிறவற்றிலுமே சிறந்தவர்கள் என எண்ணியிருந்த அயல்நாட்டினருக்கு இந்தியர் பூதநூற் புலமையிலும், வேதி நூல் உணர்ச்சியிலும், கணித நூல் அறிவிலும் விஞ்சியவர்களே என்பதை இம் மூவரும் நிலை நாட்டிச் சென்றனர். அன்றியும் அறிவு ஒருவர் பங்கன்று; உழைத்தோர் அனைவரும் உயர்வு பெறுவர்; முயற்சியால் அனைவரும் முன்னேற்றமுறலாம் என்பதையும் இவர்கள் ஒவ்வொரு வகையிலும் விளக்கிக் காட்டியுள்ளனர்.

இவர்கள் தோன்றிய இடத்திலே பிறந்த நீங்கள், இவர்கள் வாழ்ந்த நாட்டிலே வளரும் நீங்கள் இவர்கள் பெயரினை முன்னுக்குக் கொண்டு வருதல் வேண்டும் அல்லவா? எத்தகைய இடர்களையும முயற்சியால் வெல்லலாம். எத்தகைய ஏழையும் உழைப்பால் உயரலாம். கவலைகொண்டு உழைப்போருக்கே கடவுளும் உதவுவர். இவைகளை அறிதற்கு இம் மூவர் சரிதங்களே போதிய சான்றுகள் ஆகும்.

ஆதலின் மாணவ மாணவிகளே, நீங்கள் சோம்பியிருத்தல் தவிர்த்துச் சுகம்பெற முந்துங்கள். நம் நாட்டின் நிலைமையை நினைந்து ஆவன புரிய அவாவுங்கள்; உங்கள் பெற்றோரின் உள்ளங் களிக்கப் பேரும் புகழும் பெற முயலுங்கள்; கருத்தூன்றிக் கற்றுக் கலை வளர்ச்சி புரியுங்கள்; பொதுநலம் போற்றுங்கள்; புதுமை பல காணுங்கள்; பொற் குவையும் நற் குவையும் பெற்று நீடூழி வாழுங்கள்.

---

58780